23 Years
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
# விளம்பரம்
VLAMBARAM™
416-282-8059
E-mail: vlambaram@sympatico.ca
Web: www.vlambaram.com/www.tamilvanakkam.com
416-282-4978

FREE
Real Estate
Classes start every week
Call:416.321.6969

RBC Insurance
இளமையோ முதுமையோ காப்புறுதி ஒரு வழமை
உங்கள் அனைத்து காப்புறுதி தேவைகளிற்கும் கலந்து ஆலோசிக்க அழையுங்கள்
Jey Ahamparam P.F.P
Insurance Advisor
RBC காப்புறுதியில் விஷேடத்துவம் பெற்றவர்
(Specialized in RBC Insurance)
அத்துடன் உங்கள் வீட்டு வாகன காப்புறுதிகளிற்கும் (Home & Auto) உதவி வழங்கப்படும்.
Call: 416.301.1733

நதி 23 | பாலம் 11 | சமூக முன்னேற்றப்பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | JUNE 01, 2013

## ரொறொன்ரோ ஸ்ரார் நகர முதல்வர் றொப் போர்ட்

ரொறொன்ரோ ஸ்ரார் பத்திரிகை அதன் இரண்டு ஊடகவியாலாளர்கள் ரொறொன்ரோ நகரமுதல்வர் றொப் போர்ட் போதை வஸ்து விற்பவர்களுடன் சேர்ந்து போதை வஸ்து புகைக்கும் ஒளிப்பதிவு ஒன்றை பார்த்ததாக மே 17, 2013 இல் முன்பக்க செய்தியினை வெளியிட்டிருந்தது. அத்துடன் அதை றொப் போட் என உறுதிப்படுத்த முடியாது என்றும், அந்த ஒளிப்பதிவும் உண்மையானது தானா என தமக்கு தெரியாது என்றும் அதே செய்தியில் கூறியிருந்தது.

ரொறொன்ரோ நகரமுதல்வராக றொப் போர்ட் ஒக்ரோபர் 2010 கிட்டத்தட்ட பாதி நகரமக்களின் வாக்குகளை பெற்று தெரிவு செய்யப்பட்டார். அவர் முதல்வராக வந்ததில் இருந்து பல உடனடி நடவடிக்கைகளை எடுத்து ரொறொன்ரோ நகர சபையின் செலவீனங்களை குறைத்து நகர மக்கள் பலரின் செல்வாக்கை பெற்றார். அவர் வருடாந்த வாகன வரியான $60 டொலரை இரத்து செய்தார். நகரசபை வரவு செலவுத்திட்டத்தை மேலதிக வரி விதிப்புகளோ அல்லது வரி அதிகரிப்போ இல்லாது நிறைவேற்றினார். TTC பஸ் கட்டண உயர்வை தடுத்து நிறுத்தினார்.



ஆனால் அவர் நகரசபை ஊழியர்கள் தேவைக்கு அதிகமாக இருக்கிறார்கள் என கூறி அவர்களை வேலையில் இருந்து விலக ஊக்குவிப்பு பணம் வழங்கி (Buyout packages) 1000 இற்கு மேற்பட்டவர்களை வேலையிலிருந்து நீக்கினார். நகரசபை ஊழியர்களைவிட தனியார் நிறுவனங்கள் நகர குப்பை அள்ளும் தொழிலை சிறப்பாகவும் மலிவாகவும் செய்வார்கள் என்று ரொறொன்ரோவின் ஒரு பகுதி நகர குப்பை அள்ளும் தொழிலை தனியாரிடம் ஒப்படைத்தார். இவ்வாறான நடவடிக்கைகள் ரொறொன்ரோ மக்களிடம் நகரமுதல்வர் மீது மதிப்பை உயர்த்தினாலும் அவருக்கும் தொழிலாளர்களுக்கும் இடையேயான உறவில் விரிசலை ஏற்படுத்தியது.

லிபரல் கட்சி ஆதரவு ரொறொன்ரோ

தொடர்ச்சி 02ஆம் பக்கம்

## இலங்கைக்கு எதிரான கனடாவின் நிலை பற்றி நஷனல் போஸ்ற்

இலங்கைக்கான கனடாவின் தூதுவராக 1983 காலப்பகுதியில் இருந்தவர் Martin Collacott. தற்போது வன்கூவரில் வாழும் இவர் நஷனல் போஸ்ற் பத்திரிகையில் கனடாவின் தற்போதைய அரசின் இலங்கைக்கு எதிரான நிலை பற்றி மே 28, 2013 இல் பின்வருமாறு எழுதியுள்ளார்.

இலங்கை அரசின் மனித உரிமை மீறல் நடவடிக்கைகளை சுட்டிக்காட்டி கனடிய வெளிவிவகார அமைச்சர் யோன் பெயர்ட் தான் இலங்கையில் இவ்வருடம் நவம்பர் மாதம் நடைபெற உள்ள பொதுநலவாய தலைவர்களது மாநாட்டில் பங்கு பற்றமாட்டேன் எனக் கூறியுள்ளார். கனடாவை தவிர பொதுநலவாய அமைப்பில் உள்ள பிரிட்டன், அவுஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து உட்பட ஏனைய நாடுகளில் வேறு ஒரு நாடாவது தாங்கள் பொதுநலவாய தலைவர்களது மாநாட்டில் பங்குபற்றமாட்டோம் எனக் கூறவில்லை.

இலங்கை அரசின் மனித உரிமை மீறல் நடவடிக்கைகள் தற்போதும் தொடர்கின்றன என்பதில் எவருக்கும் எந்த ஒரு சந்தேகமும் இல்லை. இலங்கையின் உள்நாட்டுப் போர் மே 2009 இல் முடிவடைந்த பிற்பாடு இலங்கை அரசின் நடவடிக்கைகள் முன்னேற்றகரமாக இருக்கும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அவை முன்னேறாமல் தொடர்ந்தும் மோசமாகிக்கொண்டு வருகின்றன. தலைமை நீதிபதியின் பதவி பறிக்கப்பட்டது. பல ஊடகவியலாளர்கள் தொடர்ந்தும் கொலை செய்யப்படுகிறார்கள் அல்லது நாட்டைவிட்டு துரத்தப்படுகிறார்கள். இலங்கை அதிபர் மகிந்த ராஜபக்ஷ பற்றி எதிர்கருத்துக்கள் கூறமுடியாது.

தெற்கு ஆசியாவிற்கு வெளியில் இலங்கைத் தமிழர்கள் அதிகம் வாழ்வது கனடாவில். இவர்கள் இலங்கை அரசின் மனித உரிமை மீறல் நடவடிக்கைகளை கனடிய அரசின் கவனத்திற்கு கொண்டு வருகின்றர். இந்த நடவடிக்கைகளே கனடாவின் தற்போதைய பழமைவாதக்கட்சி அரசு இலங்கை அரசின் மீதான தனது அதிருப்தியை தெரிவிப்பதற்கான காரணமாகும்.

கனடாவில் உள்ள பெரும்பான்மையான தமிழர்கள் கனடாவிற்கு அகதியாக வந்தவர்கள். 2003 ஆம் ஆண்டு மட்டுமே கனடா ஏற்றுக்கொண்ட தமிழ் அகதிகளின் எண்ணிக்கை உலகில் உள்ள மற்ற நாடுகள் எல்லாமாக சேர்த்து ஏற்றுக்கொண்ட தமிழ் அகதிகளின் கூட்டுத்தொகையை விட அதிகமாகும். இத்தமிழ் அகதிகளில் சிலர் இலங்கையில் உள்ள விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் தொடர்பு வைத்திருந்தனர்.

இலங்கைத் தமிழர்களது வாக்குப்பலம் கனடிய கட்சிகளின் அரசியல் கொள்கைகளை பாதித்தது. தொடர்ந்து இருந்த லிபரல் அரசாங்கம் விடுதலை புலிகளை ஒரு பயங்கரவாத இயக்கம் என கனடாவில் தடைசெய்ய வேண்டும் என கனடிய உளவுத்துறை (CSIS) தொடர்ந்து வலியுறுத்தி வந்ததை

தொடர்ச்சி 02ஆம் பக்கம்

Raj A. Rasaratnam
Cell: 416-726-8055
Bus: 416-321-6969
HomeLife/GTA Realty Inc.

MORTGAGE
Best Rates wih Major Banks/Companies
Pasky Kanagasabapathy
Cell: 416 569 3099
Mortgage Agent #M12001098
Fax: 416-291 3601
pkanagasabapathy@orianafinancial.com
• Residential/Commercial needs
• Purchase/Refinancing/Renewal/Switch
• Bankruptcy/Challenged/Bad/New/no credit Business/Private loans
• Debt consolidation/Line of credit Self employed/ New Immigrants/Non Resident
Oriana Financial Group of Canada Ltd. Company#10214

வீடு வாங்கவும் விற்கவும்...
ரவி பரமு
Real Estate Broker
Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife/Today Realty Ltd.,
Brokerage*
31 Progress Ave. Suite 210, Toronto
*Independently owned and operated

Brand new - Leasing - Used
வாகனம் வாங்குமுன் 10 வருடம் அனுபவம் வாய்ந்த என்னை முதலில் அழையுங்கள்
416.451.0565
குமார் ஜெகசோதி
TOYOTA MARKVILLE
905.294.8100

துரித பணமாற்றுச் சேவை
• 55 ஆண்டுகள் வர்த்தகத்துறையில் முன்னோடிகள்
• கனடாவில் தொடர்ந்து 22 ஆண்டு சேவை
• தந்தையுடன் மைந்தர்களும் இணைந்த சேவை
MONEY TRANSFER
மு. காசிப்பிள்ளை சக புத்திரர்கள்
3228 Eglinton Ave. E. #3
416.267.8221
3351 Markham Rd. #109
416.321.8221

இப்பொழுது 2 இடங்களில்
DENTAL OFFICE
Dr. Iru Vijayanathan,
BDS, FAGD, MFDS RCPS (Glasg)
DENTAL SURGEON
☞ அவசரகால பல் வைத்திய சேவைகள்
☞ பல் அடைத்தல் (White Filling / Silver Filling)
☞ பல் பிடுங்குதல், ஞானப்பல் பிடுங்குதல்
☞ பல்வேர் அடைத்தல் (Root Canal) மூலம் பல் பிடுங்காமல் பாதுகாத்தல்
☞ முரசு கரைதல், முரசிலிருந்து இரத்தம் வடிதல், வாய்துர்நாற்றம் ஆகிய முரசு வியாதிகளுக்குச் சிகிச்சை
☞ சிறுவர்களுக்கான பற்சிகிச்சைகள்
3150 Eglinton Ave. E., Unit 5
Markham & Eglinton
Tel:416.264.3232
3351Markham Rd., #129
Markham & Steeles
Tel: 416.609.2022

# ரொறொன்ரோ...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

ஸ்ரார் பத்திரிகை, பழமைவாத கட்சி சார்பு நகர முதல்வரை பதவியில் இருந்து விலக்க வேண்டும் என்று பல முயற்சிகளை தொடர்ந்து எடுத்து வருகிறது. உறுதிப்படுத் தப்படாததும், கனடாவின் மிகப்பெரிய நகரம் ஒன்றின் நகர முதல்வர்மீது பாரிய குற்றம் சாட்டும் செய்தியை எவ்வாறு வெளியிடலாம் என பல ரொறொன்ரோ நகரமக்கள் கேள்வி எழுப்பியிருந்தனர். இதே செய்தியை Gawker எனப்படும் அமெரிக்க Gossip (கிசுகிசு செய்திகள்) இணையத்தளசெய்தி நிறுவனமும் வெளியிட்டிருந்தது. இவர்கள் தங்களுக்கு ஆதாரமாகக் கூறியது போதைவஸ்து விற்றவர்களைத் தான்.

இச்செய்தியை உடனடியாகவே மே 17, 2013 இல் றொப் போர்ட் மறுத்திருந்தாலும் (Absolutely not true) அது ரொறொன்ரோ ஸ்ரார் பத்திரிகைக்கு திருப்தி அளிக்கவில்லை. அவர்களும் அவர்களை தொடர்ந்து மற்றைய ஊடகங்களும் தங்களுக்கு இந்த செய்தி பற்றி ஒன்றும் தெரியாது, தாங்கள் இதைப் பார்க்க வில்லை, இச்செய்தியின் நம்பகத்தன்மை தமக்குத் தெரியாது என திரும்பத்திரும்ப கூறிக் கொண்டு றொப் போர்ட் மீது தொடர்ந்தும் குற்றம் சாட்டிக் கொண்டு இருந்தனர். Toronto Sun மற்றும் Talk Radio 640 போன்றவை தாங்கள் பார்க்காத மற்றும் உண்மை என உறுதிப்படுத்தப்படாத இந்தச் செய்தியை வெளியிட்டாலும் அவை நகர முதல்வருக்கு ஆதரவு தெரிவிக்கின்றன.

மீண்டும் மீண்டும் எந்த ஒரு ஆதாரமும் இல்லாமல் ரொறொன்ரோ ஸ்ரார் போன்ற சில நிறுவனங்கள் நகர முதல்வர் மீது குற்றம் சுமத்தியதால், சட்டத்தரணிகளின் ஆலோசனைப்படி றொப் போட் ஊடகங் களுக்கு எவ்வித அறிக்கையும் விடாமல் அமைதியாக நகர முதல்வர் வேலைகளை கவனித்து கொண்டு இருந்தார். மே 24, 2013 இல் மீண்டும் தன்மீது சுமத்தப்பட்ட பழியை மறுத்து நகர முதல்வர் ஊடகங்களுக்கு அறிக்கை விடுத்திருந்தார்.

இதேவேளை Gawker Gossip இணையத் தள செய்தி நிறுவனம் தாங்கள் பார்த்த ஒளிப்பதிவை வாங்க ரொறொன்ரோவைச் சேர்ந்த போதைவஸ்து விற்பவர்களுக்கு கொடுக்க $200,000 பணம் தேவையென அதை இணையத்தளம் மூலம் சேகரித்து வந்தனர். போதை வஸ்து விற்பவர்களுக்கு இரண்டு இலட்சம் டொலர் கொடுக்க பணம் சேகரித்தவர்களை காவல்துறை எவ்வாறு ஒன்றும் செய்யவில்லை என பல பொதுமக்கள் இணையதளத்தில் தமது அதிருப்தியையும் விசனத்தையும் வெளியிட்டிருந்தனர்.

தற்போது இரண்டு இலட்சத்திற்கு மேல் பணம் சேகரிக்கப்பட்டிருந்தும் Gawker இணையத்தள செய்தி நிறுவனத்தால் தமக்கு ஒளிப்பதிவை காட்டிய போதை வஸ்து விற்பவர்களை தொடர்பு கொள்ள முடியவில்லை. அவர்கள் தமது இணையத்தளம் மூலம் போதைவஸ்து விற்பவர்களுக்கு ஒரு மாத தவணை கொடுத்துள்ளனர். இந்த ஒரு மாதத்திற்குள் போதை வஸ்து விற்பவர்கள் Gawker இடம் றொப் போர்ட் போதைவஸ்து புகைபிடிக்கும் ஒளிப்பதிவை கொடுத்து விட்டு இரண்டு இலட்சம் டொலரையும் பெறலாம். இல்லா விட்டால் அவர்கள் இந்தப்பணத்தை ஒரு பொதுச்சேவை நிறுவனத்திடம் கையளித்து விடுவார்களாம்.

மக்களால் ஜனநாயக முறைப்படி தெரிவு செய்த ஒரு நகர முதல்வரை ஊடகம் ஒன்று தனது ஊடகத்துறையின் வல்லமையால் பதவி இறக்கப்பண்ண முடியுமா என நகரமுதல்வரை தெரிவு செய்த மக்கள் அவதானித்துக் கொண்டு இருக்கிறார்கள். வாளை விட பேனை பலம் பொருந்தியது. (The pen is mightier than The sword) என்ற பழமொழி இங்கு நினைவு கூரத்தக்கது.

நகரமுதல்வர் முன்னர் போதையில் வாகனம் செலுத்தி நகர் காவல்களிடம் தண்டம் பெற்றவர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. ரொறொன்ரோ ஸ்ரார் பத்திரிகை ரொறொன்ரோ மாநகரசபை தேர்தல் காலத்தில் றொப் போர்ட் Miami நகரில் 1999 இல் மதுபோதையில் வாகனம் செலுத்தி கைதுசெய்யப்பட்டு இருந்த விடயத்தை பிரசுரித்திருந்தது. 2006 இல் அப்போது கவுன்சிலராக இருந்த றொப் போர்ட் ரொறொன்ரோ மேப்பிள் லீவ்ஸ் கொக்கி விளையாட்டின் போது அதீத மதுபோதையில் இருந்ததால் பார்வையாளர் பகுதியில் இருந்து காவலர்களால் வெளியேற்றப்பட்டவர்.

இவ்வாறு றொப் போர்ட் போதைப்பழக்கம் உள்ளவராக இருந்தாலும் அது அவரது தொழிலை பாதித்ததாக உறுதிப்படுத்தப்படக் கூடிய சான்றுகள் எதுவும் வெளியிடப்படவில்லை. இதுவரை றொப் போர்ட்டின் மாநகரசபை ஊழியர்கள் ஐவர் விலகி அல்லது விலக்கப்பட்டுள்ளனர்.

நகரமுதல்வர் றொப் போர்ட் உறுதிப்படுத்தப் பட்ட குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு பதவி விலகாமல் ரொறொன்ரோ ஸ்ராரின் உறுதிப்படுத்தப்படாத மிரட்டல்கள் மூலம் பதவி விலக்கப்படுவாரானால் அது ஜனநாயகத்திற்கு இழுக்குச் சேர்க்கும் ஒரு நிகழ்வாக அமையும் என பலர் இணையத்தளத்தில் தமது கருத்துக்களை வெளியிட்டு வருகிறனர்.




# இலங்கைக்கு...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

தட்டிக் கழித்துக் கொண்டு இருந்தது. பிரிட்டன் மற்றும் அமெரிக்கா போன்ற நாடுகள் விடுதலைப் புலிகளை ஒரு பயங்கரவாத இயக்கம் என அறிவித்த பின்னரும் கூட முன்னைய லிபரல் அரசாங்கம் கனடாவில் விடுதலைப் புலிகளை தடை செய்ய மறுத்து வந்தது. இதனால் விடுதலைப் புலிகளால் கனடாவை தங்களுக்கு பணம் சேகரிப்பதற்கு ஒரு முக்கிய தளமாக பாவிக்க முடிந்தது. இந்நிலை இலங்கையில் போர் தொடர்வதற்கும் அங்கு அழிவுகள் தொடர்வதற்கும் ஒரு காரணமாக இருந்தது.

2006 இல் பழமைவாதக்கட்சி கனடிய அரசாங்கத்தை அமைத்தவுடன் காலத்தை வீணாக்காமல் உடனடியாகவே விடுதலை புலிகளை பயங்கரவாத இயக்கம் எனக்கூறி கனடாவில் தடைசெய்தார்கள். கனடிய தமிழர்கள் தொடர்ந்தும் லிபரல் கட்சிக்கு ஆதரவு வழங்கியதை காணக்கூடியதாக இருந்தது. 2006 இல் நடைபெற்ற லிபரல் கட்சித் தலைவர் தெரிவில் ‘விடுதலைப் புலிகளின் மீதான தடையை கனடாவில் நீக்குதல்’ என்ற கோரிக்கை முக்கிய இடத்தை வகித்தது.



பல காலமாக கனடா போன்ற சில நாடுகள் விடுதலைப்புலிகளின் நடவடிக்கைகளை தடைசெய்யாது இருந்தது. இது இலங்கையில் நடைபெற்ற போரை நீடிக்க செய்தது மட்டுமல்லாமல் இலங்கையில் நடைபெற்ற மனித பேரழிவுகளுக்கும் காரணமாகவும் இருந்தது. இதனால் இலங்கை அரசிற்கு அதன் போரின் பிற்கால நடவடிக்கைகளை பற்றி அறிவுரை கூறும் தார்மீக உரிமை கனடாவிற்கு இல்லை.

இறுதிப் போரின்போது நடந்த மனிதப் பேரழிவு பற்றி சர்வதேச விசாரணை இலங்கை இராணுவத்தின் மீது நடத்த வேண்டும் என்று இலங்கை அரசை கேட்பதை இலங்கை ஏற்றுக்கொள்ளாத திற்கு காரணம் உண்டு. இறுதிப் போரின் போது நடந்த மனித பேரழிவுக்கு விடுதலைப்புலிகளும் பொதுமக்களை மனித கேடயங்களாக பாவித்ததின் மூலம் இலங்கை இராணுவத்தை போல் சரிசமமாக பங்கு வகிக்கிறார்கள். ஆனால் அவர்கள் செய்த பங்கிற்கு பதில் கூறவோ விசாரிக்கவோ விடுதலைப் புலிகள் பக்கத்தில் எந்த ஒரு தலைவரும் இல்லை. அதனால் இலங்கை இராணுவத்தின் மீது மட்டுமே விசாரணை தேவை என்று கூறுவது ஒரு பக்க விசாரணை (One - sided investi- gation) என்றும் அது நியாயமான கோரிக்கை இல்லை (Not being treated fairly) எனவும் இலங்கை அரசு கருதுகிறது.

கனடாவை போலவே பிரிட்டன், அவுஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து போன்ற நாடுகள் இலங்கை அரசின் தற்போதைய மனித உரிமை மீறல் நடவடிக்கைகளில் மிகவும் கரிசனை கொண்டுள்ளன. ஆனால் கனடிய அரசு மட்டுமே பொதுநலவாய தலைவர்களது மாநாட்டை பகிஸ்கரிக்கிறது. இது கனடிய தமிழ்வாக்காளர்களது செல்வாக்கை பழமை வாத கட்சியின் மீது திருப்புவதற்கே அல்லா மல் வேறு ஒரு காரணத்திற்கும் அல்ல. இவ்வாறு Martin Collacott ‘நஷனல் போஸ்ற்’ பத்திரிகையில் எழுதியுள்ளார்.

விளம்பரம்
VLAMBARAM

பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
பத்திரிகை ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
ஊடகப்பொறுப்பாளர்: விஜய்பாலன்
தட்டச்சு: கலா
அலுவலக முகாமையாளர்: நிலானி
பதிப்பு: Can Media Publishing Inc.



Vlambaram Publications Inc.
GTA SQUARE, 5215 FINCH AVE. E.,
#201, TORONTO, ON M1S 0C2, CANADA
TEL: 416-282-8059 FAX: 416-282-4978
e-mail: Vlambaram@sympatico.ca
Web: www.vlambaram.com/www. tamilvanakkam.com

விளம்பரம் பத்திரிகை 'விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங்' ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள். **பதிப்புரிமை:** 2004 விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

## வாசகர் எண்ணங்கள்

விளம்பரம்™ ஐ வாசிப்பவர்கள் தங்கள் எண்ணக்கருவை தெரியப்படுத்துமாறு கேட்டுக் கொள்கின்றோம். ஆக்கபூர்வமான உங்கள் கருத்தை இப்பகுதியில் வெளியிடுவோம். உங்கள் அபிப்பிராயங்களைக் கடிதம் மூலம், தொலைநகல் மூலம் அல்லது மின்னஞ்சல் மூலம் அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம்.

1. Vlambaram Publications Inc. , 5215 Finch Ave. E. #201, Toronto, ON M1S 0C2
2. Tel.: 416.282.8059
3. Fax: 416.282.4978
4. email: vlambaram@sympatico.ca
5. web: www.vlambaram.com
www.tamilvanakkam.com



Dr. Bhaminy Mohendran
Dentist
7595 Markham Rd, #4
(Markham & 14th Ave.)
905 201 8900
1200 Markham Rd, #119
(Markham & Ellesmere)
416 289 7187
Opened 7 days a week

# கனடா ஒரு கண்ணோட்டம்

### கடந்த இதழ் தொடர்ச்சி

## வடபுலம்

கனடாவின் வடபுலத்தில் யூக்கன், வடமேல் ஆள்புலங்கள், நுனவுற் என்பன அடங்கும். அவை ஒருசேர கனடாவின் மூன்றிலொரு பகுதிக்கு மேற்பட்ட நிலப்பரப்பை உள்ளடக்கியுள்ளன. ஆள்புலங்களுக்கு கனடிய அரசாங்கமே பொறுப்பு. எனினும் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகளைக் கொண்ட சட்டப் பேரவையே அநேக விடயங்களைக் குறித்து முடிவெடுக்கிறது. வடமேற் புலங்களில் வாழும் மக்கள் கிழக்குப் புலத்தை நுனவுற் என்னும் ஒரு புதிய தனி ஆள்புலமாக அமைப்பதற்கு தமது வாக்கை அளித்தார்கள். நுனவுற் 1999 ஏப்பிறில் 1ம் திகதி அமைக்கப்பட்டது.

## மக்கள்

வடபுலத்தில் பழங்குடி மக்கள் ஆயிரக் கணக்கான ஆண்டுகளாக வாழ்ந்து வந்துள்ளார்கள். நிலத்துடன் அவர்கள் தனி உறவு பூண்டுள்ளார்கள். கொடிய வடபுலத்துக் காலநிலையில் தமது திறமையைப் பயன்படுத்தி வேட்டையாடி, மீன் பிடித்து, விலங்குகளையும் பறவைகளையும் கவர்ந்து வாழ்ந்து வருகிறார்கள்.

கனடாவின் நிலப்பரப்பில் மூன்றிலொரு பங்குக்கு மேற்பட்ட பகுதியை யூக்கன், வடமேல் ஆள்புலங்கள், நுனவுற் மூன்றும் உள்ளடக்கியுள்ளன. எனினும் இங்கு 1,00,000 மக்களே வாழ்ந்து வருகிறார்கள்.

வடபுலத்தில் வாழும் மக்களுள் ஏறத்தாழ அரைவாசிப் பேர் பழங்குடி மக்களே. ஆள்புல அரசாங்கங்கள் பழங்குடி மொழிகள் பல வற்றுக்கு சட்ட அங்கீகாரம் அளித்துள்ளன.

அண்மைக் காலத்தில் வடபுலம் அடைந்துவரும் விருத்திக்கு காணி உரித்து இணக்கங்களும் தன்னாட்சி உடன்படிக்கைகளும் பெருமளவு உதவியுள்ளன. இத்தகைய உடன்படிக்கைகள் மூலமாக பழங்குடி மக்கள் தமது காணியைத் தாமே கட்டியாண்டு, தமது அலுவல்களைத் தாமே தீர்மானிக்கும் வல்லமையை ஈட்டியுள்ளார்கள்.

## பொருள்வளம்

ஐரோப்பியர் முதன்முதல் 1600 பிற்கூறில் வடபுலம் வந்து மென்மயிர்த்தோல் வியாபாரத்தில் ஈடுபட்டார்கள். ஹட்சன் பே கம்பனி 300 ஆண்டுகளாக வடபுலங்களையும் மென்மயிர்த்தோல் வியாபாரத்தையும் கட்டியாண்டு வந்தது. பழங்குடி மக்கள் பலர் உட்பட்ட வடபுலத்து மக்கள் சிலர் இன்றும் வேட்டையாடி, மீன் பிடித்து, விலங்குகளையும் பறவைகளையும் கவர்ந்து, சம்பாதித்து, உண்டு வாழ்ந்து வருகிறார்கள்.

வடபுலத்துப் பொருள்வளத்துள் சுரங்கத்துறை, எண்ணெய், வாயு முதலியவை முக்கியமானவை. 1800 பிற்கூறில் இடம்பெற்ற தங்க வேட்டையின் பொழுது ஆயிரக் கணக்கான சுரங்கத் தொழிலாளிகள் முதன்முதல் யூக்கனுக்கு வந்தார்கள். இன்று இப்புலங்களில் தங்க, ஈய, வைர, துத்தநாகச் சுரங்கங்கள் காணப்படுகின்றன. எண்ணெய், வாயுப் படிவுகள் விருத்திசெய்யப்பட்டு வருகின்றன. மேன்மேலும் இத்தகைய பெறுமதி வாய்ந்த மூலவளங்களை நாடிப் பல்வேறு தரப்பினரும் தொடர்ந்து ஆய்விட்டு வருகிறார்கள்.

இனுவிற் இனத்தவரின் அச்சுருவங்களும் சவர்க்காரக் கல்லில் செதுக்கிய உருவங்களும் கனடா உட்பட உலகம் முழுவதும் விற்கப்படுகின்றன. யூக்கன், வடமேல் ஆள்புலங்கள், நுனவுற் மூன்றிலும் வாழும் பழங்குடி மக்கள் பலர் கூட்டுறவுத் தாபனங்களை அமைத்து, பழங்குடிக் கலைகளிலும் கைவினைகளிலும் ஈடுபட்டு வருகிறார்கள். சுற்றுலாத் துறையும் வளர்ந்து வருகிறது.



வடபுலத்தில் பொருள்வள விருத்தி வரவேற்கத் தக்கதே. ஆனால் ஆக்டிக் வலய தாவர, உயிரினங்களுக்கும், வடபுல மக்களின் பரம்பரை வாழ்க்கைப் பாங்கிற்கும் தீங்கு விளையா வண்ணம் பொருள்வள விருத்தியைக் கவனமாக நெறிப்படுத்த வேண்டும்.

## காலநிலை

வடபுலம் 'நள்ளிரவுப் பகல் நிலம்' எனப்படுவதுண்டு. கோடையின் உச்சக் கட்டத்தில் 24 மணித்தியாலங்களும் பகல் நீடிக்கக்கூடும். பனிக்காலத்தில் சூரியன் மறைந்துவிடும். மூன்று மாதங்கள் இருள் நீடிக்கும். வடபுலத்தில் பனிக்காலம் நீண்டது. குளிர் மிகுந்தது. கோடை குறுகியது. கோடையில் நிலம் பூத்துக் குலுங்கும்.

கனடாவில் யூக்கன் புலத்திலேயே ஆகக்கூடிய குளிர் (-63 பாகை செல்சியஸ்) பதிவு செய்யப்பட்டுள்ளது. வடபுலத்தில் பெரும் பகுதி பனி உறைந்த வெளி (tundra), அதாவது ஆக்டிக் வலய பனிப்பாறை வெளி ஆகும். இது குளிர் மிகுந்த ஆக்டிக் வலயம் என்பதால், இங்கு மரங்கள் இல்லை. மண் நிரந்தரமாய் உறைந்து கிடக்கிறது.

### மக்கள்தொகை (பருமட்டாக)

| | |
|---|---|
| நுனவுற் | 28,000 |
| வடமேல் ஆள்புலங்கள் | 41,000 |
| யூக்கன் ஆள்புலம் | 30,000 |
| வடபுலம் | 99,000 |

தொடரும்...

- மணி வேலுப்பிள்ளை

APPLEMORE AUTOMOTIVE
உட்புற, வெளிப்புற திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்
ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility
• Detailing
• Motor Shampoo
• Interior Shampoo
• Exterior Wash
• Waxing
• Repairs
• Safety Certification
• Overall Maintenance
• Under Coating
• Rust Proofing
416-285-4998
435 Midwest Road. Unit B5, Scarborough, ON. M1P 3A6
SPECIAL


# மதி'யினம்'




**சத்குரு அவர்களால் வரையப்பட்ட ஓவியம், ஜனவரி 2012**

சில வருடங்களுக்கு முன், ஸ்பந்தா ஹாலில், பாவ ஸ்பந்தனா வகுப்பு நடத்திக் கொண்டிருந்தேன். உச்ச தருணங்கள் ஒன்றில், பெண்மையின் தனித்தன்மைக்கு சாட்சியாக இருக்க நேர்ந்தது.

காற்றில் அதிதீவிரமாக பெண்மையின் தன்மை நிறைந்திருந்ததால் என் சக்தி, என் உடல் கூட ஒரு பெண் போல இருந்தது. இதுபோல் இருப்பது எனக்கு புதிதல்ல, ஆனால் அன்றைய தினம் இது பன்மடங்குப் பெருகி, மிக கம்பீரமாக நின்றது. நாம் அனைவரும் ஒரே மூலத்திலிருந்து தோன்றினாலும் பெண்மையின் அடிப்படையில் தான் எத்தனை வித்தியாசம்!

இந்த யதார்த்தம் அன்று பிரம்மாண்ட வடிவம் கொண்டது. அன்று பெண்மையின் சாரத்தை நான் முழுமையாகப் பருகினேன். நான் சாட்சியாக இருந்த இந்த நிகழ்வில் என் கவனத்தை நிறுத்தியபோது அது கவிதை யாய் வடிவம் பெற்றது.


இதோ அந்தக் கவிதை....

பெண்

நிலவின் நிழலாய் பேரானந்த நிகழ்வாய்
பிறந்திட்ட உயிர்களே
பகலில் சுடராய் திகழும் என்னுள் இருக்கும் சூரியன் மட்டும்
படைப்பு தந்த வரமாய் இல்லை உன் முன்னே
இரவின் மடியில் மடிந்து போனது சூரியனோ?
இருளின் குளிரில் கரைந்து போனது கதிரவனோ? நிலவே! உந்தன்
அருளின் அணைப்பில் நனைந்து போனது இந்த அகிலமன்றோ?
உருளும் பூமி உறங்கிடவே உன் கர்பத்தில் சுமந்தனையோ?
உயிருக்கெல்லாம் ஆதாரமாய்
உதயமான சூரியனே உயர்ந்தவனோ? அவனே
உன் குளிர் மடியில் குழந்தையென பிறந்தவனே!
கருத்துமில்லை காரணமுமில்லை
பித்து நிலை விளங்கவில்லை - எனினும் உன்
அன்புநிலை நம்பும் நிலைக் கொண்டான் - அந்த
படைத்தவனே உமக்கு பரிசாய் கொடுத்தான்!
உயிர் சுமக்க கருவறையும்
பால் சுரக்க நெஞ்சறையும்
பெண்மை மலரட்டும், பிரகாசமாய் ஒளிரட்டும்!
அவள் கருவறையின் கதகதப்பில்
உயிர் நனையும் பெரும்சுகத்தை
உலகம் உணரட்டும்!
ஆனந்தம் பரவட்டும்!

இன்று பெண்மையை இரண்டாம் தரத்திற்கு தள்ளிவிட்டிருப்பது நாம் படைப்பின் அழகை மொத்தமாக கொச்சைப்படுத்தி இருப்பதைத்தான் சுட்டிக் காட்டுகிறது. கடுமையான கலாச்சார மற்றும் சமய அணுகுமுறைகளே இதில் முக்கிய குற்றவாளிகள்.

அனைத்தையும் ஆள வேண்டும், மற்றவர்களைவிட சிறப்பாக இருக்க வேண்டும் என்னும் அற்பத்தனம்தான் ஆண்மை மேலானதென்ற மனப்பாங்கிற்கு காரணம். உடல் சார்ந்த விடயங்கள், பொருட்களே உயர்ந்ததென்ற எண்ணம்தான் பெண் தன்மையின் படுகொலைக்கு ஆணிவேராகிவிட்டது. நல்லவேளை, தேவை இருந்ததால் நாம் பெண்களைக் கொல்லவில்லை!



## சத்குரு வாசுதேவ்

மதம், நவீன அறிவியல், கார்ப்பரேட் கலாச்சாரம் - இவற்றிற்கு ஒரு ஒற்றுமை உண்டு. பெண் தன்மையின் பேரழிவிற்கு மிக முனைப்புடன் செயல்பட்டுக் கொண்டிருப்பதுதான் அது!

பெண்கள் சற்றே உயர் மட்டங்களில் செயல்புரிய தொழில்நுட்பம் உதவினாலும், அது ஆண் தன்மையின் களமாகவே உள்ளது துரதிஷ்டமானதே. வாழ்வதற்கு பொருள் தன்மையையும் தாண்டி ஏதோ ஒன்று இருக்கிறது. இதை அங்கீகரிக்கும்போது, பெண் தன்மை இந்த சமூகத்தில் தனக்கான இடத்தை அடையும்.

என்னால் இதைப் பற்றி முடிவில்லாமல் பேசிக் கொண்டே இருக்க முடியும். இந்த பாவ ஸ்பந்தனா நிகழ்ச்சி கூட ஆண்களுக்கு தனியாக, பெண்களுக்கு தனியாக நடத்தப்படுவதே சிறப்பாக இருக்கும். தற்சமயம் நடைமுறை சிக்கல்களினால், சில இடங்களில் மட்டும் இருபாலாரும் இணைந்து செய்யும் பாவ ஸ்பந்தனா நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன. இருப்பினும் இவற்றை தனியாக நடத்துவதன் மூலமே உச்சபட்ச பலன்களைப் பெற முடியும்.

இதனை நீங்கள் சரியாக புரிந்து கொள்ள வேண்டுமென்றால், சம்யமா நிகழ்ச்சியில் பெண் தன்மைக்கோ ஆண் தன்மைக்கோ இடமே கிடையாது. ஆனால் பாவ ஸ்பந்தனா நிகழ்ச்சி, ஒரு குறிப்பிட்ட திசை நோக்கி ஒருவரை செம்மைப்படுத்த அற்புத வாய்ப்பு!

உலகத்திற்கும், எனக்கும் செய்திருக்கும் செயல்களுக்காக, அந்த முழு மதியின் படைப்புகளுக்கு நான் தலை வணங்குகிறேன்!

Contact: 1 866 424 ISHA (4742)
Email: toronto@ishafoundation.org
Website: www.ishafoundation.org /
**Inner Engineering Program is now online with Sadhguru**:
www.innerengineering.org






# மோட்கேஜ் கிளினிக்

கடன்களை ஒன்றுபடுத்தி
எல்லா பேமேன்டையும்
ஒரே பேமேண்டாக மாற்ற
வேண்டுமா?

லைன் ஒப் கிரெடிட் எடுக்க
வேண்டுமா?
ரீபைனான்ஸ் செய்ய
வேண்டுமா?

2 வது மற்றும்
3வது மோட்கேஜ் தேவையா?
பாங்க்ரப்சி செய்தோருக்கான
மோட்கேஜ் தேவையா?

உரிய நேரத்தில் மோட்கேஜ்
தவணைப் பணத்தினை
செலுத்தமுடியாது பவர் ஒப்
சேலினை எதிர்நோக்குகிறீர்களா?



தயா (PK) கந்தையா BAS, ABR, AMP
Principal Broker / President
FSCO Lic # M 08001083
**Cell : 416-716-8707**



ஜெ (Jey) இராசதுரை MBA, BBA (Hon), AMP
Mortgage Development Manager / Agent
FSCO Lic # M 08001428
**Cell : 416-624-4843**



உதயன் (Utha) மாணிக்கவாசகர்
Mortgage Agent
FSCO Lic # M 11001140
**Cell : 647-282-8842**



நிஷாந்தன் சுவர்ணராஜா
Mortgage Agent
FSCO Lic # M 10001838
**Cell : 647-385-2710**

இலவச ஆலோசனைக்கு
தயக்கமின்றி
அழையுங்கள்



சுதேசன் பத்மநாதன் M.Com, B.Com
Mortgage Agent
FSCO Lic # M 12001741
**Cell : 647-861-8240**

## வோக் இன் - சனிக்கிழமை 9.00 - 5.00

CENTUM™
Rapid Mortgages Inc.
LIC # 10156

80 Nashdene Road, Suite # 211
Toronto, ON. M1V 5E4.
416-644-3555

rapid realty inc.

# விளையாட்டுத் தகவல்கள் 349

## போலார்ட் அதிரடியில் மும்பை சாம்பியன்!

கொல்கட்டாவில் நடைபெற்ற ஐபிஎல் கிரிக்கெட் இறுதிப் போட்டியில் மும்பை இந்தியன்ஸ் அணி தோனி தலைமை சென்னை சூப்பர் கிங்ஸ் அணியை வீழ்த்தி முதன் முறையாக சாம்பியன் பட்டம் வென்றது. முதலில் பேட் செய்த மும்பை இந்தியன்ஸ் போலார்டின் 32 பந்துகள் 60 ரன்கள் அதிரடியின் மூலம் 20 ஓவர்களில் 9 விக்கெட்டுகள் இழப்பிற்கு 148 ரன்கள் எடுக்க இலக்கை துரத்திய சென்னை சூப்பர் கிங்ஸ் தோனியின் 45 பந்துகள் 63 ரன்களுடன் 125 ரன்கள் மட்டுமே எடுத்து தோல்வியை தழுவியது. முதலில் பேட் செய்த போது மும்பை இந்தியன்ஸ் 10 ஓவர்களில் 52/4 என்று தட்டுத் தடுமாறியது. ஸ்மித், தாரே, ரோகித், தினேஷ் கார்த்திக் பெவிலியன் திரும்பினர். ஆல்பி மோர்கெல் 2 விக்கெட்டுகளைக் கைப்பற்ற டிவைன் ஸ்மித்தை மோகித் சர்மா கழற்றினார். பவுண்டரி அடித்து கணக்கைத் துவங்கிய போலார்ட் பிறகு அஷ்வினை சிக்சருக்குத் தூக்கினார். அம்பாட்டி ராயுடு 37 ரன்கள் எடுத்தார். பிராவோ ஓவரில் 3 பவுண்டரிகளை விளாசிய ஹர்பஜன் (14) அதே ஓவரில் அவுட் ஆனார். விக்கெட்டுகள் சரிந்தாலும் போலார்டு அதிரடியை நிறுத்தவில்லை. பிராவோ வீசிய கடைசி ஓவரில் மிகப்பெரிய சிக்சரை அடித்து அரைசதம் கண்டார் போலார்டு. மும்பை 148/9 உடன் முடிந்தது.

தொடர்ந்து ஆடிய சென்னை சூப்பர் கிங்ஸ் அணியை மலிங்கா, மற்றும் மிட்செல் ஜோன்சன் தங்களது யார்க்கர் மற்றும் பவுன்ஸ் பந்து ஆகியவற்றின் மூலம் கடுமையாக திணறடித்தனர். குறிப்பாக ரெய்னா, வந்து நின்றவுடன் ஒரு பந்தை எகிற விட ஷாட் லெக் நிறுத்திவைக்கப்பட பந்து அங்கு சென்றது. ரெய்னா திருதிருவென்று விழித்து தேர்ட்மேன் திசையைப் பார்த்தார். பந்து எங்கு சென்றது என்றே தெரியவில்லை. மலிங்கா அபாரமாக வீசி முதல் ஓவரின் 4வது பந்தில் ஹசியை பவுல்டு செய்தார். ரெய்னாவை அடுத்த பந்தே காலி செய்தார். பத்ரிநாத் ஹேட்ரிக்கைத் தடுத்தார். பிறகு ஜான்சனின் பந்துக்கு இரையாக சென்னை அணி 3 ரன்களுக்கு 3 விக்கெட்டுகள் என்று சொதப்பலோ சொதப்பல். பிராவோ 15, விஜய் 18 ரன்களில் வெளியேறினர்.

தோனி 36/5 எனும்போது வந்திறங்கினார். விஜயும் ஜான்சனின் பவுன்சருக்கு வெளியேறினார். தோனிக்கு ஆளில்லாமல் போய்விட்டது. மோர்கெல், ஓஜா பந்தில் வெளியேறினார். தோனியின் இன்னிங்ஸ் அச்சுறுத்தலாக இல்லை. ஏற்கனவே தோற்றுவிட்ட மேட்சில் அவர் 63 ரன்களை எடுத்து நாட் அவுட்டாக இருந்தார். ஆட்ட நாயகனாக கெய்ரன் போலார்ட் தேர்வு செய்யப்பட்டார். தொடரின் நாயகனாக



இரண்டாவது முறையாக ஷேன் வாட்சன் தேர்வு செய்யப்பட்டார். மும்பை இந்தியன்ஸ் சாம்பியன் ஆனது. சச்சின் டெண்டுல்கர் ஐபிஎல் கிரிக்கெட்டிற்கு குட் பை கூறிவிட்டார்.

## சாம்பியன்ஸ் லீக் பட்டத்தை வென்றது பேயர்ன் முனிக்


ஐரோப்பிய சாம்பியன்ஸ் லீக் கால்பந்து தொடரில் பேயர்ன் முனிக் அணி சாம்பியன் பட்டம் வென்றது. பிரிட்டன் தலைநகர் லண்டனில் நடந்த சாம்பியன்ஸ் லீக் கால்பந்து தொடரின் இறுதிச்சுற்றில் பொருசியா டார்ட்மண்ட், பேயர்ன் முனிக் அணிகள் மோதின. இதன் முதல் பாதியில் இரு அணிகளும் கோல் எதுவும் அடிக்கவில்லை. விறுவிறுப்பான இரண்டாவது பாதியில் எழுச்சி கண்ட பேயர்ன் முனிக் அணியின் மரியோ மான்ட்சுகிக் 60வது நிமிடத்தில் ஒரு கோல் அடித்தார். இதற்கு பதிலடியாக பொருசியா டார்ட்மண்ட் அணி யின் கன்டோகன் 68வது நிமிடத்தில் கிடைத்த பெனால்டி வாய்ப்பை கோலாக மாற்றி அசத்தினார். மீண்டும் தனது ஆதிக்கத்தை தொடங்கிய பேயர்ன் முனிக் அணிக்கு 89வது நிமிடத்தில் அர்ஜென் ராபின் ஒரு கோல் அடித்து வெற்றியை உறுதி செய்தார். இதற்கு பொருசியா டார்ட்மண்ட் அணியால் பதிலடி கொடுக்க முடியவில்லை. முடிவில், பேயர்ன் முனிக் அணி 2-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று சாம்பியன் பட்டத்தை தட்டிச் சென்றது.

## ஐபிஎல் இறுதிப் போட்டியில் மட்டும் ரூ.2500 கோடிக்கு சூதாட்டம்!

மும்பை இந்தியன்ஸ் சாம்பியன் பட்டம் வென்ற சென்னை சூப்பர் கிங்ஸ் அணிக்கு எதிரான ஐபிஎல் கிரிக்கெட் இறுதிப் போட்டியில் மட்டும் ரூ.2500 கோடிக்கு சூதாட்டம் நடைபெற்றதாக திடுக்கிடும் தகவல்கள் வெளியாகியுள்ளது. அனைத்து மானிலங்களிலும் கன்னாபின்னாவென்று சூதாட்டத் தரகர்கள் கைது வேட்டை நடந்து கொண்டிருக்கும் வேளையிலும் இறுதிப் போட்டியிலும் சூதாட்டம் நடைபெற்றுள்ளது தெரியவந்துள்ளதால் போலீசார் அதிர்ச்சி யடைந்துள்ளனர். என்ன நடந்தது?


இறுதிப்போட்டி தொடங்கியதும் தொலைபேசி லைன்கள் அனைத்தும் திறந்திருந்தன. போட்டி தொடங்கியதும் மும்பை இந்தியன்ஸ் அணிக்கு சாதகமாக பந்தயம் தொடங்கியது. அப்போது, மும்பை இந்தியன்ஸ் வெற்றி பெற்றால், அதன் மீது ஒரு ரூபாய் பந்தயம் கட்டுபவருக்கு ஒரு ரூபாய் 75 காசு வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. ஆனால் முதல் விக்கெட் விழுந்ததும், சென்னை சூப்பர் கிங்சுக்கு ஆதரவாக பந்தயம் கட்டப்பட்டது. அதாவது சென்னை சூப்பர் கிங்ஸ் வென்றால், ஒரு ரூபாய்க்கு, ஒரு ரூபாய் 85 காசு வழங்கப்படும் என்ற அடிப்படையில் பணம் வசூலிக்கப்பட்டது. ஆனால் மும்பை இந்தியன்ஸ் இரண்டாவது விக்கெட்டை இழந்ததும், அந்த அணியின் மீதான பரிசு 60 காசாகவும், மூன்றாவது விக்கெட்டை இழந்ததும் பரிசு, 40 காசாகவும் குறைக்கப்பட்டது.

சென்னை சூப்பர் கிங்ஸ் பேட்டிங்கை தொடங்கிய போது அந்த அணிக்கு 75 காசு நிர்ணயிக்கப்பட்டது. ஆனால் சென்னை அடுத்தடுத்து விக்கெட்டுகளை இழந்ததால், சென்னை வென்றால் 75 காசு என்றும், மும்பை வென்றால் பரிசு 36 காசு என்றும் மாற்றப்பட்டது. அப்போது பலரும் அதிக காசுக்கு ஆசைப்பட்டு சென்னை அணி மீது பணம் கட்டினார்கள். ஆனால் இறுதியில் மும்பை அணி வென்றதால் சென்னை அணி மீது பணம் கட்டிய அனைவரும் தங்கள் பணத்தை பறிகொடுத்தனர். சூதாட்ட தரகர்கள் பணத்தை கோடி, கோடியாக அள்ளிவிட்டனர். ஐபிஎல் ஜுரம் முடிந்து விட்டது. சூதாட்ட ஜுரம் தொடங்கியுள்ளது. இது இதோடு முடியுமா அல்லது இங்கிலாந்தில் நடைபெறும் முக்கியமான ஐசிசி சாம்பியன் டிராபி கிரிக்கட் போட்டிகளிலும் தொடருமா என்பதை ஐசிசி கவலையோடு கவனித்து வருவதாக செய்தி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.



எஸ். கணேஷ்


TUTORING
By Qualified & Experienced Tutors
KEEN TUTORING CENTRE
GRADE 6 - 12, IB, MCAT, UNIVERSITY 1st & 2nd YEAR
➢ SCIENCE, PHYSICS, CHEMISTRY, BIOLOGY
➢ MATH, FUNCTIONS, CALCULUS & VECTORS
➢ DATA MGT, ENGLISH & FRENCH
Call (647) 341 3975 / (647) 869 3974

திவ்ய ஆற்றுக்கால் தேவி ஜோதிடம்

திருமணப்பொருத்தம் முறையாகப் பார்க்கப்படும்,
திருமணத்தடை, குழந்தைபாக்கியம் இன்மை,
படிப்புத்தடை, குடும்பக்கலகம் போன்ற
தோஷங்களுக்கான பரிகாரங்கள் செய்வதற்கும் பத்து
வயதிற்குட்பட்ட குழந்தைகளின் எதிர்கால கல்வித்தடை
நிவர்த்திக்கும் ஆலோசனை வழங்கப்படும்.
Call: Meenakshisundram Ramasamy 416.439.2002

# முதல் தடவையாக ஆதனம் வாங்குபவர்களுக்கு

வாழ்வில் முதல் தடவை வீடு வாங்குவது மிகவும் மகிழ்ச்சிகரமான நிகழ்வு. அத்துடன் வாழ்வில் செய்யும் ஆகக்கூடிய முதலீடு இது ஆகும். ஒரு முக்கியமான, நீண்ட காலத்தில் பலன் கொடுக்கும் முதலீடாகும். மூவரின் நேரடித்தொடர்பு இந்த முதலீட்டிற்கு தேவைப்படும். இவர்களின் நம்பிக்கையான செயற்பாடுகள் ஆதனம் வாங்குவதற்கு முக்கியமானதாகவும் பெறுமதியுள்ளதாகவும் உள்ளது. அம்மூவரும் முறையே

1. ஆதன முகவர் (Realtor) 2. அடமானக் கடன் முகவர் (Mortgage Broker) 3. வீட்டை சோதிப்பவர் (Home Inspector)

### ஆதனமுகவர்

ஆதன முகவரே உங்களின் ஆதனத்தின் தெரிவிற்கு முக்கிய பாத்திரம் வகிப்பவர். உங்களின் நம்பிக்கைக்குரியவரை தெரிவு செய்வது சிறந்த பலனை கொடுக்கும். உங்களிற்கு தெரிந்தவர்களும் நம்பிக்கையானவர்களும் அறிமுகப்படுத்தும் ஆதனமுகவர்களின் பங்களிப்பு தகுந்த ஆதனத்தை வாங்குவதற்கு உதவலாம். அவ்வாறில்லாத சந்தர்ப்பங்களில் குறைந்தது மூன்று முகவர்களை தெரிவுசெய்து அவர்களுள் ஒருவரை தெரிவு செய்தால் சிறந்ததாக இருக்கும். உங்களுக்கு ஏற்படும் வீடு வாங்குவதற்குரிய சந்தேகங்களை, பல வினாக்களாக முகவரின் கவனத்திற்கு கொண்டுவந்து நம்பிக்கை ஏற்படுபவருடன் சேர்ந்து உங்கள் கனவு இல்லம் வாங்குவதற்குரிய பாதையை அமைக்கவும். இவ்வாறு ஏற்படும் தொடர்பு, எதிர்காலத்தில் உங்களின் ஆதனம் சம்பந்தமான பல பிரச்சினைகளிற்கு தகுந்த தீர்வுகளைக் காணக்கூடியதாக இருக்கலாம்.

### அடமான முகவர்

ஆதனத்தைப் பெற்ற பின், தகுந்த அடமானக்கடன் பெறுவதால் பல ஆயிரம் டொலர்களை சேமிக்கலாம். வீடுவாங்குபவர்களில் அனேகர் அடமானக்கடன் பெறுகிறார்கள். இருவகைகளில் அடமானக்கடன் பெறலாம். ஒன்று முதல் தர நிதிநிறுவங்கள், இரண்டாவது இரண்டாம் தர நிதி நிறுவனங்கள். அடமானக்கடன் முகவர் தகுந்த ஆலோசனையை உங்களிற்கு வழங்குவதால் சிறந்த அடமானத்தை நீங்கள் தெரிவு செய்யலாம். இன்றைய காலத்தில் ஏற்பட்டுள்ள நிதிநிறுவனங்களுக்கிடையேயான அடமானக்கடன் போட்டிகளில் அதிக வட்டிக் கழிவுகளை பெறக்கூடியதாக இருக்கும்.



### 3. வீடு சோதிப்பவர் - *Home inspector*

ஆதனம் வாங்கி, அடமானக்கடன் பெற்ற பிறகே வீட்டை சோதிக்க வேண்டும். பல Unqualified inspectors சந்தையில் உள்ளார்கள். எனவே தகுந்த, அனுபவமிக்க சோதகரை தெரிவு செய்தல் நல்லது. Inspectors Association களில் அங்கத்தவராக உள்ளவரா எனத் தெரிந்து கொள்ளல் வேண்டும்.

## நாமும் நமது இல்லமும்

ராஜா மகேந்திரன்

## தொடர் - 391

வாடகை வீட்டிற்கு விடை கொடுத்து சொந்த வீட்டிற்கு மாதாந்த கொடுப்பனவு தொடங்குகின்ற காலம் இது. சந்தோஷமாகத் தொடங்குங்கள். வாழ்த்துக்கள்.

2013 ஆம் ஆண்டின் முதல் 6 மாதங்கள் முடிவடைவதற்கு ஒரு மாதம் மட்டுமே எஞ்சியுள்ளது. இருப்பினும் முதல் மூன்று மாதங்களில் ரொறொன்ரோ பெரும்பாகத்தில் (GTA) விலை கூடிய ஆதனங்களின் (Luxury Homes) விலையிலும் வியாபாரத்திலும் முந்தைய வருடத்தை விட அதிகமாகவே காணப்படுகின்றது. இந்த வகை ஆதனங்களின் வியாபாரம் மிகவும் ஆரோக்கியமாகவே காணப்படுகின்றது. கடந்த இரு வருடங்களாகவே, விலை கூடிய வீடுகளின் (Upper end) வியாபாரத்தில் ரொறொன்ரோ பெரும்பாகமே அதி கூடிய

தொடர்ச்சி 10ஆம் பக்கம்


# HomeLife/GTA Realty Inc. Brokerage*

*Independently Owned & Operated

"கனவு உங்களுடையது, பொறுப்பு எங்களுடையது"



Raja Mahendran, P.Eng.
Broker / Owner

5215 Finch Ave, E, #203, Toronto. Tel.:416.321.6969 & Traders Blvd #29, Mississauga - Tel.:905.712.2666

## HOUSE FOR SALE
### NEILSON & MCLEVIN



4 Bedrooms Detached house for sale. Sep. entrance to finished bsmt. Recently Renovated. Single garage.

## 101 ERSKINE IN UPTOWN T0RONTO



Another Tridel Project. price starting from $259,900. Summer 2015.

## CONDO FOR SALE
### POWER OF SALE
### KIPLING & STEELES

2 Bedroom condo. for sale. Asking price $49,000

## CONVENIENCE STORE FOR SALE

Over 10 years establish convenience / Grocery / Audio / video. Space for expansion.
Asking only $99,900

## CONDO FOR SALE
### HWY 401 & KENNEDY

1 Bedroom + den.
Indoor swimming pool.
Recreation facilities.
Asking price $259,900.

# வாகன விபத்துகளில் தப்புக்குரியவருக்கு எதிராக வழக்கு தொடர்ந்தால் சாத்தியமாகுமா?

## கனடிய தகவல் தொடர் 196

### *AUTO ACCIDENT TORT CLAIMS*

இலங்கையில் உயர்தர கல்வி தராதர படிப்பினை (G.C.E Advance level) முடித்து விட்டு பல்கலைக்கழக அனுமதிக்காக எதிர்பார்த்துக் கொண்டிருந்த நேரம் யாழ். நகரில் வெளிவாரி பல்கலைக்கழக வகுப்புகளில் சட்டத்துறை சார்ந்த கற்கை நெறிகளுக்கான வகுப்புகள் (L.L.B degree courses) திறமையான முறையில் நடத்தப்பட்டு வருகின்றது என அறிந்து அங்கு போய் சேர்ந்து முதலாம் வருடத்தில் படித்துக் கொண்டிருந்த காலம்! (ஒரு வருடத்திற்கு மேலாகவும் இதே கல்வியினை தொடர்ந்தேன் என தம்பட்டம் அடிக்கக் கூடாது. அத்துடன் நின்று விட்டது)

- 'இலங்கை அரசியலமைப்பு சட்டம்' (Constitution Law)
- 'சட்ட வரலாறும் சட்ட முறைகளும் (Legal history & legal systems)
- 'ரோமன் சட்டங்கள்' (Roman law)

போன்ற பல்வேறு வகையான பாடங்களை அன்றைய காலம் யாழ்ப்பாணத்தில் சட்டத்துறையில் பட்டம் பெற்று, வக்கீலாக பணி புரிந்து கொண்டிருப்பவர்கள், தங்களின் நீதிமன்ற அனுபவங்களுடன் வகுப்புகளில் போதிக்கும் போது மெய் மறந்து கேட்டு கொண்டிருப்பதும், பல புதிய விடயங்களை படிப்பதும், அறிந்து கொள்வதும் ஒரு சுவையான அனுபவங்கள். வகுப்பில் சட்டத்துறை விரிவுரையாளருக்கு பணிந்து, நடந்து வந்த ஒரு 'நன்மாணக்கன்' என்ற ஒரு பெயரினை சற்று சிரமப்பட்டு உருவாக்கியிருந்ததால் வகுப்பு நேரங்கள் இல்லாத சில சந்தர்ப்பங்களில் அவர்களின் அலுவலகங்களில் பணி புரியவும், அவர்களோடுடு சேர்ந்து அவர்களுக்கு உதவியாக நீதிமன்றத்திற்கு செல்லும் சந்தர்ப்பமும் எனக்கு கிடைந்திருந்தது.

பல அப்பாவி மனிதர்கள், ஏழை விவசாயிகள் என பலதரப்பட்ட வாடிக்கையாளர்கள் காணி வழக்குகள், எல்லை வழக்குகளில் வக்கீலின் உதவி கேட்டு அவரது அலுவலகம் தேடி வருவார்கள். 'காணிகளுக்கிடையில் பாதை எடுக்கும் பிரச்சினை', 'எல்லை அதிகரித்து நகரப்பட்ட பிரச்சினை' போன்ற பல்வேறு விடயங்களில் ஆரம்பித்து பக்கத்து காணிக்காரன், உறவினர்கள், சகோதரர் களுடன் உபயோகித்து கொண்ட தகாத வார்த்தைகள், கை கலப்புகள் என ஏராள-மான புலம்பல்கள் அங்கு வந்து சேரும்.

சட்டத்தரணியும் அவர்கள் புலம்பல்களை கேட்டு அவர்கள் பக்கம் சேர்ந்து உஷாராகி விடுவார். சாதுவாக மூண்ட நெருப்பினை பரவலாக்குகின்ற தொழிலாகவே அந்த வக்கீலின் தொழில் தொடரும்.

- பாதை கேட்கு தகராறு படுத்தியவருக்கு எதிராக ஒரு சட்ட பிரிவின் கீழ் சிவில் வழக்கு
- எல்லை மிகுதிப்படுத்திய குற்றத்திற்கு இன்னொரு வழக்கு
- கை கலப்புகள், வாய் தகராறுகளுக்கு கிரிமினல் சட்டத்தின் கீழ் இன்னொரு வழக்கு

இப்படியே பல வழக்குகளுக்கு என பத்திரங்களில் கையொப்பத்தினை வாங்கி கொண்டு, 'உவர்கள் ஒருவரையும் விடக் கூடாது' என வக்கீலும் சேர்ந்து உறுமுவார். இது வழமையாக நடக்கும் சம்பவம்.

அந்த விவசாயிகளும் மடியில் கட்டிக் கொண்டு வந்த காசு தாள்களை எடுத்து கட்டு கட்டாக வழங்குவார்கள். உழைப்பாளி களின் வியர்வையையும், குருதியும் அந்த காசுகளின் ஒவ்வொரு தாளிலும் இருப்பது போலவே என் மனதுக்கு தென்படும். 'வக்கீல் ஐயா என்ரை பக்கம் நிற்கிறார் என்னோட மாட்டிக் கொண்ட எதிரிகளுக்கு வயிறு கலங்க பண்ணினேன்' என்ற ஆனந்தம் மட்டும் அவர்களுக்கு அள்ளிக் கொண்டு வரும். இவர்களின் வழக்கு தவணைகளின் போது அதே வக்கீலுக்கு உதவியாக நீதிமன்றம் செல்லும் போது இன்னொரு காட்சியினையும் ஆச்சரியத்துடன் என்னால் பல தடவைகளில் காணக் கூடியதாகவிருந்தது.

வக்கீல்மார் கூடிக் குலாவி தேநீர் அருந்தும் நீதிமன்றத்தினுள் உள்ள ஓய்விடத்தில் எதிர்பக்கத்து வக்கீல்மார் யாவரிடமிருந்து அன்றைய தினம் ஆஜராக போகும் வழக்கு பற்றி கலகலப்பாக பேசி கலந்துரையாடு வார்கள். இரு பக்கமும் ஆஜராகும் வக்கீல்மார் ஒரே தொழில் செய்பவர்கள் என்பதால் ஒருவருக்கொருவர் நெருங்கியவர் களாகவும், சிலர் உறவுகளில் நண்பர்களாகவும் இருப்பார்கள். இவர்களுடன் இருபத்தியொரு வயது மாணவனாக நானும் சேர்ந்து இருப்பதால் எனக்கும் ஓசியில் தேநீர் கிடைப்பது வழமை என்பதனையும் இங்கு நான் சற்று மகிழ்வுடன் சொல்லித்தான் ஆக வேண்டும்.

'வழக்குகளை பல தவணைகள் என எடுத்து சற்று காலதாமதமாக்கி காசுகளை நாமும் கறப்போம்' என இருபக்க வக்கீல்மாரும் பலத்த நகைச்சுவை வெடிப்புகளை உதிர்த்துவிட்டு நீதிபதிக்கு முன்னால் எழுந்து இரு பக்கமும் நின்று ஆங்கிலம், தமிழ் கலந்த பாஷையில் ஏதோ சொல்லி ஆஜராவார்கள். காணியில் மோதுப்பட்ட இரு உறவுகளும் பாவிகளாய் கைகட்டிக் கொண்டு நிற்பார்கள். அவர்கள் இருவருக்கும் அங்கு தாம் மோதுகிறோம் என்ற ஆணவ திமிர் பார்வை ஒருவரை ஒருவர் நோக்கி இருக்கும். தாங்கள் பணம் செலுத்தி பிடித்து வைத்திருக்கும் வக்கீல்



ஐயா என்ற படங்களுடனும் இருக்கும். இந்த காட்சிகளை எல்லாம் நானும் பார்த்து கொண்டேயிருக்கிறேன். பல தவணைகள் என கடந்து இறுதியில் தீர்ப்பின் முடிவு!

- பாதை பிரச்சினைக்கு இரு பக்கத்தினரும் சமமாக மூன்று & மூன்று மீற்றர்கள் விட்டுக் கொடுக்க வேண்டும்.
- எல்லை கூட்டிய பிரச்சினைகளுக்கும் ஒரு வகையில் சமாதான தீர்வு!
- காணிப் பிரச்சினைகளுடன் தொடர்பு பட்டு நடந்த கிரிமினல் குற்றத்திற்கு சிறு பணத்தண்டனை. சில நேரங்களில் அந்தக் குற்றம் நிராகரிக்கப்பட்டு தள்ளப்பட்டும் இருக்கும்.

**கை நீட்டி பணம் வாங்கி பல வழக்குகளை நீதிமன்றங்களில் எதிர் கொண்டு பழுத்த அனுபவங்களை பெற்ற வக்கீல்மாருக்கு தீர்ப்பு இப்படித்தான் வரும் என்பது ஆரம்பத்தில் தெரியாத விடயமல்ல!**

காணியினை விற்று காணி வழக்கில் சமர் செய்தவர் வீதியில் நிற்பார். அவரிடம் பணம் கறந்த வக்கீல் கறுப்பு கோட்டினை கழற்றி கையில் வைத்துக் கொண்டு விலை உயர்ந்த காரில், சாரதி வண்டியினை செலுத்த பின் சீற்றில் உட்கார்ந்து பவனி போவர். இதுவே பலருக்கும் எழுதப்பட்ட தலைவிதி.

ஒரு உதாரணத்திற்காக இந்த பழைய கதையினை இங்கு குறிப்பிட்டேன்! இனி நம் கனடா வாழ்வில் இதே மாதிரி தொடர்புபட்ட பிரச்சினைக்கு வருகிறேன்.


இப்படியொரு சம்பவம்!

ரொறொன்ரோவில் சாரதி பயிற்றுனராக பணிபுரியும் எனது நண்பர் ஒருவருக்கு எதிராக ஒன்ராரியோ நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்த குற்றப்பத்திரிகைகளின் ஒரு கட்டு கோப்புகளின் பிரதிகள் சில மாதங்களின் முன்பு விசேட நீதிமன்ற தகவல் பரிமாற்று சேவையினர் அவரது வீடு தேடி வந்து சமர்ப்பித்தனர். எதற்காக இந்த வழக்கு தமக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதனை அவரால் சிந்திக்க முடியாமல் இருந்தது. அவரும் நினைவுகளை பின் நோக்கி நகர்த்தி சிந்தித்து பார்க்கின்றார்.

பல மாதங்களின் முன்பு இவரது வாகனம் இன்னொருவரின் வாகனத்தை மார்க்கம் & ஸ்ரீல் சந்திப்பில் வைத்து சாதுவாக முட்டியது என்ற சம்பவத்தினை மட்டும் அந்த வழக்கு பத்திரங்களை வைத்து அவருக்கு சற்று நினைவில் மீட்டு எடுக்க கூடியதாகவிருந்தது. அந்த இடத்திலேயே வைத்து இருவரும் எதுவித பிரச்சினைகளும் பாரதூரமாக இல்லை என்று பார்த்து விட்டு சமாதானமாக போயிருந்தனர்.

இப்போது அந்த விபத்தின் சம்பவத்திற்கு நான்கு மில்லியன் டொலர் நட்டஈடு கோரி தாக்கல் செய்த பத்திரத்தில் வரிக்கு வரி ஒவ்வொரு இலக்கத்திலும் கொடுக்கப்பட்ட குற்றசாட்டுக்கள் என்பது உண்மையின் எல்லையினைக் கடந்திருந்தது. அதி உச்ச மது போதையில் வாகனமோட்டி வந்தார். எல்லை மீறிய வேகத்தில், எதுவித கவனமேயில்லாமல் பேசிக்கொண்டு வந்து பின்னால் மோதினார். இப்படி பல வடிவங்களில் பல பக்கங்களில் குற்றசாட்டுக்கள் தொடர்ந்தன.

மில்லியன் டொலர்கள் பணம் காப்புறுதி கம்பனியில் கறக்கலாம் என்ற கற்பனையில் வக்கீலின் அலுவலகம் தேடி ஓடியவரிடம் எவரோ ஒரு வக்கீல் நல்லாய் வியாபாரம் செய்திருக்கின்றார் என்பதனை புரிந்து கொள்ள அங்கு அவகாசம் தேவையிருக்கவில்லை.



சிவ. பஞ்சலிங்கம் B.Com.,
(Licensed Insurance Broker)
காப்புறுதி சம்பந்தமான ஆலோசனைகளுக்கு:
416.321.0999

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

## ஸ்ரீ கைலாசம் சைவசமய கிரியைகள் சேவை

சைவ கிரியைகள், ஆலோசனைகள், சைவமுறைப்படி சமயதீட்சை,
அந்திமக்கிரியை (மரணச்சடங்கு), அந்தியேட்டி (புனர்தகனம், கல்பூசை) என்பவற்றை
சைவ முறைப்படி செவ்வனே செய்துகொள்வதற்கும், அவை தொடர்பான
ஆலோசனைகளுக்கும் 'இணுவையூர்' சிவஸ்ரீ.மு.சு.வைத்தியநாதன்குருக்கள்
(பிரித்தானிய சைவ முன்னேற்றச் சங்க முன்னாள் சைவக்குருக்கள்)

தொடர்புகளுக்கு: ***647.629.5468 / E.mail:smskurukkal@yahoo.com***


Sell your home
faster
and more money
Mccowan/Hwy 401
$249,900
1+1 Bedrooms, 1 W Rooms
Ceramic Floor
Kennedy/Ellesmere
$314,900
3+1 Bedrooms, 2 W Rooms
Finished Basement With Washroom
Ellesmere/Orton Park
$339,000
3 Bedrooms, 1 W Rooms
3 Bedrooms With Hardwood Floors
Rossland/Salem
$349,900
3 Bedrooms, 2 W Rooms
Eat In Kitchen With Walk Out To Deck And Fenced Yard
Grand Ridge /Harmony
$439,990
4 Bedrooms, 3 W Rooms
Ceramic Floor
Eating Area With W/O To Yard
Port Union/Hwy 2
$450,000
4 Bedrooms, 3 W Rooms
Finished Basement
Markham & 14th Ave
$469,999
3 Bedrooms, 3 W Rooms
Ceramic Floor Well Maintained. Close To All Amenities
Tenth Line / Mantle
$498,800
3 Bedrooms, 3 W Rooms
9Ft Ceiling In Main Floor, Upgrade Hardwood
16th Avenue/9th Line
$499,900
3 Bedrooms, 4 W Rooms
Beautiful Hardwood In The Living And Dinning Room
Markham/Highglen
$559,000
3+2 Bedrooms, 3 W Rooms
Brand New Basement With 2 Bedroom
14th &9th
$675,000
4 Bedrooms, 4 W Rooms
Grnd Solar Light. 9Ft Celling On Main & Hrdwd Flrs
9th Line And 14th Avenue
$719,000
4 Bedrooms, 4 W Rooms
Hardwood , Ceramic Floor
Professionally Landscaped
Port Union/Kingston Rd.
$758,000
3 Bedrooms, 3 W Rooms
Hardwood Floor
Finished Walk-Up Basement
Kingston/Meadowvale
$914,000
5 Bedrooms, 4 W Rooms
New-Luxury Custom Built, Finished Bsmt
Business
$1,889,000
With property
When you list your home with Mike,you receive these Guarantees.
Your home advertised 24 hours a day until it is sold
Your home advertised in full color prints ads every week until it is sold
Our team of specialists for the same price as hiring a single agent
Your home sold in 30 days or we buy it
RE/MAX
Elaguppillai Srinathan (Mike) B.Sc
Sales Representative/Builder
Direct 416 - 276-1225
Email: esrinathan@yahoo.com
#1
RE/MAX
KZG 647-200-5833
Ph1-7800 Woodbine Ave
Markham, ON L3R 2N7
Office: 905-470-9800
Fax: 905-470-7770
I can also assist you Mortgage financing, Home Inspection Real Estate lawyer

# சுவாசக் கோளாறுகளுக்கு யோகா

## நீண்டநாள் வாழ நினைத்ததை அடைய நோய் தடுக்கும் வழிமுறைகள்

## *YOGA FOR BREATHING DIFFICULT*

மனிதன் பிறந்தவுடன் முதல் செய்கின்ற வேலை மூச்சை இழுப்பது. அதுமுதல் இறப்புவரை மூச்சை எடுத்து வெளிவிடுவது தான். இறுதி மூச்சை விடும்போது மரணத்தைத் தழுவிக்கொள்கிறான். இவ்வாறு நடக்கும் சுவாசத்தில் சில பிரச்சினைகள் தோன்றும்போது அது பலவித நோய்களுக்கும் மூலகாரணமாகி விடுகின்றது. மனிதன் இயற்கை விதிகளை மீறும்போது இயற்கை அளிக்ககூடிய தண்டனைதான் நோய்கள், பிணிகள் என்பன.

நுரையீரலுக்கும் (Lungs) பெருங்குடலுக்கும் நெருங்கிய தொடர்புண்டு. பெருங்குடலில் மலம் சேரும்போது மூச்சுக் கோளாறு தோன்றும். சிலருக்கு அலர்ஜி, ஆஸ்துமா, சைனஸ் (Sinus), அடுக்குத்தும்மல் என்பன ஏற்படும். எனவே மலச்சிக்கல் இருந்தால் கண்டிப்பாக மூச்சுப் பிரச்சினைகள் வர வாய்ப்புண்டு. அத்துடன் இரவில் நீண்ட நேரம் கண்விழித்து வேலை செய்வது, பகலில் தூங்குவது, சுத்தமான நீரை போதியளவு அருந்தாமை, அஜீரணக் கோளாறுகள், மலச்சிக்கல், மருந்து மாத்திரைகளை அதிகமாக உட்கொள்வது, மாசுபடிந்த காற்றுள்ள இடங்களில் அதிகநேரம் இருப்பது, உழைப்பிற்கேற்ற ஓய்வு இல்லாமை போன்ற காரணங்களால் சுவாச உறுப்புகள் பாதிக்கப்பட்டு இந்நோய் உருவாகின்றது.


மேற்கூறப்பட்ட குறைபாடுகளைச் சரி செய்யாது மருந்து அருந்துதல் மருத்துவர் கள் பரிந்துரைக்கும் குப்பி மருந்துகளை மூக்கினுள் செலுத்துதல் போன்றவற்றால் நோய் தற்காலிகமாக மறையுமே தவிர குணமாவதில்லை. முதலில் இந்த தவறினை சிறிது சிறிதாக குறைக்க வேண்டும். ஒரு கெட்ட பழக்கத்தை கைவிட வேண்டு மென்றால் ஒரு நல்ல பழக்கத்தைக் கற்றுக் கொள்ள வேண்டும். எனவே ஆஸ்துமா முதலான சுவாசக் கோளாறுகளுக்கு நிரந்தரமான தீர்வு காண்பதற்கு யோகா பிராணாயாமப் பயிற்சி முறைகளே முதன்மையானவை. இதனை ஓரளவு சரியாகக் கற்றுக்கொண்டால் 3 மாதத்தினுள் நோய் முற்றிலுமாக மறைந்துவிடும்.

### சுவாசக் கோளாறுகளுக்கு யோகாசன அட்டவணை

1. பவனமுத்தாசனம்
2. புஜங்காசனம்
3. சலபாசனம்
4. மகராசனம்
5. மச்சாசனம்
6. விபரீதகரணி
7. மூச்சுப்பயிற்சி

சுவாசம் சீராக நடைபெறும் போதுதான் உடலின் உள்உறுப்புகள் அனைத்தும் ஆரோக்கியமான நிலையினை அடையும். இதற்கு மேற்குறிப்பிட்ட யோகாசனங்கள் பேருதவி புரிகின்றன. அத்துடன் உடலை உறுதிபெறச் செய்கின்றன. அதன்பின் பிராணாயாமம் என்னும் மூச்சுப் பயிற்சிகளை செய்தால் காற்று சீராக நுரையீரலைச் சென்றடையும்.

### கபாலபதி மூச்சுப் பயிற்சி



### செய்முறை

விரிப்பில் நேராக உட்கார்ந்து கொண்டு கைகள் இரண்டையும் தொடைப்பகுதியில் வைத்தபடி கண்களை இலேசாக மூடிய நிலையில் வைத்திருக்கவும். பின் காற்றினை இரு நாசித் துவாரங்கள் வழியாக வேகமாக உள்ளிழுத்து உடனே வெளியில் உதற வேண்டும். இதனை தொடர்ச்சியாக அண்ணளவாக வினாடிக்கு ஒரு தடவை என்ற முறையில் தொடர்ச்சியாக 30 முறை காற்றினை உள்ளிழுத்து வெளியில் உதறவும். இவ்வாறு தொடர்ச்சியாக 5 முதல் 6 சுற்றுக்கள் காலையும், மாலையும் செய்துவரும் போது சுவாசப்பைகள் நன்கு விரிவடைந்து சுருங்கும் நிலை ஏற்படுகிறது. அதில் தேங்கியிருக்கும் சளி மற்றும் நீர்ப் பதார்த்தங்கள் அனைத்தும் வெளிவந்து விடுகிறது. அத்துடன் மூச்சுக் குழாய் நன்கு சுத்திகரிக்கப்படுகின்றது. ஆதலால் சுவாசம் சீராக நடைபெறுகின்றது.

### நாடி சுத்தி பயிற்சி

நாடி சுத்தி பயிற்சி என்பது வலது இடது மூக்கினை மாறி, மாறி பயன்படுத்தும் பயிற்சியாகும். இப்பயிற்சியால் உடலிலுள்ள செல்கள் அனைத்தும் சுத்தமாகின்றன. இடது மூக்கின் வழியாக மூச்சை மெதுவாக இழுத்து வலது மூக்கு வழியாக மெதுவாக வெளிவிடவேண்டும். பின் வலது மூக்கு வழியாக இழுத்து இடது மூக்கு வழியாக வெளிவிட வேண்டும். இவ்வாறு தொடர்ந்து செய்யும் போது சுவாசம் சம்மந்தமான அனைத்துப் பிரச்சினைகளும் தீருகின்றது.

மேற்கூறப்பட்ட யோகாசனங்கள், மூச்சுப் பயிற்சிகளை தினமும் செய்து வந்தால் ஒரு சில வாரங்களில் சுவாசக் கோளாறுகளுக்கு முடிவு காணலாம்.




ஆரோக்கிய வாழ்வு
N. செல்வஜோதி
Diploma in Yoga Therapy (India)
**416.289.2033** *after 7:00pm*
**416.617.5721**


# முதல் தடவையாக...

**07ஆம் பக்கத்தொடர்ச்சி**

வீடுகளை விற்றுள்ளது. விற்கப்பட்ட Higer End ஆதனங்களின் எண்ணிக்கையிலும் அதிகரிப்பே காணப்படுகின்றது. குறைந்த அடமானக்கடன் வட்டிவீதத்தின் சூழ்நிலை, ஏற்கனவே இருந்த ஆதனங்களின் விலையின் அதிகரிப்புமே, விலை கூடிய வீடுகளின் விற்பனையின் அதிகரிப்பிற்கு காரணமாகலாம்.



கனடாவின் 16 பெரிய நகரங்களில் செய்த ஆய்வுகளில் 12 இல் விலைகூடிய வீடுகளின் வியாபாரம் அதிகரித்தே காணப்படுகின்றது. கனடாவில் இவ்வருடத்தின் முதல் மூன்று மாதங்களில் விற்கப்பட்ட அதிகூடிய வீட்டின் விலை $18.6 மில்லியன். மேலும் 5700 சதுரஅடி அடுக்குமாடி மனை (Condo. unit) யின் விலை $8 மில்லியன். இந்த இரு வியாபாரமும் வன்கூவரில் நடந்துள்ளது. கனடாவில் அதி கூடிய விலையில் சந்தையில் இருக்கும் வீட்டின் விலை $28.888 மில்லியன் ஆகும். இதுவும் வன்கூவரிலே சந்தைப்படுத்தப்பட்டுள்ளது.

**கொக்குவில் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம் - கனடா**

## வருடாந்த கல்விசார்போட்டிகள் - 2013

(Educational Contest 2013 )

கொக்குவில் இந்துக் கல்லூரிப் பழைய மாணவர் சங்கம் - கனடா தனது கல்லூரியின் பழைய மாணவர்களினதும் அவர்கள் குடும்பங்களினதும் சிறார்கள் மத்தியில் நடத்தும் வருடாந்த கல்விசார் போட்டிகள்.

பண்ணிசை, பேச்சு, வாசிப்பு, கட்டுரை, சொல்வதெழுதுதல், உறுப்பெழுத்து, கணிதம், ஆங்கிலம் ஆகிய போட்டிகள் நடைபெற உள்ளன. பழைய மாணவர்களினது குடும்பங்களினது சிறார்களை இப்போட்டியில் பங்குபற்றுமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம். **விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய இறுதி திகதி *June 30th, 2013.***

இடம்: St. Stephen's presbyterian Church
3817 Lawrence Ave.East, Scarborough,Ontario, M1G 1R2

நேரம்: 8:00 AM காலம்: JULY 6th 2013.

மேலதிகவிபரங்களுக்கு:

| | | | |
|---|---|---|---|
| R. Mahendran: | 416.296.7037 | Nageswaran: | 416.299.6645 |
| Jeya: | 416.283.5265 | Namagal: | 416.283.1439 |
| Jeyarnee: | 416 431.9929 | Santhila: | 905.471.0906 |


Nantha Aiyadurai, B.Eng.
Real Estate Broker
**Cell: 613 850 9931**

கனடாவின் தலைநகர் ஒட்டாவாவில்

**Buying or Selling**

**Relocation Service**
**Ottawa> > > < < < GTA**



நந்தா ஐயாத்துரை

***Coldwell Banker Sarazen Realty, Brokerage 2544 Bank St. Ottawa, Ontario K1T 1M9 Office: (613) 288-1999 Fax: (613) 288-1555***

TBC Toronto Business College



GET JOB READY IN SIX MONTHS WITH A PSW DIPLOMA FROM TBC

OTHER DIPLOMA PROGRAMS

Accounting & Payroll Admin.
35 Weeks (co-op available)

Business Administration
26 Weeks

Computerized Accounting
26 Weeks

Medical Office Admin.(MOA)
32 Weeks

FREE TRAINING

யார் தகுதி உடையவர்கள்?

★ EI பெற்றுக்கொண்டிருப்பவர்கள்
★ 2005ம் ஆண்டுக்குப்பின் EI பெற்றவர்கள்
★ 5 வருடங்களுக்குள் Maternity / Parental Benefits பெற்றவர்கள் Diploma பாடநெறி ஒன்றை இலவசமாகக் கற்கலாம்

Tuition Fees, Books, Living Expenses Day care & Transportation up to $28000

அனைத்தும் இலவசம்
(திருப்பிச் செலுத்தத் தேவையில்லை)

எமது மாணவர்களில் பலர் சிறந்த வேலை வாய்ப்பினைப் பெற்றிருக்கிறார்கள்

Registered Nurse Exam. Prep.
Registered Practical Nurse Exam. Prep.
MS Office 2010, Quick Books 2011
Simply Accounting 2011, Accpac Ver. 5.6
Canadian Securities Course
Online Stock Trading
Bank Teller, First Aid & CPR
Food Handler Certification

OACC PROUD MEMBER

☎ 416-291-5155 ☎

4465 Sheppard Ave. East #208
( Sheppard & Brimley ) Scarborough
www.tbcollege.com info@tbcollege.com
(Registered as a Private Career College under the Private Career Colleges Act 2005)

# காலத்தோடு வளரும் கணினிகள் -22

கடந்த இதழில் சமூக வலைப்பின்னல்கள் பற்றிக் கலந்துரையாடினோம். மேலும் பல சமூக வலைப்பின்னல்கள் பாவனையில் உள்ளன. Linkedin என்ற சமூக வலைப் பின்னலில் பயனர்கள் தமது வர்த்தகம், அல்லது தொழில் மேம்பாட்டிற்காகத் தமது தொடர்புகளை (connections) விரிவுபடுத்தும் நோக்கில் இணைகின்றார்கள். இது 2003இல் ஆரம்பிக்கப்பட்டது. 2008இல் இதன் கைத்தொலைபேசிகளுக்கான வடிவம் பாவனைக்கு வந்தது. பொது விருப்பங்களுக்கான சமூக வலைப்பின்னலாக myspace.com உள்ளது. இதேபோன்று பல சமூக வலைப்பின்னல்கள் நாளுக்கு நாள் புதிது புதிதாக வந்த வண்ணம் உள்ளன. Pinterest, Google Plus, meetup, DevianArt போன்றவற்றையும் இதற்கு உதாரணமாகக் கூறலாம்.

கடந்த சில வாரங்களாக இணையம், மின் அஞ்சல் மற்றும் சமூக வலைப் பின்னல்கள் பற்றிக் கலந்துரையாடினோம். இப்பொழுது இணையத்தளப் பாவனைக்கு வேண்டிய சில செயன்முறைக் குறிப்புக்களைக் கவனிப்போம். இணையம் (Internet) என்பது உலகெங்கும் உள்ள கணினிகளின் பிணைப்பைக் குறிக்கும். வலை (web) என்பது எண்ணற்ற வலைப்பக்கங்களின் தொகுப்பினைக் குறிக்கும்.

கணினியில் இணையத்தளங்களைப் பார்வையிடுவதற்கு முதலில் கணினியில் இணையத் தொடுப்பை ஏற்படுத்துவதற்கு உரிய வசதிகளைச் செய்து கொள்ள வேண்டும். இதனை இணையச் சேவை வழங்குநர் (Internet Service Provider - ISP) ஊடாகச் செய்து கொள்ளலாம். இணையத்தின் பயன்பாடு நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணமே உள்ளது. இணையச் சேவை வழங்குநர்கள் வெவ்வேறு விதமான இணையத் தொடுப்பு (Internet Connections) முறைகளை அறிமுகம் செய்து வருகின்றார்கள். DSL, CABLE, OPTICAL FIBRE, WIRELESS (Wi-Fi) போன்றவை பொதுவான இணைப்புத் தொடுப்பு முறைகள் ஆகும்.

இப்பொழுது எங்களின் கணினி ஏதோ ஒரு முறையில் இணையத் தொடுப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது என்று வைத்துக் கொள்வோம். கணினியை ஆரம்பித்ததும் டெஸ்க்ரொப்பில் "Internet Explorer" என்ற ஐகனை கிளிக் (click) செய்ததும் ஒரு வலைப்பக்கம் டெஸ்க்ரொப்பில் தோன்றும். எந்த வலைப்பக்கம் தோன்றும் என்பது நாங்கள் இன்ரநெற் எக்ஸ்புளோரர் என்ற உலாவியில் (பிரவுசர் - Browser) கொடுத்து வைக்கப்பட்டுள்ள தரவுகளைப் பொறுத்தது. இவ்வாறு உலாவியை அழைக்கும் பொழுது தோன்றும் வலைப்பக்கத்தை ஹோம் பேஜ் (Home Page) என்போம். அநேகமான கணினிப் பாவனையாளர்கள் பிரசித்தி பெற்ற தேடு பொறிகள் (Search Engines) ஆன msn, yahoo, google ஆகியவற்றில் ஒன்றைத் தமது ஹோம் பேஜ் ஆகப் போட்டு வைத்திருப்பார்கள். உங்களுக்கு விரும்பிய ஒரு இணையத்தளத்தின் வலைப்பக்கத்தை ஹோம் பேஜ் ஆகப் போட முடியும்.



உலாவியை அழைத்ததும் டெஸ்க்ரொப்பில் தோன்றும் திரையின் மேல் வரிசையில் இடது புறத்தில் இரண்டு அம்புக்குறிகள் இருக்கும். இவை ஒன்றிற்கு மேற்பட்ட வலைப் பக்கங்களுக்குச் சென்று விட்டு அவற்றிற்கிடையில் தாவுவதற்கு உதவும் Backward, Forward பட்டன்கள் ஆகும். இவற்றிற்கு வலது புறமாகக் காணப்படும் ஒடுங்கிய நீண்ட பெட்டியை முகவரிச் சட்டம் (அட்ரஸ் பார் Address Bar) என்போம். இங்கே நீங்கள் பார்க்க விரும்பும் இணையத்தளத்தின் முகவரியைத் தட்டச்சு செய்ய வேண்டும். உதாரணமாக கூகிள் இணையத்தளத்திற்குப் போக விரும்பினால்



- அகணி -
authorakani@yahoo.com

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

# நாடு கடந்த தமிழீழ அரசின் சுதந்திர சாசனம் பிரகடனப்படுத்திய நிகழ்வு

தாய்நாட்டில் வாழ்வதற்கு வாய்ப்பற்றும் புலம்பெயர்ந்து பூமிப்பந்தின் மூலை முடுக்கெல்லாம் வதிவிடமாக்கிய கொண்ட ஏதிலி தமிழரின் பிரதிநிதியாக தங்கள் தாய் நாட்டைத் திருப்பிப் பெறும் முயற்சியில் உருவாக்கப்பட்டது தான் இந்த அமைப்பு.

ஒரு சுதந்திர நாட்டுக்குரிய அத்தனை அம்சங்களையும் உள்ளடக்கிய ஒரு நாடாளுமன்றம் போல் இது அமைந்திருக்கிறது.

இதற்கான பிரதிநிதித்துவம் எல்லா நாடுகளிலும் வாழும் தமிழரிடமிருந்து பெறப்பட்டது. முள்ளி வாய்க்கால் இனப்படுகொலையின் பின் சாசனங்கள் எழுதப்பட்டு நான்காம் வருடமாகிய 2013 மே மாதம் 18 ஆம் திகதி தமிழர்களின் பொது அமைப்பொன்றின் முன் அமெரிக்கா லங்காஸ்டர் நகரில் முன் மொழியப்பட்டு நிறைவேற்றப்பட்டது. வெளித்தேசங்களிலே என்னதான் சீரோடும் சிறப்போடும் சகலவசதி வாய்ப்புகளுடனும் வாழ்ந்தாலும் தாய் நாட்டின் சுதந்திர வேட்கையை அதன் மண்ணை முத்திக்கும் ஆவலை உயிர்த்துடிப்பை அடக்கவோ மறக்கவோ முடியாது தவிக்கும் பாங்கு இந்த மகாநாட்டின் நிகழ்வுகளால் புரிய முடிந்தது.

நாடு கடந்த சுதந்திர அரசின் பிரதம மந்திரியாக செயற்பட்ட திரு. உருத்திரகுமாரன் தலைமை வகித்து உரை ஆற்றினார். பிரதம நோக்கமே தமிழ ஈழத்துக்கான தத்துவங்களை சாசனப்படுத்தி நிரந்தரப்படுத்துதலே.

மற்றைய கருத்துக்களின் படி தனிமனித உரிமை, கூட்டுறவு மகிமை, தோல்விகளிலிருந்து கற்றுக்கொண்ட மனிதத்துவம் எல்லாம் இருந்தும் மூர்க்கமான முறையில் தாக்கப்பட்ட முள்ளிவாய்க்கால் நிலை பிரஸ்தாபிக்கப்பட்டது. ஈற்றில் தமிழீழ அரசுக்கு ஒரு இலட்சிய வாசகம் தேவை என 'தமிழீழமும் இன்பமானது' (Joy Tamil Eelam) எனவும் நக்கீரனால் முன் வைக்கப்பட்ட 'முரசறைதல்' தொடக்க நாதம் எனவும் 'பனை' தேசத்தின் மரம் எனவும் நிலைப்படுத்தப்பட்டது.

'முரசறைதல்' காலத்துக்கெட்டாத தமிழன் வாழ்வில் இடம்பெற்றிருந்தமை பழைய நூல்களிலிருந்து பெறப்பட்டமையால் அதே முதல் நாதம் எனப்பட்டது. ஈழத்தின் சுதந்திர வீச்சு உயிர்துடிப்பு இந்நாதம் மூலம் அறியப்படும் என நக்கீரன் கூறினார்.



சாசனத்தின் அவசியம் பற்றி, இலங்கைப் பிரச்சினை போன்ற கஷ்டங்களை அனுபவித்த லட்சக்கணக்கான மக்களுக்கு காசு கொடுத்த பங்களாதேஷ் 'முக்திவாஹினி' பிரமுகர் ஒருவர் உரையாற்றினார். அராஜகத்தை வெல்ல முடியாது அகதிகளாக இந்தியாவுக்குள் புகுந்து அந்த அரசுக்கு சிரமம் கொடுத்த காரணத்தால் இந்திரா காந்தி உடனடியாகத் தலையிட்டு பங்களாதேஷ் ஐ மீட்டு துங்கு அப்துல் முஜிபுர்ரஹ்மான் கையில் ஒப்படைத்தார். அந்நாட்டு விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு 'முக்திவாஹினி' எனப் பெயரிடப்பட்டது. விடுதலைப் புலிகள் என நம் போராட்டக்குழு போல செயற்பட்ட முக்கிவாஹினியின் பிரமுகர் ஒருவர் உரையாற்ற வந்தார்.

தமிழ் ஈழம் ஏற்கனவே தனது சுதந்திர அரசை அனுபவித்துக் கொண்டிருந்த தெனவும் சுதந்திர அரசின் முக்கிய அம்சங்களைக் கூறி அவை ஏற்கனவே அனுபவித்துக் கொண்டிருந்த நிலையில் தான் முள்ளிவாய்க்கால் இன அழிப்பு சிங்கள அரசு அடாவடியாகத் தலையிட்டு இலட்சக்கணக்கானவர்களைக் கொன்று குவித்ததாகக் கூறினார். அனைத்துலக முதன்மைப் பெண்கள் நூறு பேரில் ஒருவராக விளங்கும் தமிழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் சரஸ்வதி அவர்கள் தமிழ்ஈழ அரசின் சுதந்திர சாசனத்தை அறிமுகம் செய்து வைத்தார்.

"சுதந்திர கனவுடன் தனித்துவமான சகல அம்சங்களையும் கொண்டு வாழ்ந்த அப்பிரதேசம் சமூக, அரசியல், பொருளாதாரத்துறைகளுள் எதுவித சிக்கலுமில்லாத அனைத்தையும் தம்முள் வைத்திருந்த ஓர் அரசைக் கொண்டிருந்தது" எனக் கூறி சாசனத்தின் அவசியத்தை உணர்த்தினார்.

இப்படித் தயார் செய்யப்பட்ட சாசனம் சகலநாடுகளையும் சேர்ந்த சில பிரதிநிதிகள் முன்னிலையில் வாசித்துக் காட்டப்பட்டு அங்கீகாரம் பெற்று பொதுமக்களால் அங்கீகரிக்கப்பட்ட உறுதி பெற்ற சாசனமாகத் தொழிற்படும்.

தன்னாட்சிப் பிரதேசம் முள்ளிவாய்க்கால் இன அழிப்புக்கு பின் கொஞ்சம் கொஞ்சமாக பிரதேசப் பறிப்புக்கும் உள்ளாகி வருவதால் இந்த சாசனம் மிகப் பெறுமதி உடையதாகும்.

23 அலகுகளாக கொண்ட இச்சாசனம் ஒவ்வொன்றாக வாசிக்கப்பட்டு நிறைவேற்றப் பட்டது. முரசறைதலோடு தொடங்கியது. இதனுள் அடக்கப்பட்ட விடயங்கள் May 18 முள்ளிவாய்க்கால் தினம் சோகமானதல்ல கட்டியெழுப்பப்படும் திட்டங்களை உருவாக்குவதாகும். நவம்பர் 27 மாவீரருக்கான சோகத்தையும் வீரத்தையும் புதுப்பிக்கும் மாவீரர் தினமாகவும் உத்தியோகமொழிகள் தமிழ் சிங்களம் ஆங்கிலம் மூன்றுமாகும்.

கல்வி, பொருளாதாரம் முதலியவற்றில் சமூகசமநிலை பேணப்படும். கொள்கைகள், மேம்பாடுகள், சுற்றுப்புறச்சூழல், பாதுகாப்பு, இருநாட்டுக்குடியுரிமை எனும் பலவிடயங்களையும் உள்ளடக்கிய சாசனம் நிறைவேற்றப்பட்டு நாடுகடந்த சுதந்திர தமிழீழ அரசு சாசனம் ஸ்தாபனம் பெற்றது.

முரசு முழக்கத்தின் பின் ரொறொன்ரோவிலிருந்து லங்காஸ்ரருக்குச் சென்ற நிவேதா இராமலிங்கத்தின் நடனமும் வேறொரு இசை நிகழ்ச்சியும் நிறைவேறின.



**- குறமகள்-**

# காலத்தோடு...

11ஆம் பக்கத்தொடர்ச்சி

http://www.google.com என்ற முகவரியைத் தட்டச்சு செய்து விட்டு Enter key யினை அழுத்தினால் கூகிள் வலைப்பக்கத்தின் முகப்பு டெஸ்க்ரொப்பில் தோன்றும். இந்த இணையத்தள முகவரியில் உள்ள விபரங்களைப் பற்றிக் கவனிப்போம். http என்பது ஹைப்பர் ரெக்ஸ்ற் ரான்ஸ்பர் புரோற்றக்கோல் (hyper text transfer protocol) என்பதைக் குறிக்கும். புரோற்றக்கோல் என்பது வரைமுறைகளைக் குறிக்கும். www என்பது World Wide Web என்பதைக் குறிக்கும். எல்லா இணையத்தள முகவரியிலும் http://www. என்பது பொதுவானதாக இருக்கும். இந்த முகவரியில் google.com என்பது கூகிள் இணையத்தளத்தின் களப்பெயர் (டொமெயின் நேம் - Domain Name) ஆகும். ஒரு இணையத்தளம் உருவாக்கப்படும் பொழுது களப்பெயரொன்றைப் பதிவுசெய்தல் வேண்டும். இந்தச் செயற்பாட்டை Domain Name Registration என்போம். ஏற்கனவே பதிவுசெய்துள்ள ஒரு பெயரைப் பதிவு செய்ய முடியாது. இந்தப் பெயரைப் பதிவில் வைத்திருப்பதற்கு வருடா வருடம் சந்தாப்பணம் கட்ட வேண்டும். முகவரியில் உள்ள .com ற்குப் பதிலாக .net, .ca, .uk போன்றவையும் தெரிவு செய்யப்படலாம். இலாப நோக்கமற்ற நிறுவனங்களின் வலைப் பக்கங்களுக்கு மட்டும் .org இனைப் பயன்படுத்தலாம். அரச நிறுவனங்களின் இணையத்தளங்கள் .gov என்று வரும். பல்கலைக்கழகங்களின் இணையத்தளங்கள் .edu என்று வரும். .ca என்பது கனடாவையும், .uk என்பது United Kingdom என்பதையும் குறிக்கும். இவ்வாறாக வெவ்வேறு நாடுகளில் உள்ள இணையத்தளங்களுக்கு அந்தந்த நாடுகளிற்குரிய Domain extensions இனையும் பயன்படுத்தலாம். இணையத்தள முகவரியை URL (Uniform Resource Locator) என்று பொதுவாக அழைக்கப்படும்.

ஒரு இணையத்தளம் ஆரம்பிக்கப்படுவதற்கு களப்பெயர் பதிவிற்குப் பின்பு வலைப்பக்கம் அல்லது வலைப்பக்கங்கள் உருவாக்கப்படும். இதனையே வெப் டிசைன் (Web Design) என்போம். வலைப்பக்கம் தயாரானதும் வலைப்பக்கத்தை சேமித்து வைத்திருப்பதை வெப் ஹோஸ்ரிங் (Web Hosting) என்போம். உலகெங்கும் உள்ள பல நிறுவனங்கள் இந்தச் சேவையை மாதாந்தக் கட்டணத்திற்கு வழங்குகின்றன. உலகின் எந்தப் பகுதியில் இருந்தும் வெப் ஹோஸ்ரிங் செய்யப்படலாம்.

உதாரணமாக விளம்பரம் பத்திரிகையின் இணையத்தளத்திற்குச் சென்று விளம்பரம் பத்திரிகையைப் பார்வையிடுவதற்கு http://www.vlambaram.com என்ற இணையத்தள முகவரியை அட்ரஸ் பாரில் தட்டச்சு செய்து Enter key யினை அழுத்த வேண்டும். இவ்வாறாக நீங்கள் விரும்பிய இணையத்தளங்களிற்குச் சென்று பார்வையிடலாம்.

என் அன்புக்குரிய வாசகர்களே! இன்றும் வழமைபோல் கணினி பற்றிய அறிவை வளம்படுத்தும் நோக்கில் சில விடயங்களைப் பற்றிக் கவனித்தோம். தொடர்ந்து வாசியுங்கள். உங்கள் எண்ணங்களைத் தெரியப்படுத்துங்கள். அடுத்த இதழில் மீண்டும் சந்திப்போம். நன்றி. வணக்கம். தொடரும்.

# ஓடும் நீர் உறைவதில்லை 166

## மிக இலகுவானது மனச்சாட்சி

ஒரு மனிதனால் மிகவும் இலகுவாகச் செய்யக்கூடியது எது? என்றதும் நீண்ட ஒரு பட்டியலை முன்வைப்பதற்குத் தயாராகின்றோம். பெரும்பாலான சந்தர்ப்பங்களில் ஒரு விடயம் எம்மால் நிறைவேற்றப் பட்டதும் நாமே முழுமையாக அதைச் சாதித்து விட்டதாகவும் எண்ணுகிறோம். ஆனால் ஒரு விடயத்தை நாம் மிகவும் தெளிவாகப் புரிந்துகொள்வது அவசியம். ஏறத்தாழ நாம் மேற்கொள்ளும் அத்தனை செயல்களும் பிறரது அல்லது பிறவற்றின் ஒத்துழைப்பு இன்றி நிறைவேறுவதில்லை என்பதுதான். அதாவது ஒரு செயலின் நிறைவுக்கு எமது பங்கு மிகச் சிறியதாகவும் மிகுதி அனைத்தும் எம்மால் அறியப்பட்ட, அறியப்படாத, உணரப்பட்ட, உணரப்படாத பலவற்றின் ஒத்துழைப்பினாலேயே நிறைவேறுகின்றது.

மிகவும் சாதாரணமானவை என நாம் கருதும் செயல்கள் கூட பலவற்றை உள்வாங்கிய பின்னரே நிகழ்கின்றது. உதாரணமாக, நாம் சிரிப்பதாக எடுத்துக்கொண்டால் நாம் சிரிப்பதற்கு ஒரு நிகழ்வு வேண்டும், அந்த நிகழ்வு எமக்கு சிரிப்பைத் தரக்கூடிய சம்பவத்தைத் தொடர்பு படுத்தல் வேண்டும், அவ்வாறு தொடர்புபடும் சம்பவம் எமக்குச் சிரிப்பைத் தரும் நிலைக்கு மாற்றம் அடையக் கூடிய தன்மையைப் பெற்றிருத்தல் வேண்டும். அதுமட்டுமன்றி, நாம் சிரிப்பதற்கு அது சார்ந்த சூழலும் அவசியமாகின்றது. வெளிப்படையாக நாம் சிரிப்பதற்கு மிகவும் சுதந்திரமான, ஏற்றுக்கொள்ளும் தன்மையுடனான சூழல் அவசியமாகின்றது. ஒரு துன்பகரமான சூழலில், அல்லது மனதில் அதிகளவான சுமைகளுடன் இருக்கும்போதோ அல்லது நாம் சிரித்தால் அது இன்னொருவரைப் புண்படுத்தும் என்று எண்ணும்போதோ சிரிப்பதற்கான வாய்ப்பு மட்டுப்படுத்தப்பட்டுவிடும். 'சிரிப்பதற்கே இவ்வளவா?' என்று ஆச்சரியப்படாதீர்கள். இன்னும் எவ்வளவோ இருக்கின்றது. அவற்றை "சிரிப்பு" பற்றி விரிவாகப் பார்க்கும்போது பகிர்ந்து கொள்வோம். ஒரு விடயத்தை நாம் செய்வதற்கு பிற காரணிக-ளின் பங்களிப்பு அவசியமாவதைப் போல் இன்னொருவருடன் நாம் சேர்ந்து மேற்கொள்ளும் ஒரு நடவடிக்கைக்கு அந்த நபர் சார்ந்த சூழலும் பிற காரணிகளும் பங்களிப்புக்கள் அவசியமானவை என்பதை நாம் கவனத்தில் கொள்ளல் வேண்டும். இதனால் தான் நாம் தனித்துச் செயல் படுத்தும் ஒரு செயலை விட பிறருடன் சேர்ந்து செயல்படுத்தும் விடயங்கள் சுதந்திரமானதாக அமைவதில்லை. பலர் சேர்ந்து ஒரு விடயத்தைச் செயல்படுத்த வேண்டிய சந்தர்ப்பங்களில் ஒவ்வொரு தனிமனிதனதும் சுதந்திரம் மட்டுப்படுத்தப் பட்டு, நிறைவேற்றப்பட வேண்டிய விடயத்திற்காக மூடப்பட்ட சூழல் (திட்டமிடல்) உருவாக்கப்படுகின்றது. நிறுவன அமைப்பைக் கொண்டவை அனைத்தும் இவ்வாறே தமது இலக்கை அடைவதற்கான செயற்பாடுகளை நிறைவேற்றுகின்றன.



நாமாகச் செயல்படுத்தும் சிரிப்பு, கோபம், பொறாமை, வெறுப்பு போன்றவை ஒவ்வொன்றும் அது சார்ந்த பல காரணி-களை உள்வாங்கவேண்டி உள்ளதால் அவை மிகவும் இலகுவாகச் செய்யக் கூடியவை அல்ல. அப்படியானால் மிகவும் இலகுவாகச் செய்யக்கூடியது எது? மனிதனால் மிகவும் இலகுவாகச் செய்யக்கூடியது ஒன்றே ஒன்றுதான். துயரமாக இருத்தல் தான் அது. துயரமாக இருத்தலா என்று ஆச்சரியப்படுகிறீர்களா? ஆச்சரியம் வேண்டாம். இது மிக இலகுவாக இருப்பதால் தான் ஒவ்வொரு மனிதனும் காரணம் இல்லாமல் துயரப்படுகின்றான். துயரத்துக்கே இடமில்லாத அற்புதமான வாழ்க்கை கிடைத்திருந்தும் துயரத்தைத் தானாகவே உருவாக்கிக் கொள்கிறான். துயரப்படுவதற்கான காரணம் எதுவுமே இருப்பதில்லை. "என்னமோ தெரியவில்லை எனக்கு ஒரு மாதிரி இருக்கிறது" என்று துயரப்படுவதை விட வேறு எதைத் தான் ஒரு மனிதனால் இலகுவாகச் செய்ய முடியும்?

நாம் அதிகமாகப் பயன்படுத்தும் வார்த்தைகளில் 'மனச்சாட்சி' என்பதும் ஒன்று. மனச்சாட்சி என்றால் என்ன என்பதை அறிந்து கொள்வதற்கு முன்பாக 'மனம்' என்றால் என்ன என்பதையும் 'சாட்சி' என்றால் என்ன என்பதையும் தெளிவு படுத்திக் கொள்வோம். மனம் என்பது நினைவுகளின் பண்டகசாலை. நாம் பிறந்ததில் இருந்து இதுவரை சேகரித்துக்கொண்ட நினைவுகள் அனைத்தையும் மனம் சேகரித்து வைத்துக்கொள்கிறது. இங்கு நாம் புரிந்துகொள்ள வேண்டிய முக்கியமான விடயம் என்னவெனில், மனத்தின் தொழிற்பாடுகள் அனைத்தும் இறந்த காலத்தைச் சார்ந்தவை என்பதுதான். ஏனெனில் நினைவுகள் அனைத்தும் இறந்த காலத்தைச் சார்ந்தவை. அடுத்து நாம் அறிந்து கொள்ள வேண்டியது நினைவுகளின் அடித்தளம் எது? என்பதே. பதிவுகளே நினைவுகளின் அடித்தளம். ஏற்கனவே பதியப்பட்டவை நினைவுகளாகின்றன. மூன்றாவதாக நாம் அறியவேண்டியது பதிவுகளின் அடிப்படை எது? என்பதாகும். பதிவுகளின் அடிப்படையாக 'நிகழ்வுகள்' அமைகின்றன. எனவே 'மனம்' என்பது, நிகழ்வுகளின் பதிவுகளான நினைவுகளின் பண்டகசாலை" ஆகும். அனுபவம் சார்ந்தது அடுத்து நாம் "சாட்சி" பற்றிய பார்வையைச் செலுத்துவோம். சாட்சி என்றதும் அடிப்படையில் நாம் ஒரு விடயத்தைத் தெளிவாகப் புரிந்துள்ளோம். சாட்சியாக இருப்பவர் அவர் சாட்சிப்படுத்தும் நிகழ்வின் பங்காளி அல்ல என்பதுதான் அது. உதாரணமாக நீதிமன்றில் சாட்சி சொல்வதற்காக அழைக்கப்படுபவர்கள் அவர்கள் சாட்சி சொல்லும் நிகழ்வில் நேரடியாக ஈடுபடாதவர்களாக இருப்பதோடு தாம் பார்த்தவற்றை, காதால் கேட்டவற்றை வழக்காளிக்கோ அல்லது எதிர்தரப்புக்கோ சாதகமாகவோ அல்லது எதிராகவோ கூறுவர். சாட்சி சொல்பவர் வழக்காளியோ அல்லது எதிராளியோ அல்ல. அதாவது, சாட்சிகள் நிகழ்வுகளின் நேரடிப் பங்காளிகள் அல்ல. அபிப்பிராயம் சார்ந்தவை.

மனச்சாட்சி என்பது மனம் (அனுபவம்), சாட்சி (அபிப்பிராயம்) ஆகிய இரண்டு பகுதிகளை உள்ளடக்கியுள்ளது. ஆனால் இங்கு நாம் ஆழமாகக் கவனிக்க வேண்டிய விடயம் என்னவெனில் இந்த இரண்டும் இருவேறு தளங்களில் இருப்பது தான். ஏனெனில் மனம் என்பது நிகழ்வுகளின் பதிவாகிய நினைவுகள். அதாவது நிகழ்வுகளின் ஒட்டுமொத்த உள்ளக ஈடுபாடு மனம். நிகழ்வில் உள்ளக ஈடுபாடு இன்றி சாதகமாகவோ அல்லது எதிராகவோ அந்த நிகழ்வு சார்ந்து வழங்கப்படும் அபிப்பிராயம் சாட்சி. மனம் ஒரு தளத்திலும் சாட்சி வேறொரு தளத்திலும் செயற்படுகின்றது. அனுபவமும் அபிப்பிராயமும் ஒரே தளத்தில் இருந்து செயற் படமுடியாதவை. ஒன்றில் மனமாக (அனுபவமாக) இருக்க வேண்டும் அல்லது சாட்சியாக (அபிப்பிராயமாக) இருக்கவேண்டும்.

சாதாரணமாக, மனச்சாட்சி என்பது ஒருவர் தானோ அல்லது பிறரோ நீதி நியாயத்துடன், மனித நேயத்துடன் நடந்து கொள்ள வேண்டும் என்ற எதிர்பார்ப்பு என எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றாக உள்ளது. எது நீதி? எது நியாயம்? எது மனித நேயம்? இந்த நீதி, நியாயம், மனித நேயம் என்பவை எல்லாம் மனிதனுக்கு மனிதன், சமூகத்துக்கு சமூகம் வேறு பட்டிருக்கின்றதே ஏன்? ஒரு சமூகத்தில் அநியாயமானது எனக் கருதப் படும் ஒரு விடயம் இன்னொரு சமூகத்தில் நியாயமானதாகக் கருதப்படுகிறதே எப்படி? இந்த வேறுபாடுகளையும், முரண்பாடுகளையும் கவனத்தில் கொள்வோமாயின் மனச்சாட்சி என்பது நாம் கருதிக்கொண்டிருக்கும் நீதி, நியாயம், மனித நேயம் என்பவை அல்ல. அப்படியானால் மனச்சாட்சி என்றால் என்ன?

மனச்சாட்சி என்பது நாம் சார்ந்து வாழும் சமூகமானது தனது நன்மை கருதி உருவாக்கி எமக்குள் திணித்திருக்கும் ஒரு 'அளவுகோல்' மட்டுமே. அதாவது, நாம் சார்ந்து வாழும் சமூகமானது, தனது நன்மைக்காக அது சார்ந்த கொள்கைகள், கோட்பாடுகள், தத்துவங்கள், சட்ட விதிகள், ஒழுக்க விதிகள் எனப் பலவற்றை படிப்படியாக எமக்குள் திணித்து அதன் மூலம் நாம் ஒவ்வொருவரும் நாமாகவே உள்வாங்கிக் கொண்டு உருவாக்கியிருக்கும் ஒரு அளவுகோல் தான் மனச்சாட்சி. இந்த அளவுகோல் மனிதனுக்கு மனிதன், சமூகத்துக்கு சமூகம் வேறுபட்டுள்ளது என்பதும் கவனத்தில் கொள்ளல் வேண்டும். உங்களது மனச்சாட்சி என்பது நீங்கள் உள்வாங்கிக் கொண்டவற்றை அடிப்படையாக வைத்து உங்களால் உருவாக்கப்பட்டிருக்கும் ஒரு அளவுகோல் மட்டுமே.

**KG Master:** --
www.kgmaster.com
www.facebook.com
kgmaster.lifecoach

அன்பார்ந்த விளம்பரம் வாசகர்களுக்கு: வாழ்வியல் சார்ந்த எனது ஆக்கங்கள் எழுத்து வடிவில் 'விளம்பரம்' பத்திரிகை யிலும் ஒலிவடிவில் கீதவாணி வானொலியிலும் இடம்பெறுகின்றன. இயலுமான வரை இவற்றை உங்கள் உற்றார், உறவினர், நண்பர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள். - நன்றியுடன் KG Master


அமைதியின் குரல் - Words of Peace

அன்பு, அமைதி, ஆனந்தம், கடவுள் எனப் பல பெயர் கொண்டு அழைத்தாலும் விடயம் ஒன்றுதான். நீங்கள் வெளியே தேடும் ஆனந்தமும் நிம்மதியும் உங்களின் உள்ளேதான் உள்ளது. தேடுங்கள். எல்லா இடங்களிலும் தேடுங்கள். கிடைக்கவில்லை என்றால் என்னிடம் வாருங்கள். அதனை நீங்கள் உங்கள் வாழ்வில் அனுபவிப்பதற்கு என்னால் உதவிசெய்ய முடியும். - மஹராஜி

1-877-707-3221 / தமிழில் - 416.431.5000

- MAHARAJI -

மஹராஜியின் உரைகள்

On DVD
இலவச DVDக்கு அழையுங்கள்
(416) 431-5000
1 877 707 3221

On TV
Saturdays at 11:00 am
Rogers Cable Channel - 20
Bell Express vu Channel - 219



# வாகன...

08ஆம் பக்கத்தொடர்ச்சி

பொது மக்களின் பணத்தினை கையாளும் காப்புறுதி கம்பனிகள் வழக்கு தொடர்ந்தவர்கள் ஒவ்வொருவருக்கும் பணத்தினை அள்ளி கொடுக்கபோவதில்லை. விபத்து தொடர்பாக பல கட்டங்களில் புலன் விசாரணைகள் பாதிக்கப்பட்டவருக்கு பாதிப்பின் நிஜம் தொடர்பான மருத்துவ பரிசோதனைகள் இவர்கள் உண்மை தகவல் பேசுகின்றார் என்ற துப்பு துலக்கல்கள், இப்படியெல்லாம் கடந்து வந்தே நட்டஈடு எவ்வளவு என்பது முடிவு பண்ணப்படும் என்பதும் பாதிப்பில் தவிர்த்தவர்களை வழி நடத்தும் சட்ட மேதைகளுக்கு தெரியாத விடயமல்ல! இது உதாரணத்திற்கு ஒரு சம்பவம்! இப்படியான நீதிமன்ற ஆணைகளை நம்மவர்கள் பலரும் கனடாவில் எதிர்கொண்டுள்ளனர். நம்மவர்கள் பலரும் மில்லியன் டொலர் கற்பனையில் பொக்கற்றுக்குள் இருந்த



பணத்தை தவறவிட்டுள்ளனர்.

சரி! இனி விடயத்திற்கு வருவோம், இப்படியான பெருந்தொகை நட்டஈடுகளை விபத்துகளின் போது கோருவது என்பது எப்போது சாத்தியப்படும்?
அதுவே இதுவரை அறிந்து கொள்ளவில்லை யானால் அறிய வேண்டிய தகவல் பகுதியாகும்.

கொடுமையான உடல் பாதிப்புகளுக்கான மேலதிக வழக்கு தொடர்ந்து பெறும் நட்டஈடு (TORT CLAIMS)

விபத்தில் தப்புக்குரியவர் மீது வழக்கு தொடர்ந்து பெருந்தொகையினை நட்டஈடாக பெற முயற்சிப்பதனை ஆங்கிலத்தில் (TORT CLAIMS) என குறிப்பிடப்படும். விபத்தினை உருவாக்கியவருக்கு 'Tortfeasor' என ஆங்கில அகராதியில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த மாதிரியான நட்டஈடு கோரல் தொடர்பாக கனடாவின் வக்கீல் திரு. ஸ்ரீவ் ராஸ்ரின் பின்வருமாறு ஆங்கில கட்டுரை ஒன்றில் குறிப்பிடுகின்றார்.

'While every person who is injured in a car accident in ontario has eligible to receive accident benefit. But not every one will have tort claim'

சரி! பிழை! எந்த பக்கமிருந்தாலும் விபத்தில் காயமடைந்த எவரும் நட்டஈடு பெறலாம். ஆனால் அவர்கள் எவரும் இந்த பெருந்தொகை பணத்தினை (Tort claim) நீதிமன்ற வழக்கின் மூலம் பெறமுடியாது. விபத்துகளில் காயமடைந்தவர்கள், அங்கு தப்பு என்பது எந்தப்பக்கமிருந்தாலும் பிரச்சினையில்லை. அவரவர் தங்கள் தங்கள் வாகன காப்புறுதி கம்பனிகளினூடாக வெவ்வேறு பிரிவுகளின் கீழ் (Statutory Accident Benefits) நட்டஈடு பெறலாம். வாகன காப்புறுதியில்லாதவரும் அரச நிதியம் ஒன்றுக்கு விண்ணப்பித்து அவரவரே நட்டஈடு கோரலாம். இது நிஜமான உடல் காயத்திற்கு உள்ளாகியிருந்தால் இலகுவாக நட்டஈடு பெறும் வழி இதுவாகும்.

ஆனால் வக்கீல் மூலம் விபத்தினை உருவாக்கியவர் மற்றும் அவரது காப்புறுதி கம்பனிக்கு எதிராக வழக்கு தொடர்ந்து பாரிய தொகை நட்டஈடு பெற வேண்டுமானால் பின்வரும் இரு நிலைப்பாடுகளில் அவரது நிலைமை இருக்க வேண்டும் என்பதனையே இங்கு கட்டுரையாளர் தெரிவிக்கின்றார்.

1. வாழ்வினை நிரந்தரமாக முடக்கும் அளவுக்கு அல்லது அன்றாட வாழ்வில் தடை ஏற்படும் நிலைமைக்கு உடல் காயம் இருத்தல் வேண்டும். (Serious & Permanent catastrophic impairment)

2. விபத்தில் தப்பு என்பதில் நட்டஈடு கோருபவர் பூரண நிரபராதியாகவிருத்தல் வேண்டும்.
(You must be not at fault in accident)

மேற்குறிப்பிட்ட இரு நிலைமைகளையும் நிரூபிப்பதற்கு எத்தனையோ விதமான உடல் பரிசோதனைகள், உளவியல் பரிசோதனைகள், தொடர்ந்து சமூக ஈடுபாடுகள் மறுவாழ்வு தொடர்பான பரிசோதனைகள், அவர்கள் வழங்கும் அறிக்கைகள், இவை யாவற்றுக்கும் எதிர்தரப்பு காப்புறுதி கம்பனியின் சட்ட அறிஞர்கள் வழங்கும் மறுப்பு அறிக்கைகள் (Defense reports) போன்ற பல எல்லைகளை தாண்டி உடல் காயம் வாழ்வினை எவ்வாறு பாதித்துள்ளது என்பதனை மதிப்பீடு செய்த பின்னரே பெருந்தொகை பணம் நட்டஈடாக காப்புறுதி கம்பனி வழங்க வேண்டும் என நீதிமன்றம் தீர்ப்பு வழங்கும். மில்லியன் டொலர்களையும் முழுவதுமாக காப்புறுதி கம்பனி பாதிக்கப்பட்டவரின் கையில் வழங்குவதில்லை. அந்த தொகை பலதரப்பட்ட வழிகளில் அவரின் புனர்வாழ்வுக்கு உபயோகப்படுத்தப்படும்.

இப்படித்தான் காப்புறுதியின் இரண்டாவது கட்ட கொடுப்பனவுகள் (Insurance tort claim settlement) வழங்கப்படுகின்றது என்பது அனுபவ ரீதியாக எதிர்கொண்டவர்களுக்கு தெரியும். இது தொடர்பான பல நீதிமன்ற வழக்குகளை படித்தவர்களுக்கும் புரியும். இவற்றைப் புரிந்து கொள்ளாது விபத்துகளில் உருவாகி சில நாட்களின் பின்பு அறவே குணமாகிவிடும் நோவுகளுக்கு எல்லாம் இந்த இரண்டாவது கட்ட நட்டஈடு கோரலுக்கு இடமில்லை. ஆனால் இதை முயற்சிக்கலாம் என கற்பனை பண்ணி வழக்குத் தொடர சட்ட மேதைகளை அணுகினால் அவர்கள் பக்கம் பக்கமாக குற்றசாட்டு வசனங்களை உருவாக்கி வழக்கு தாக்கல் செய்து விட்டு பணம் அறவிடுவார்கள். மேலே குறிப்பிட்ட உதாரண சம்பவங்கள் மாதிரி பணம் அறவிடுபவருக்கு முடிவு எப்படி அமையும் என்பது தெரியாமல் இருந்திருக்காது. எவரும் எவருக்கு எதிராகவும் வழக்கு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யலாம். ஆனால் நீதி தேவதை எதனையும் நம்பி விடும் அப்பாவி அல்ல.

# அறுபது வயதிலும் அழகுமுகம் நிறைமதி போலே நிலவெறிக்கும்



தந்தை சந்திர காந்தனுக்குச்
சந்தன குணத்துச் சான்றவர்க்கு
சிந்தை நலத்துச் செம்மலுக்கு
வந்தது தானோ மணிவயதே!

அறுபது வயதிலும் அழகுமுகம்
நிறைமதி போலே நிலவெறிக்கும்
அறிவொளிச் சிறப்பும் அன்புடன்நல்
அறநெறி ஒழுக்கமும் அதில்தெரியும்!

ஆன்மிகச் செல்வர் அருளாளர்
தேன்சுவைப் பேச்சின் திருவாளர்
கோன்மையும் வணங்கும் குருமகனார்
மேன்மைகொள் தமிழின மேதகையார்!


தந்தை அமுதுப் புலவரைப்போல்
செந்தமிழ்ப் பண்பைச் சீராட்டிச்
சந்ததம் வளர்க்கும் தன்மானச்
சந்திரத் தலைவர் இவர்நமக்கே!

கேளா தவரையும் கேட்கவைப்பார்
வாழா தவரையும் வாழவைப்பார்
ஆளா தவரையும் ஆளவைப்பார்!
தாளை வணங்கி வாழ்த்திடுவோம்!

கோலக் குருவே தங்களது
காலத்தில் வாழ நாங்களிந்த
ஞாலத்தில் நல்ல தவம்செய்தோம்
சாலச் சிறந்தே வாழியவே!

சொல்லாண்டு வாழ்வின் சுகமாண்டு
பல்லோரும் வாழ்த்தும் மனமாண்டு
வல்லாரும் போற்றும் அருங்குருவே
பல்லாண்டு பல்லாண்டு பல்லாண்டு

அமுதப் புலவர் கவிதையைப்போல்
அமிழ்தத் தமிழின் சுவைநலம்போல்
சுமைகள் தாங்கும் இயேசுபிரான்
இமயப் புகழ்போல் வாழியவே!



**கவிஞர் வி. கந்தவனம்**


## LAW OFFICE
## STEFANO FORTINI
B.A., LL.B., Barrister & Solicitor

*3 Catherine Avenue,*
*Aurora, Ontario*
*L4G 1K4*

*Tel: 416.999.4376*
*Fax: 905.727.7017*
*Email: sfortini@rogers.com*


## பேராசிரியர் எக்ஸ்.எஸ்.தனிநாயகம் அடிகளார் நூற்றாண்டு விழா –ஆகஸ்ட் 2013

இந்த ஆண்டு அடிகளாரின் நூற்றாண்டு கொண்டாட்டத்தின் ஒரு அங்கமாக தனிநாயக அடிகளார் புகழ் பேசும் பேச்சுப்போட்டி மாணவர்களிடையே வரும்
**காலம்:** ஜூன் மாதம் 9ஆம் திகதி 2013 **நேரம்:** காலை 9 மணிக்கு
**இடம்:** ஸ்காபறோ சிவிக் சென்ரில்
நடைபெறும் என்பதனைப் பங்குபற்றும் போட்டியாளர்களுக்கும் பெற்றோருக்கும் அறியத்தருகின்றோம். தயவு செய்து யாவரும் காலை 8.45 மணிக்குச் சிவிக் சென்ரருக்குச் சமூகந்தந்து தங்கள் பதிவுகளை உறுதிப்படுத்தி உரிய கட்டணத்தினைச் செலுத்தும்படி அறியத்தருகின்றோம்
பங்குபற்றுவோர் பிரிவுகள் 7-8 வயது, 9-10 வயது, 11-12 வயது, 13-14 வயது, 15-21 வயது

பேராசிரியர் தனிநாயக அடிகளார் நூற்றாண்டு விழா
பேச்சுப் போட்டி நிகழ்வுக் குழு

# JEN BOOK STORE

**Scarborough நகரில் ஒரு புத்தகசோலை**

***Ontario* பாடத்திட்டத்திற்கு ஏற்ப புத்தகங்கள்**

***JK* தொடக்கம் *Gr 12* வரையிலான**

அனைத்து பாடப்புத்தகங்கள் **(Text Books)** மற்றும் அனைத்து செயல்நூல்களும் **(Work Books)** மிகவும் மலிவு விற்பனையில் உள்ளன.

உங்கள் பிள்ளைகளின் வளமான எதிர்காலத்திற்கு நல்லதோர் தொடக்கம்

**JEN BOOK STORE.**

உங்கள் பிள்ளைகள் **Math, English, Science** ஆகிய பாடங்களில் பின்தங்கி உள்ளார்களா? கவலைவேண்டாம். இலவச ஆலோசனைகளுடனும் அவர்களின் தேவைகளுக்கு ஏற்ப ஏற்ற புத்தகங்களை கனடாவில் பன்னிரண்டு வருடங்கள் அனுபவமிக்க ஆசிரியர்களால் தேர்ந்து எடுத்து தருகிறார்கள்.




***3011 Markham Road, Unit 58 M1X 1L9***

***TEL: 416.738.8824 / 416.335.1500***

# மரணம் - இழப்பு - ஓர் அனுபவம்

அனைத்து நண்பர்களுக்கும் வணக்கம். மீராபாரதி இரண்டுவாரங்களுக்கு முன்னர் ஒரு மின்னஞ்சல் அனுப்பி இருந்தார்.

மரணித்தவர்களை நினைவு கூறல்...
அஞ்சலி செய்வதற்கான உரிமையை வலியுறுத்தல்...
இழந்தவர்களை ஆற்றுப்படுத்தல்...
இவர்கள் வாழ்வை மேம்படுத்தல்
போன்ற கருத்துக்களை வலியுறுத்துவதை நோக்கமாகக் கொண்டு, 'மரணம் இழப்பு மலர்தல்' என்ற நூல் வெளியீட்டை மே மாதம் 19ம் திகதி நிகழ்த்த விரும்புகின்றேன். அதில் கலந்து கொண்டு உரையாற்ற முடியுமா என்று?

புத்தகத்தை வாசிக்க முன்னரே எனக்குள் இந்த விடயங்கள் பெரிய உற்சாகத்தை ஒருவித நம்பிக்கையை... பெரும் ஆர்வத்தை ஏற்படுத்தியது. பேசப்பட வேண்டிய பொருள்... இன்னமும் நமக்குள் பேசப்படாத பொருள். அதனால் உடனடியா சம்மதம் தெரிவித்துவிட்டேன்.

புத்தகத்தை முழு மூச்சில் வாசித்து முடித்தேன். வாசித்து முடித்து விட்டு புத்தகத்தை தூக்கி ஒரு மூலையில் போட்டு விட்டு போய்விடலாம். ஆனால் இந்தப் புத்தகம் ஏற்படுத்திய தாக்கத்தை தூக்கிப் போட்டுவிட்டு போகவே முடியாது.



நாம் எல்லோருமே பிறந்ததில் இருந்து மரணத்தை நோக்கியே பயணம் செய்கின்றோம். அது இயற்கையாகவும் வரும்... செயற்கையாகவும் வரும்.

முதன் முதலாக யாருடைய மரணம் உன்னைப் பாதித்தது? என்ற கேள்வி இந்தப் புத்தகத்தை வாசிக்கின்ற ஒவ்வொருவருக்கும் வரும்.

**- செழியன் -**

எனக்கு முதன் முதலாக கவலை வந்தது அப்பா கவலைப்பட்டதைப் பார்த்து. சமர்செட் தோட்டத்தில் ஆசிரியர் அவர்.

பள்ளி முடிந்து நானும் தம்பிமாரும் குளிப்பதற்காக பீலி என்று சொல்லப்படுகின்ற இயற்கையான நீர் விழுகின்ற இடத்திற்கு புறப்பட்ட போது அப்பா எங்களை எல்லாம் கவனிக்காமல் அன்றைய வீரகேசரியை எடுத்து தலையங்கத்தை பார்த்து விட்டு 'ஓ' என்று சொல்லி கவலையோடு உச்சிகொட்டினார்.

அப்பா ஏன் கவலைப்பட்டார் என்று மனம் துடிதுடித்தது. குளித்து விட்டு வந்து வீரகேசரியை எடுத்து தலையங்கத்தைப் பார்த்தேன். 'அறிஞர் அண்ணாவுக்கு மீண்டும் புற்று நோய்' என்று தலைப்பு செய்தியாக இருந்தது. அன்று தான் முதன் முதலாக நான் பத்திரிகை வாசித்தது. பிறகு அது அப்பா வாசிக்கின்ற கல்கி, சுதந்திரன் பத்திரிகை என்று ஆகியது.

யார் இந்த அறிஞர் அண்ணா? என்று அம்மாவிடம் கேட்டேன். வீட்டில் மாட்டியிருந்த ஒரு பெரிய படத்தின் நடுவில் நின்று கொண்டிருந்தவரைக் காட்டி இவர்தான் பேறிஞர் அண்ணா என்று சொன்னார்கள். சுற்றிவர பல பேருடைய படங்கள் இருந்தன. பிறகு பிறகு தெரிந்து கொண்டேன். கருணாநிதி, நெடுஞ்செழியன்.... என்று ஒரு படையே இருந்தது.

பிறகு ஒரு நாள் அப்பா அழுதார். அறிஞர் அண்ணா இறந்து விட்டார் என்று. அவருக்கு அந்த உரிமை அன்று இருந்தது.

மலையக தோட்டமான சமர்செட்டில் எங்கள் வீடு தனிமைப்பட்டு இருந்தது. கூக்குரல் போட்டாலும் யாருக்கும் கேட்காது. எங்களுக்கு பாதுகாப்பாக இருந்தது எங்கள் செல்லப் பிராணியான செல்வம் என்ற நாய். (செல்வம் அண்ணை தயவு செய்து மன்னிக்கவும்)

நாங்கள் குளிக்க போனாலும் கூடவரும் எமது முதல் நண்பர்களான ஜஸ்டின் அம்முண்டி வீட்டுக்கு விளையாடப் போனாலும் வரும். எங்கள் அப்பா இரவில் செல்லும் போதும் போகும்.

அப்படி ஒரு நாள் இரவு அப்பாவுடன் எங்கள் நாய் சென்றது. சென்ற நாய் வரவில்லை. அப்பா மட்டும் பதட்டதுடன் வந்தார்.

நான் நித்திரைக்காக சென்றிருந்தேன்.

அம்மாவுடன் கதைத்து விட்டு 'தம்பி' என்று அப்பா என்னைக் கூப்பிட்டார். ஏதோ பிரச்சனை என்று எனக்கு தெரிந்தது.

'வாங்கோ ஒருக்கா' செல்வத்தை வேகமாய் போன கார் அடிச்சுப் போட்டுது. அதை தூக்கித்தான் கொண்டுவர வேண்டும்.
உடனேயே நானும் அப்பாவும் அந்த இடத்திற்குச் சென்றோம். ஒரு மோட்டு சாரதியால் அடிபட்டு பேச்சு மூச்சில்லாமல் இரத்தம் சிந்த அமைதியாக கிடந்தது எங்கள் அன்புக்குரிய நாய்.

அப்பா இரண்டு மூன்று தடவை பெயர் சொல்லிக் கூப்பிட்டார். பிறகு தொட்டுப்பார்த்தார்.

'தம்பி செத்துப் போச்சுதடா' என்றார்.

எனக்கு அழுகை அழுகையாக வந்து. ஒரு உயிருக்காக நான் அழுத முதல் அழுகை அது. அப்பா எனது அழுகையை தடுக்கவில்லை. ஒரு உயிருக்காக அழுகின்ற உரிமை எனக்கு அப்போது இருந்தது.

எங்கள் நாயை ஒரு சாக்கில் தூக்கி வளர்த்தி இரண்டு பேருமாக தூக்கிக் கொண்டு வீடு வந்தோம். அடுத்த நாள் காலை எப்படியோ விடயம் அறிந்து ஜஸ்டினும் அம்முண்டியும் வந்து நாய்க்கு முன்னால் குந்தி இருந்து அழுது கொண்டிருந்தார்கள்.

ஒரு நாய்காக தமிழன் நானும் சிங்கள நண்பர்கள் இரண்டு பேரும் அழுவதற்கான உரிமை அன்று இருந்தது.

இன்று இருக்கிறதா?

போரில் இறந்து போன தன்னுடைய மகளுக்காக ஒரு தாய்க்கு அழுகின்ற உரிமை அவளுக்கு இருக்கின்றதா?

மகளுக்காக மகனுக்காக ஒரு விளக்கை ஒரு மெழுகுதிரியை கொழுத்தி வைக்கும் உரிமை ஒரு தாய்க்கு இருக்கின்றதா?



இறந்து போன பிள்ளைக்காக உறவினர்களை கூட்டி ஒரு நினைவஞ்சலி செய்கின்ற உரிமை தமிழர்களுக்கு இருக்கின்றதா?

இந்தக் கேள்விகளை எழுப்பிச் செல்கின்றது இந்த நூல்.

என்னை மிகவும் உணர்வு பூர்வமாக இந்த நூல் பாதித்துள்ளது. நிச்சயமாக எல்லாரையுமே பாதிக்கும்.

இலங்கைத் தமிழர்களின் வரலாற்றில் போராட்டம் பற்றிய பல புத்தகங்கள் வந்துள்ளன. இந்த வரிசையில் வந்ததுதான் இது. ஆனால் இது புதிது. நண்பர் மீராபாரதிக்கு எனது வாழ்த்துக்கள்.

மீராபாரதிக்கு இந்த விதையை விதைத்தவர் அவருடைய அப்பா என்றே என்னால் கருதமுடிகின்றது.

இன்று கனடாவில் குடும்பத்தில் நாலு பேர் இருந்தால் நால்வருமே. நான்கு கிரகங்களில் வாழ்வதைப் போல வாழுகின்றோம்.

ஒரு பிள்ளை தொலைக்காட்சியில் வாழும், மனைவி இந்திய நாடகங்களில் வாழ்வார், இன்னொரு பிள்ளை தொலைபேசியில் வாழும், அடுத்த பிள்ளை இன்டநெட்டில் வாழும்.

மீராபாரதி. மற்றும் எமது காலங்களில் எங்கள் அப்பா அம்மா தான் எமது தொலைக்காட்சி, தொலை பேசி, நாடகம், இன்டநெட். அதனால் அவர்களிடம் இருந்து கற்றுக் கொண்டோம். அவர்கள் பாதையை இன்னமும் செப்பனிட்டு தொடர்கின்றோம்.



அன்பான நண்பர்களே மீராபாரதி சொல்வது போல நீங்கள் எதற்காக முதல் அழுதீர்கள் என்று சிந்தியுங்கள். பின்னர் இன்றைய சமூகத்தில் அழுவதற்கான உரிமை இருக்கின்றதா? என்று உங்களுக்குள் ஒரு கேள்வியை கேளுங்கள். கூடவே இந்தப் புத்தகத்தை வாசியுங்கள்.

சின்மயா வேதாந்த மரபு மையத்தில் நடைபெற உள்ள சின்மயானந்த ஆன்மீக நிறுவனத்தின் அகிலத் தலைவர் ஸ்வாமி தேஜோமயானந்தர் அவர்களின் 'பகவத்கீதை' ஆன்மீகப் பேருரை


எதிர்வரும் ஜூன் 2ம் திகதி அன்று மாலை 5.00 மணி முதல் 7.00 வரை, ***Chinmaya Vedantha Heritage Centre, Chinmaya Sivalaya. located at 8832. Gore Road, Brampton, ON. L5P OB1*** என்ற முகவரியில் சின்மயானந்த ஆன்மீக நிறுவனத்தின் அகிலத் தலைவர் பூஜ்ய சுவாமி தேஜோமயானந்தா அவர்களின் ஆங்கில ஆன்மீகப் பேருரை 'The Message of Bhagavad Gita' - என்ற தலைப்பில் இலவச சிறப்பு நிகழ்ச்சி நடைபெற உள்ளது.
ஆன்மீக நாட்டம் உள்ள அனைவரும் கலந்து பகவத்கீதை காட்டும் வாழ்வியல் நெறிகளையும் தத்துவங்களையும் புரிந்து பயன்பெற்று கலந்துச் சிறப்பிக்கவும்.

மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்:
சாமி: 416.356.7859 / விஜய சாதனா: 416.287.0250 / 905.913.2377
www.chinmayatoronto.org

# Malayal Bhagawathi Joythidam

## Pandit Tulsidhar Swamiji








### 100% Guaranteed Result

கேரளாவிலிருந்து வருகை தந்துள்ள பிரபல ஜோதிட வல்லுனர் பல இடங்களுக்கு சென்று தற்போது கனடா வந்துள்ளார். இவர் கைரேகை, சாதகம், முகநாடி ஆகியவை கொண்டு மிகத்துல்லியமாக நடந்தவை, நடக்க இருப்பவை பற்றிய விபரங்களைக் கூறுவார். இவற்றை எல்லாம் அறிந்து பரிகாரம் செய்து கொள்ள ஒரு முறை என்னை சந்தியுங்கள்.

- கைரேகை
- கல்வி, உத்தியோகம்
- வதிவிடப் பிரச்சினைகள்
- குடும்ப பிரச்சினைகள்
- குழந்தை பாக்கியம்
- எதிரிகள் பிரச்சினைகள்
- கர்ப்ப தோஷம்
- நாம நட்சத்திரம்
- தொழில் வியாபாரம்
- நீதிமன்ற வழக்குகள்
- திருமண யோகம்
- கணவன் மனைவி ஒற்றுமையின்மை
- சர்ப்ப தோஷம்
- கஸ்ட நஷ்டங்கள்

**Tel.:647.856.0559**

GTA Square Mall (2nd Floor)
5215 Finch Ave. E., Unit #257
Scarborough ON M1S 0C2
(FINCH & MIDDLEFIELD)

**Open 7 Days A Week, 10:00 am - 8:00pm**

# கிராமியப்பாடல்கள்

கருத்துச் செறிவும் இன்ப ரசனையும் மிக்கவை கிராமியப் பாடல்கள். தம் மனதில் உதித்தவற்றை அல்லது கேள்விப் பட்டவற்றை வைத்துக்கொண்டே பாடல்களை இராகத்தோடு இசைத்துப் பாடும் பாரம்பரியம் கிராமியத் தமிழ் மக்களிடம் நிலவிவந்த பண்டைய இலக்கிய மரபு எனலாம். இசை வடிவங்களின் தோற்றுவாய் கிராமப் புறங்களாகவே இருந்துள்ளன. பாடல்களும் ஆடல்களும் பல்வேறு வடிவங்களில் வெவ்வேறு கிராமிய மக்களால் பின்பற்றப் பட்டு வந்துள்ளன. ஈழத்திலும் கிராமிய இசைவடிவங்கள் பல்வேறு வடிவங்களில் ஆடல் பாடல் இணைந்தவை யாகவும் செய்திகளை வெளிக்காட்டுவன வாகவும் அமைந்துள்ளன. மனதில் உள்ள கருத்தை வெளிப்படுத்தும் வகையிலே கிராமியப் பாடல்கள் யதார்த்தமானவையாக வும் உண்மைத் தன்மையானவையாகவும் உள்ளவற்றை உள்ளபடி சொல்லுந் திறன் மிக்கவையாகவும் அமைந்துள்ளன. கிராமிய இசையில் மட்டக்களப்பு பிரதேசம் மிகவும் சிறப்பு மிக்க பல்வேறு இசைக் கோலங்களைக் கொண்டுள்ளமையைக் காணமுடிகின்றது. அவ்விதமே மலையக மக்களிடமும் உள்ள கிராமிய இசைவடிவம் தமிழகத்தோடு இணைந்த வடிவிலே அமைக்கப்பட்டனவாக உள்ளன.

நான் உன்னை நினைத்திருக்க என்னை இன்னொருவனுக்குக் கட்டிக்கொடுத்து விட்டார்களே எனத்தனது உள்ளக் கிடக்கையை எடுத்துரைக்கின்றாள் ஒரு அபலை:

செம்பிலே சிலைஎழுதி - மாமா
செல்வத்திலே நான் பிறந்தேன்
வம்பிலேதான் கைகொடுத்து - மாமா
வார்த்தைக் கிடம்ஆனேனே 1

இப்பாடலிலே செம்பிலே சிலை எழுதி உள்ளுறை உவமம் தொக்க நின்று பாடல்வரிகளை உச்சத்திற்குக் கொண்டு செல்வதனை அவதானிக்கமுடிகின்றது. செம்பு எப்பொழுதும் பளபளக்கும் தன்மை கொண்ட உலோகம். அதனை ஒத்தவளாக என்னைப் படைத்தது மட்டுமல்ல நான் நல்ல வசதியான இடத்தில் பிறந்தேன். நான் எதிர்மாறான முறையிலே என்னை ஆளாக்கி மற்றவர்களின் பழிச்சொல்லுக்கு அளாகி விட்டேன் என அவள் தனது உள்ளத:த உணர்வுகளை மனவேதனையைப் புலப்படுத்துகின்றாள். தான் எதிர்பார்த்திருந்த முறை மாப்பிள்ளைக்கு

கண்டி கொழும்புங்கண்டேன் - சாமி
கருங்குளத்து மீனுங்கண்டேன்
ஒண்டி குளமும்கண்டேன் - சாமி
ஒயிலாளைக் காணலையே 2

ஏழுமலைக் கந்தப்பக்கம் - சாமி
இஞ்சிவெட்டப் போனபக்கம்
கண்சிவந்து வந்ததென்ன -சாமி
கடுங்கோபம் ஆனதென்ன? 3

மூக்குத்தித் தொங்கலிலே -குட்டி
முந்நூறு பச்சைக்கல்லு
ஆளைத்தான் பகட்டுதடி -குட்டி
அதிலேஒரு பச்சைக்கல்லு. 4

சந்தனம் உரசுங்கல்லு -குட்டி
தலைவாசலைக் காக்குங்கல்லு
மீன்உரசுங் கல்லுக்கடி -குட்டி
வீணாசைப் பட்டாயோடி. 5



**- த. சிவபாலு -**
B.Ed (Hons), M.A

ஆசைக்கு மயிர்வளர்த்து -மாமா
அழகுக்கொரு கொண்டைபோட்டுச்
சோம்பேறிப் பயலுக்குநான் -மாமா
சோறாக்க ஆளானேனே 6

வெள்ளைவெள்ளை நிலாவே -சாமி
வெளைச்சமான பால்நிலாவே
கள்ள நிலாவேநீ -சாமி
கருக்கவிட்டால் ஆகாதோ? 7

கும்பகோணம் ரெயிலுவண்டி -குட்டி
குடிகெடுத்த தஞ்சாவூரு
தஞ்சாவூரு தாசிப்பொண்ணு -குட்டி
தாயைமறக் கடிச்சாளடி. 8

வெட்டிப்போட்ட காட்டுக்குள்ளே -குட்டி
வெறகொடிக்கப் போறபொண்ணே
கட்டைஉன்னைத் தடுத்திடாதா -குட்டி
கரடிபுலி தாவிடதா? 9

ஆத்திலே தலைமுழுகி -குட்டி
ஆயிரங்கால் பட்டுடுத்தி
ஊத்துப்பக்கம் உட்காந்துநீ -குட்டி
போட்டுக்கோடி வெற்றிலையை. 10

கொக்குப் பறக்குதடி -குட்டி
கோணல்வாய்க்கால் மூலையிலே
பக்கத்திலே உட்கார்ந்துநீ -என்னைப்
பதறவிட்டுப் போனோயேடி. 11

காப்புக் கலகலென்னைக் -குட்டி
கைவளையல் ரெண்டும்மின்ன
மூக்குத்தி வேறேமின்னக் -குட்டி
முகமுங்கூட மின்னுதடி. 12

வண்டியும் வருகுதடி -குட்டி
வடமதுரை டேசனிலே
தந்திபோய்ப் பேசுதடி -குட்டி
தம்புசெட்டி மெத்தையிலே. 13

காளைநல்ல கறுப்புக்காளை -குட்டி
கண்ணாடி மயிலைக்காளை
சூடுவச்ச வெள்ளைக்காளை -குட்டி
சுத்துதடி மத்தியானம். 14

ஆறுசக்கரம் நூறுவண்டி -குட்டி
அழகால ரெயிலுவண்டி
மாடுகண்ணு இல்லாமதான் -குட்டி
மாயமாத்தான் ஓடுதடி. 15
பூத்தமரம் பூக்காதடி -குட்டி
பூவில்வண்டு ஏறாதாடி
கன்னிவந்து சேராவிட்டால் -என்
காதடைப்பும் தீராதடி. 16

செக்கச் சிவந்திருப்பாள் -குட்டி
செட்டிமகள் போலிருப்பாள்
லாரி முடிஞ்சிருப்பாள் -குட்டி
வந்திருப்பாள் சந்தைக்கடை. 17

முட்டாயி தேங்குலமு -குட்டி
முறுக்குலட்டுப் பூந்திவடை
தட்டாமே வாங்கித்தரேன் -குட்டி
தங்கமே நீ வாய்திறந்தால். 18

பாசம் பிடிக்கும்தண்ணி -குட்டி
பலபேர் எடுக்கும்தண்ணி
அத்தைமகள் எடுக்கும்தண்ணி -குட்டி
அத்தனையும் முத்தல்லவோ? 19

நீட்டினகால் மடக்காமல் நீ-அடி
நெடுமுக்காடை எடுக்காமலே
காட்டினாயே கருமூஞ்சியை-அடி
கருங்கழுதை மூஞ்சிபோலே. 20

எக்கர் மாஅத்துப் புதுப்பூம் பெருஞ்சினை
புணர்ந்தோர் மெய்ம்மணங் கமழும்
தண்பொழில்
வேழவெண்பூ வெள்ளுகை சீக்கும்
ஊரன் ஆகலின் கலங்கி
மாரி மலரின் கண்பனி யுகுமே.

அறுசில் கால அஞ்சிறைத் தும்பி
நூற்றிதழ்த் தாமரைப் பூச்சினை சீக்கும்
காம்புகண் டன்ன தூம்புடை வேழத்துத்
துறைநணி யூரனை உள்ளியென்
இறையேர் எல்வளை நெகிழ்புஓ டும்மே.

MOHAN
HOMEOPATHIC CLINIC
& MASSAGE CLINIC

- கழுத்து, முதுகு நோவு
- வாகன விபத்து
- மன அழுத்தம்
- விளையாட்டுக் காயங்கள்
- தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் டாக்டர் ஜே. மோகன்



Dr. J. Mohan
D.H.M.S., N.H.C.

WE OFFER CONSULTATION
REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:

- STRESS
- SKIN PROBLEM
- RESPIRATORY PROBLEMS
- DIGESTIVE PROBLEMS
- VARICOSE VEINS
- BACK PROBLEM /NECK PROBLEM
- TENNIS ELBOW PROBLEM
- TREAT WITH MASSAGE THERAP
- ALLERGIES
- SEXUAL PROBLEMS
- SEXUAL PROBLEMS
- CHOLESTEROL
- TUMOR
- FOOT PROBLEM

HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING

| | | | |
|---|---|---|---|
| Cough | Tonsillitis | Migraines | Prostatitis |
| Flu | Gout | Hair Loss | Obesity |
| Depression | Arthritis | Diabetes | Hemorrhoids |
| Anxiety | P.M.S | Cystitis | Stumatitis |
| Asthma | Leucorrhea | Cancer | Colitis |

Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER

TEL: 416-298-7537/416-291-3022
5200 Finch Ave, East Suite 210
At Middle Field, Scarborough, M1S 4Z4

விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு
www.vlambaram.com
www.tamilvanakkam.com


CARELESS DRIVING
IMPAIRED DRIVING
RED LIGHT
REDLIGHT (CAMERA)
SPEEDING
SEAT BELT
NO INSURANCE
STOP SIGN
SKTHEESAN@GMAIL.COM
TRAFFIC TICKETS
MOTOR VEHICLE ACCIDENT
CRIMINAL MATTERS (SUMMARY)
416- 803- 5296
KALAKALAPPU
THEESAN
MEMBER OF LAW SOCIETY OF UPPER CANADA
SKTPARALEGAL SERVICE

கலகலப்பு தீசன்


# அப்பாவும் மகனும்

## மின்வலையில் வந்தவை - 31

வயது - 4 - அப்பாவுக்கு யாவும் தெரியும்.

வயது - 6 - அப்பாவுக்கு எல்லாம் தெரியாது.



- துறையூரான் -

வயது - 8 - எனது அப்பாவின் காலத்தில் யாவும் வித்தியாசமாய் இருந்தன.

வயது - 14 - சொகுசுக்காரா, அப்பா ஒரு பழங்கிடையன்.

வயது - 21 - எனது கிழட்டுக்கு ஒரு மண்ணுந் தெரியாது.

வயது - 25 - இவ்விடயம் பற்றி அப்பாவுக்குக் கொஞ்சம் தெரியும். ஆனால் அவற்றை வயசுக்கு இது ஒரு சாதாரண விடயம்.

வயது - 30 - இந்த விடயம் பற்றி அப்பாவின்ரை அபிப்பிராயத்தையும் நான் கட்டாயம் கேட்க வேணும்.

வயது 35 - நான் எந்த விடயத்தையும் செய்வதற்கு முன் முதலிலை அப்பாவிட்டைக் கேட்காமல் செய்யக் கூடாது.

வயது - 50 - அப்பா இதை என்ன மாதிரிச் செய்வார்?

வயது - 60 - அப்பா எவ்வளவு புத்திசாலி. அப்போது நான் இதைப் பாராட்டவில்லை. அவர் இப்போது உயிருடன் இருந்திருக்க வேணுமென விரும்புகிறேன். நான் அவரிடமிருந்து எவ்வளவு படித்திருப்பேன்.

# பாடகர் *TM* சௌந்தரராஜன் காலமானார்



பின்னனி பாடகரும், இசைகலைஞருமான T.M.S என அழைக்கப்படும் T.M சவுந்தரராஜன் தனது 91வது வயதில் சென்னையில் மரணமானார். 1923 மார்ச் 24 மதுரையில் பிறந்த இவர் 1950 ஆண்டு திரையிசை பாடகராக அறிமுகமானார். ஏராளமான விருதுகளை பெற்றவருக்கு 2003 ஆண்டு பத்மஸ்ரீ விருது வழங்கப்பட்டது.


PRE CONSTRUCTION CONDOS FOR SALE
DOWNTOWN & OTHER AREAS

HARBOUR PLAZA RESIDENCE
90 HARBOUR STREET

YONGE & RICH
25 RICHMOND STREET E.


Price starting
$250K & up






Call For VIP Pricing & Other Incentives


RE/MAX
Vision Realty Inc. Brokerage.
A. Anton Jeeva B.Eng
Real Estate / Principal Mortgage Broker
Dir: 416.575.5055


கனடாவில் முதன்முறையாக
Federation of Tamil Sangams of North America
வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவை
கனடியத் தமிழர் பேரவையுடன் இணைந்து வழங்கும்
300இற்கும் அதிகமான கனடா, அமெரிக்கா மற்றும்
பன்னாட்டுத் தமிழ்க் கலைஞரோடும் அறிஞரோடும்
தமிழ் போற்றும் இயல் இசை நாடகப் பெரு விழா
தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளாரின்
நூற்றாண்டுச் சிறப்பு விழா
26ஆவது ஆண்டு
FeTNA
TORONTO '13
தமிழ் விழா
July 4 – 7
Sony Centre | Toronto
பாடகர் மனோ ரொறன்ரோவின் அக்னி இசைக்குழுவுடன் வழங்கும் மெல்லிசை
கவிஞர் யுகபாரதி தலைமை தாங்கும் கவியரங்கம்
நடிகர் இளவரசு தலைமை தாங்கும் பட்டி மன்றம்
மனுவேல் யேசுதாசன் தமிழ் இலக்கியத் தோட்டத்துடன் இணைந்து வழங்கும் வேந்தனின் சித்திரம் எழுத்து நாட்டுக்கூத்து
பிரேம் கோபால் கனடியக் கலைஞரோடு வழங்கும் நடன நிகழ்ச்சி
கலைமாமணி ரோபோ சங்கர் வழங்கும் நகைச்சுவை அரங்கம்
மதுரை முரளீதரன் வழங்கும் கல்கியின் சிவகாமியின் சபதம் நாட்டிய நாடகம்
முனைவர் தமிழருவி மணியன் வழங்கும் சிறப்புச் சொற்பொழிவு
அத்துடன்
தமிழிசை
வணிக அரங்கு
இளம் தொழில் முனைவோர் கருத்தரங்கு
இளையோர் பட்டறைகள்
போட்டிகள்
தமிழ் மொழிப் போட்டி
இலக்கிய வினாடி வினா
தமிழ்த் தேனீ
மாணவர் போட்டிகள்
இன்னும் பல முத்தமிழ் நிகழ்வுகள்
Gold Sponsors
SERANDIB TRAVEL
Exclusive TV Partner
ATN
Silver Sponsors
Gary Anandasangaree
AMBIKA
SKYWAY
Meenakshi Mission Hospital & Research Centre
IDHAYAM
Canadian Tamils' Chamber of Commerce
DYNEVOR EXPRESS
OLYMPIA
Media Supporters
TV
Radio
News Paper
Online
Other
PearMedia
நுழைவுச் சீட்டுகளுக்கும் பதிவுகளுக்கும்
Scarborough
Eras CD - Eglinton - Finch 416-269-1716
Eelam Thulir Video 416-495-0155
Vlambaram Tamil News 416-282-8059
Murugan Book Store 416-321-0285
New Spice Land - Sheppard 416-618-0551
New Spice Land - Steeles 416-292-0789
Sun City Supper Market 416-433-6344
Etobicoke/ Toronto
Uthayas Video 416-624-7971
Iyappan Grocery 416-636-0884
New Rajan Saloon 416-742-4663
Asia Gold 416-748-2742
Kalaimahal Book Depot 416-921-6018
Mr.Digital Photo Lab 416 643 5149
New R.P Supper Market 416-401-0040
Markham
Markham Video 905-294-4253
Nantha Catering 416-626-8421
Mississauga
Kaveri Super Market - Vithus Video 905-290-6826
Vanni Chanthai 905 566 5550
Brampton
Phoenix Video 905-796-5885
Columbia Video 905-456-8433
For Details:
1-416-240-0078 (Toronto)
1-302-252-7818 (USA)
www.fetna2013.com
@fetna2013
facebook.com/fetna2013
வட அமெரிக்கத் தமிழரின் உணர்வுமிகு தமிழ் விழா
ONTARIO CANADA
INVEST TORONTO
Tourism Toronto

# HOMELIFE/GTA REALTY INC.,

BROKERAGE, INDEPENDENTLY OWNED AND OPERATED

Tel: 416 321 6969 | Email: gtarealty@gmail.com

## Dream is Yours Obligation is ours

### One of the Successful Real Estate Brokerage in GTA

- Over 100% Commission*
- Income for Life *
- Free Real Estate Class Starts every week
- Office in a Busy mall, Ample Underground parking
- 2 Brokers and 1 Manager with over 50 years combined experience always available for your assistance
- Working closely with reputable builders, Developers and Management Companies
- 24 Hours Accessibility
- Office Open Everyday
- In House free CEU Courses

* Subject to in-house Conditions



CALL US AT
416 321 6969

To join our Successful team - call us at 416 321 6969 or mail us at gtarealty@gmail.com



**Raja Mahendran**
Broker/Owner



**Justin William**
Broker/ Manager



**Eddie woo**
Broker of Record/ Owner

# திரைவிமர்சனம் - சூது கவ்வும்

'ஒன்று அல்லது இரண்டு காதல் ஜோடிகள் அவர்களுக்கு நான்கு ஆடல் பாடல்கள். ஒரு குத்துப்பாட்டு, ஒரு சோகப்பாட்டு சீரான இடைவெளியில் நான்கு சண்டைக் காட்சிகள், இடையிடையே நகைச்சுவை நடிகர்களின் சிரிப்பு' இப்படி ஒரு வகைமையில் வெளிவந்து கொண்டிருக்கும் அலுப்பூட்டும் தமிழ்ச் திரைப்படங்கள் வரிசையில் சமீப காலங்களில் சிறு மாற்றம். குறும்பட இயக்குநர்களின் வருகை, தமிழ் திரைப்படங்களில் இருந்த இந்த தேய்வழக்குகளை (க்ளிசே) நீக்கி, இந்த வகைமையில் இல்லாத ஒரு வெற்றிப்பட வரிசையை உருவாக்கியிருக்கிறது. அதில் கடைசியாக சேர்ந்திருக்கிறது 'சூது கவ்வும்'!

வடிவேல் உச்சத்தில் இருந்த கால கட்டங்களில், பெரும்பாலான படங்களில், திருட்டையும் நகைச்சுவையையும் சேர்த்து புனையப்பட்ட காட்சிகள் சில இடம்பெற்றன. அதுவே முழுநேரக் கதையாக இருந்தால், சூது கவ்வும் அப்படித்தான் இருக்கிறது. சற்று மனநிலை பிறழ்ந்த நாற்பது வயது கடத்தல்காரர், விஜய் சேதுபதி. ஆள் கடத்தல் தொழில் செய்யும் இவருடன் சந்தர்ப்பவசத்தால், சென்னையில் பிழைப் பின்றி போகும் மூன்று இளைஞர்கள் கூட்டணி சேர்கிறார்கள். இளைஞர்களில் ஒருவன் திருப்பூரில் நயன்தாராவிற்குக் கோவில் கட்டியதால் மக்களால் அடித்துத் துரத்தப்பட்டவன் சென்னைக்கு ஓடி வருகிறான். மற்றொருவன், வேறு வேலை எதுவும் இல்லாததால், காலையிலேயே சீக்கிரமாக எழுந்து குளித்துவிட்டு, பவ்யமாக தண்ணியடிக்க அமருபவன். இன்னொருவன், வேலையைப் பறிகொடுத்தவன். ஐ.டி. துறையில் வேலை பார்த்தவன். அவனை ஒரு தலையாக உடன் பணியாற்றும் பெண் காதலிக்கிறாள். ஆனால், இவன், அவளைக் காதலிக்காததால், நிர்வாகத்திடம் தவறாக போட்டுக் கொடுத்துவிடுகிறாள். இதனால், இவன் வேலை பறிபோகிறது. இந்த மூன்று இளைஞர்களுக்கும், யாருக்கும் ஆபத்தில்லாத வகையில், ஆயுதம் இல்லாமல், துன்புறுத்தல் இல்லாமல், ஆட்களைக் கடத்தி சம்பாதிக்கும் வழிமுறையை சேதுபதி கற்றுக்கொடுக்கிறார். அதற்கு ஐந்து விதிமுறைகளும் வைத்திருக்கிறார், சேதுபதி.

பொதுமக்களையே மிரட்டும் வகையிலான புத்திசாலித்தமான திட்டங்களைப் போட்டு இலாவகமாகத் தப்பிக்கும் குற்றவாளி கும்பல் இல்லை இவர்கள். ஒரு அமைச்சரின் மகனைக் கடத்துகிறார்கள். அமைச்சரின் மகனோ இவர்களுடனேயே கூட்டணி சேர்ந்து பணத்தை பங்கீட்டுக்கொள்ள விரும்பம்



தெரிவிக்கிறான். அதற்கும் தலையசைக் கிறார்கள். ஆனால், கடத்தல் வேன் விபத்துக்குள்ளானதில் அந்தத் திட்டம் தோல்வியடைகிறது. ஆனாலும், நேர்மை யான அமைச்சரோ தீவிர முனைப்பினால் 'மோதல் கொலை காவல்துறை அதிகாரி' பிரம்மாவிடம் இவர்களைத் தேடும் வேலையை ஒப்படைக்கிறார். அவர் சென்னைக்கு மாற்றலாகி வந்து இவர்களைத் தேடத் தொடங்குகிறார்.

இனி இவர்கள் கதி அவ்வளவுதான் என நினைத்துக்கொண்டிருக்கும் போது, ஓட்டைத் திருட்டுத் துப்பாக்கியை பின்புறம் சொருகும் போது தவறுதலாக தன்னையே சுட்டுக்கொள்கிறார், பிரம்மா. சேதுபதி கும்பல் 'மோதல் கொலையில்' இருந்து தப்பிக்கிறது. சேதுபதி கூட்டாளிகள் பெரிய இடங்களில் சேர்ந்து செட்டிலாகிவிட, சேதுபதி மேலும் சில புதியவர்களை சேர்த்துக்கொண்டு, ஐந்து விதிமுறைகளுடன் ஆபத்தில்லாத கடத்தல் தொழிலைத் தொடர்கிறார். தன்னுடைய ஆள் கடத்தல் தொழிலுக்கு ஐந்து கொள்கைகளை சேதுபதி விதித்திருப்பது நகைச்சுவையாக இருந்தாலும், அது அவருடைய குருட்டுத்தன மில்லாத பயத்தையும் துணிச்சலையும் காட்டுகிறது. முதல் கொள்கையே அதிகாரத்தின் மீது கை வைக்கக்கூடாது என்பதுதான். ஆனால், அதனை மீறும் சேதுபதியின் கும்பல், நிதி அமைச்சரின் மகனைக் கடத்தப் போய்த்தான் பெரிய சிக்கலில் மாட்டிக்கொள்கிறார்கள். இறுதி வரை துரத்த துரத்த போலிசாரால் தோற்கடிக்கப்படுகிறார்கள். தன்னுடைய முதல் கொள்கையை மீறிய இடத்திலேயே தோற்கடிக்கப்பட்டு கைது செய்யவும் படுகிறார்கள். இதுவரை குற்றவாளிகள் அல்லது கடத்தல் கும்பல் தொடர்பான அனைத்துவிதமான தமிழ் சினிமா பிம்பங்களையும் களைத்துப் போடுகிறது படம். மொத்தப் படத்திலும் ஒரே ஒரு பெண்




மட்டும் வருகிறார். அவரும் கற்பனைப் பாத்திரம்தான். மனநலம் சிதறுண்ட விஜய் சேதுபதி கண்களுக்கு மட்டுமே தெரிகிறார். சேதுபதி மாமன் மகள் அவர். கடவுளிடம் பேசும் இறைதூதர்கள் போல, இல்லாத காதலியுடன் எந்நேரமும் பேசுகிறார், சேதுபதி. பழங்கால கூத்து மற்றும் நாடகங்களில், இடையிடையே வந்து விமரிசனம் செய்து கதையை நகர்த்தும் கட்டியங்காரன் செய்வதை இங்கு காதலி செய்கிறார். சேதுபதியின் கற்பனை மாமன் மகளாக நடித்திருப்பவர், சஞ்சிதா ஷெட்டி. 'சொதப்பிட்டியே மாமா' என்ற வசனத்தை இவர் உச்சரிக்கும்போது அரங்கம் சிரிப்பலையில் அதிர்கிறது. எப்போதும் அரை நிக்கர் அல்லது அதற்கும் கம்மியான உடையுடன் (நீச்சல் உடையுடனும்) வரும் இவர் கவர்ச்சியையே வித்தியாசமாக காட்டியிருக்கிறார்.

லஞ்சம் வாங்காத நேர்மையான அமைச்சராக எம்.எஸ். பாஸ்கர் வருகிறார். ஊழல் செய்ய மறுத்ததால், தலைவரின் விருப்பத்திற்கு இணங்க, ஆடம்பர வாழ்க்கையை விரும்பும் மகன், அப்பாவை வீட்டில் உட்கார வைத்துவிட்டு, அமைச்சராகிறான். இதுபோன்று சிரிப்பும் சத்தமுமாக நகரும் சுவாரஸ்யமான கதைகளில் பெரும் தடையே பாடல் காட்சிகள் தான். இந்தப் படத்திலும் அதுதான் பெரும் இடைஞ்சலாக இருக்கிறது. 'காசு, பணம், துட்டு' பாடல் காட்சி எடுக்கப்பட்டவிதம் அருமை என்றாலும், படத்தின் வேகத்தை சற்றே குறைக்கத்தான் செய்திருக்கிறது..! காமிக்ஸ் படம் போல எடுத்திருப்பதாலோ என்னவோ, இசையும் சற்று அடங்கிப் போய்த்தான் இருக்கிறது..! ஆள் கடத்தலை மையமாக வைத்து வெளிவந்திருக்கும் படத்தில் ரத்தம், மரணம் போன்ற குரூரங்கள் இல்லாதது படத்தினுடைய சிறப்பு.

மண்ணில் பிறந்த மானிடர் யாவரும் இறையருளைப் பெற்று முக்தி பெற வேண்டும். அதற்கு நான்கு படிநிலைகள் உள்ளன. பிரமச்சரியம், கிருகஸ்தம், வானப்பிரஸ்தம், சந்நியாசம் என்கின்ற நான்கும் அவை. இதில் முதல் கூறிய மூன்று நிலைகளும் ஆணுக்கும், பெண்ணுக்கும் பொதுவாகும். சந்நியாச ஆச்சிரமம் ஆணுக்கு மட்டும் என்பது பழைய இந்திய, இந்து வாழ்வியல் முறையாகும்.

அப்படியானால் சந்நியாசம் என்னும் உயர்ந்த படிநிலை பெண்ணுக்கு மறுக்கப்பட்டுள்ளதா? இது அநீதியல்லவா என்று பலருக்குத் தோன்றும். ஆனால் உண்மை அதுவல்ல. ஒரு பெண் பெண்ணாக வாழ்வதே சந்நியாசம் தான். திருமணம் செய்து கொள்ளும் பெண் ஒருத்தி உண்மைத் துறவியின் சகல அனுபவங்களையும் பெறுகின்றார்.




நெடுநாளாக தான் பழகிய, தன்னைப் பின்னிப் பிணைந்த சகல பந்தங்களையும் உதறி எறிந்து விட்டு கடவுளிடம், சந்நியாசி புறப்படுகின்றான். அதே போன்றுதான் மணப்பெண்ணும் புறப்படுகின்றார். தாய், தந்தை, உற்றார், உறவினர் அனைவரையும் உதறி விட்டுத்தானே கணவனுடன் புறப்படுகின்றாள். பந்தங்களைவிட்டு ஜீவாத்மா பரமாத்மாவுடன் இணைவது துறவு என்றால் கணவனுடன் மனைவி தன்பந்தங்களை விட்டு இணைவதும் துறவுதானே. துறவு தீட்சா நாமம் என்று புதுப்பெயர் பெறுவது போன்று மனைவி திருமதி கணவன் என்று புதுப்பெயர் ஏற்கின்றாள்.

குலம், கோத்திரம் எல்லாம் அப்பா குடும்பத்தில் இருந்து கணவன் குடும்பத்தை சார்ந்து மாறுகின்றது. இவை எல்லாம் சந்நியாசிகள் கூறுகள் தானே! பல ஆண்டுகளாக இருந்த தன் பழக்க வழக்கங்கள், உணவு, ருசி, சமையல் எல்லாம் கணவன் வீட்டிற்கேற்ப மாறுகின்றதே! கணவனுக்குப் பிடித்தவை, தனக்குப்பிடித்தவை என்று மாற்றிக் கொள்கின்றாள். இவை எல்லாம் துறவு நிலை தான். காவி கட்டுவது மட்டுமல்ல துறவு. இன்ப துன்பங்கள் தன்னைச் சார்ந்ததாக இல்லாமல் தன் நலம் சார்ந்ததாக இல்லாமல் பிறர் சார்ந்ததாக இருப்பதே துறவின் உயிர். இதை அளவு கோலாகக் கொண்டால் பிள்ளைகளுக்காகவும் கணவனுக்காகவும் தன்னை, தன்நலத்தை, தன் சுகங்களை இழந்து வரும் தமிழ் பெண்கள் யாவரும் துறவியரே!

துறவியின் செயல்கள் யாவும் தவம் தானே! இல்லற விளக்காகிய பெண்ணின் செயல்கள் கணவனைப் பிரிந்து தவித்தல் உட்பட தவம் தானே! கணவன் மனைவியைப் பிரிந்து தவித்தால் அது விரகதாபம். மனைவி கணவனைப் பிரிந்து அழுதால் அது தவம்.

ஆற்றின் ஒழுக்கி அறன் இழுக்கா இல்வாழ்க்கை நோற்பாரின் நோன்மை உடைத்து.
கண்ணகியின் தவம் பாண்டியன் அவன் மனைவி ஆகியோரை அழித்தது. சீதையின் தவம் இராவணனை அழித்தது.

'ஒன்னார்க் தெறலும் உவந்தாரை ஆக்கலும் எண்ணித் தவத்தான் வரும்.'



நா. க. சிவராமலிங்கம்

# நான் விரும்புவதைப் பெற்றுக்கொள்ள

**நான் விரும்புவதைப் பெற்றுக்கொள்ள இப்போ நான் தயாராக இருப்பதால், நம்பிக்கையின் சக்தியை அனுபவித்து அதை நான் பிரகடனப்படுத்துகிறேன்.**

**இன்று உனக்கு அதிர்ஷ்டமான நாள்! ஆமாம்! இன்று விரும்பிய எதையும் நீ பெற்றுக்கொள்ளலாம். நீ அடையவும் செய்யவும் விரும்பிய அனைத்தையும் கேட்டால் இன்று நீ பெற்றுக்கொள்ளலாம். இப்போ உன் வாயைத் திறந்து கேள்! நீ விரும்பிய எதையாவது கேள்! அது பெரிதோ - சிறிதோ, எதுவானாலும் பரவாயில்லை. அது உனக்கு வேண்டுமென்று கேள்! அதற்குப் பதிலாக எதையும் தரும்படி உன்னிடம் ஒருவரும் கேட்கமாட்டார்கள். கேட்பதைத் தவிர நீ வேறு எதையும் செய்யத்தேவையில்லை. வாழ்வு உன் பக்கம் இருப்பதை நீ அங்கீகரிக்கும்போது நீ விரும்புவதை வாழ்வு உனக்குக் கொடுக்க விரும்புகிறது என்பதை நம்பினால் இப்போ வாயைத் திறந்து நீ விரும்புவதை கேள்! நீ விரும்புவது உனக்குக் கிடைத்தால், அதை உன்னால் வெற்றிகரமாகச் சமாளிக்க முடியும் என நீ நம்பினால் அதை உனக்குத் தரும்படி கேள். நீ விரும்புவதைப் பெற்றுக்கொள்வதற்கு அத்தியாவசியமான தகுதி உனக்கு இருக்கிறது என நீ நினைத்தால் தயங்காது அதைத் தரும்படி கேள்! கடினமாக உழைத்துப் போராடாமல் நீ விரும்புவது உனக்குக் கிடைக்கும் என நம்பி முற்றுமுழுதாய் உன்னை நீ நேசித்தால் தாமதமின்றி விரும்பியதைக் கேள். வெறுப்பு, கோபம், பயம்,**



**மனஸ்தாபம் போன்ற எதிர்மறை உணர்வுகளைக் தவிர்த்து திறந்த இதயத்துடன் விரும்புவதைக் கேள். விரும்புவது உனக்குக் கிடைக்க நீ தகுதிவாய்ந்த உரிமை உள்ளவன் என நம்பினால் வாயைத் திறந்து அது உனக்கு வேண்டுமென்று கேள்! நீ விரும்பியவை சகலதும் உனக்குக் கிடைத்ததும் பிறர் உன்னைப்பற்றி என்ன பேசுவார்கள் என்பதைப்பற்றி பயப்படாவிட்டால், உனக்கு விரும்பியதைக் கேட்டுப்பெற்றுக்கொள். என்ன, ஏன் தயங்குகிறாய்? மேற்கூறிய தகுதிகளுக்கமைய உன்னை மாற்றி மேம்படுத்திக்கொண்டு நீ மிகவும் விரும்பும் ஏதாவது ஒன்றை உன்னால் கேட்டுப் பெற்றுக்கொள்ள முடியாதா?**

**வாழ்வில் மிகவும் விரும்புபவற்றை அப்படியே பெற்றுக்கொள்ள நீ என்ன செய்யவேண்டும் என்பது இன்றுவரை உனக்கு சரிவரப் புரியாமல் இருந்திருக்கலாம். விரும்பியதைப் பெற்றுக்கொள்பவருக்கு என்ன தகுதிகள் இருக்க வேண்டும் என்பதை இன்று அலசி ஆராய்ந்து அறிந்து கொள். உனது எதிர்மறை தீய பழக்கவழக்கங்களையெல்லாம் கைவிட்டு அவ்வாறு தகுதி வாய்ந்தவராக உன்னை நீயே மாற்றிக்கொண்டு நீ விரும்பியவற்றைப் பெற்றுக்கொள்.**

**நான் விரும்பியவற்றை சரிவரப் பெற்றுக்கொள்ள என்னென்ன விதங்களில் என்னை நான் மாற்றி ஆயத்தப்படுத்திக் கொள்ள வேண்டுமோ அவற்றையெல்லாம் செய்வதில் இன்றுமுதல் மும்முரமாக ஈடுபடப்போகிறேன்.**

ஆளுமை வளர்ச்சிக்குப் பிரார்த்தனைகள் 221


மேலதிக தகவல்களுக்கு
அழையுங்கள் 905-270-1214
416.907.6897



லலிதா புருடி


AMBIHA SILK (Fancy Jewellery)


FINCH & MIDDLEFIELD



இந்தியாவில் இருந்து நேரடியாக இறக்குமதி செய்யப்பட்ட உயர்தர
Gold கவரிங் தலிக்கொடி, Gold Bangle, செயின், பதக்கம்,
மணப்பெண் அலங்கார நகைகள், Fancy Necklaces
வித்தியசமான Designகளில் மற்றும் Saree, Shalwar, Top
இவை எல்லாவற்றையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள
அழையுங்கள்: 416.297.5261



# நமக்கு முக்கியம் நண்பர்களா? உறவினர்களா?




என் இனிய நண்பர்களே! வாழ்த்துக்கள் நலம் பெறப் பிரார்த்திக்கிறேன். நம்முடைய இன்றைய வாழ்க்கையில் தேவைகள் அதிகமாகி விட்டன. ஆசைகளும் அதிகமாகி விட்டன. தேவைகள் முக்கியமானவை. ஆசைகள் அலைக்கழிப்பவை. "ஆசை அறுமின்கள்! ஆசை அறுமின்கள்! தேவனோடாயினும் ஆசை அறுமின்கள்." என்றார் ஓர் ஆன்மீகச் செல்வர். ஆசைப்பட்டேன் கண்டாய் அம்மானே! என்று பழுத்த ஞானியாகிய மாணிக்கவாசகர் சிவபெருமானிடம் வேண்டினார். இவருடைய ஆசை சிவபெருமானுடைய முகவொளி நோக்கி அவர் முறுவலிப்பதைக் காண விரும்பிய ஆசையாகும். நமக்கும் அப்படியான ஆசை வரலாம். அந்த ஆசை நம்முடைய தேவைகளையும் நிறைவேற்றி வைக்கும். அந்த ஆசையை ஆத்ம இலக்கணம் என்பார்கள். நமது ஆத்மாவை இலக்கணப்படுத்தினால் நமது தேவைகள் நல்ல இலக்கியங்களாக மலரும், மணம் பரப்பும்.

நண்பா!

நமது ஆத்மாவின் இயல்புகளை இலக்கணப்படுத்துவது கடினமான சிக்கல் நிரம்பிய முயற்சிதான். நிதானமாக இந்த முயற்சியில் முனைப்பு காட்டி வெற்றி கண்டு விட்டால் வாழ்க்கையில் நிம்மதியும் திருப்தியும் சாத்தியமாகும். வாழ்க்கைத் தேவைகள் முறையாகவும் நிறைவாகவும் கிடைத்து விட்டால் திருப்தி உண்டாகும்.



தேவைகள் முறையாகவும் சரியாகவும் கிடைப்பதற்கு மனிதர்களுக்கு வேண்டிய இரண்டு ஊக்கிகள்: உறவுகளும், நட்புகளுமே. உனக்கு என்ன தெரியும் என்பது முக்கியமில்லை. உனக்கு யாரைத் தெரியும், எவரோடு உறவும், நட்பும் வைத்திருக்கிறாய் என்பதுவே முக்கியம். 'ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்' என்ற நமது பழமொழி உறவையும், நட்பையும் முடிந்த அளவு பேணிக் கொள்ள வேண்டும் என்பதற்காகவே எழுந்தது. 'குற்றம் பார்க்கில் சுற்றம் இல்லை' என்பது மந்திரமொழியல்லவா?

உறவுகள் இரத்தத் தொடர்புடையவை. நட்புகள் இதயத் தொடர்புடையவை. இரத்தமும் இதயமும் ஆரோக்கியமாய் இருந்தால் உடல் திடகாத்திரமாய் இருக்கும். உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேன்! என்ற திருமூலர் திருமந்திரம் சுத்த இரத்தமும், இதய சுத்தியும் முக்கியமானவை என்று வலியுறுத்துகின்றது. உடம்பை வளர்த்தல் என்பது புள்ளி மான் போல் துள்ளி ஓடவும், புள்ளி மயில் போல் ஆடவும் ஆனந்தமய கோசத்தில் அகமகிழவும் உடலை அப்பியாசங்களால் வார்த்து எடுப்பதாகும். வாழ்க்கைத் தேவைகளின் அச்சாணி போன்ற உறவும் நட்பும் உள் ஒன்று வைத்துப் புறம் ஒன்று பேசாமலும், கொண்டும், கொடுத்தும், இன்ப அன்புடன் பழகியும், நன்றியும் மதிப்பும் பாராட்டியும், இரங்கியும் உருகியும் மன அப்பியாசங்களால் விஞ்ஞான மய கோசத்தால் எல்லோரும் எல்லாருக்குமாய் வாழும் நிலை தோன்ற வேண்டும் என்பதற்காகவே நாம் ஆலயங்களில் இன்பமே சூழ்க! எல்லோரும் வாழ்க! என்று பிரார்த்தனை முடிவில் இறைவனிடம் வேண்டிக் கொள்கின்றோம்.

தொடர்ச்சி 37ஆம் பக்கம்




# இரண்டு பறவைகள்

ஒரு நாட்டில் மிகவும் அழகிய பறவை ஒன்று இருந்தது. அது அந்நாட்டின் அரண்மனை தோட்டத்தில் வாழ்ந்து வந்தது. இந்தப் பறவை ராஜ குடும்பத்தினரால் செல்லப்பிராணி போல் வளர்க்கப்பட்டது. அது ஒரு கவலையும் இன்றி வாழ்ந்து வந்தது. இதேநேரம் அதே வடிவும் அதே மாதிரி குரலும் உள்ள இன்னொரு பறவை, காட்டில் வாழ்ந்து வந்தது. அது காட்டில் வாழ்ந்தபடியால், கடினமான வாழ்க்கையை வாழ்ந்து வந்தது. அந்தக் காட்டில் இருந்த பறவைக்கு ஒரேயொரு நண்பனாக ஒரு காகம் தான் இருந்தது.

இப்படி பல காலமாக தோட்டத்தில் ராஜ பறவையும், காட்டில் காட்டுப்பறவையும் வாழ்ந்து வந்தன. ஆனால் ஒரு நாள் நாடு முழுவதும் பெரிய புயல் காற்று அடித்தது. மரங்கள் விழுந்தன. அரண்மனையும் காற்றில் அசைந்தது. தோட்டத்திலிருந்த பறவை காற்றில் தூக்கி எறியப்பட்டது. காட்டுப் பறவையையும் காற்று எடுத்து கொண்டு சென்றது. புயலில் இரு பறவைகளும் சுத்திக் கொண்டு இருக்கையில், ஒருவரையொருவர் கண்டு ஆச்சரியப்பட்டனர். அடுத்த நிமிடம் காட்டுப் பறவை தோட்டத்திலும், தோட்டப்பறவையும் காட்டிலும் தூக்கி வீசப்பட்டன.

அடுத்த நாள் காலையில் தோட்டத்திற்கு அரண்மனை வேலையாள் ஒருவர் வந்தார். காட்டுப்பறவையை கண்டு, ‘இங்கே தானா



இருக்கிறது,’ எனக் கூறி காட்டு பறவையை அரண்மனைக்குள்ளே எடுத்து ஒரு கூட்டில் அடைத்து விட்டார். ‘இப்போதைக்கு வெளியே செல்லாதே’, என்றார்.

சிலநாள் சாப்பாடு தேடத் தேவையில்லை என்பதால் காட்டுப் பறவை சந்தோசப்பட்டது. ஆனால் தான் கூட்டில் அடைக்கப்பட்டதை துண்டாக விரும்பவில்லை. அரண்மனையில் பலர் கூட்டிலிருந்த பறவைக்கு சாப்பாடு, தண்ணீர் போட்டு, சில நேரம் நின்று அதைப் பார்த்துச் சென்றனர். அது தனிமையில் பெரும்பாலான நேரம் இருந்தது.

இதேநேரம் அரண்மனை பறவை சில நாள் சுதந்திரத்தை விரும்பியது. ஆனால் பிறகு காட்டில் மிகக் கஷ்டத்துடன் வாழ்ந்து வந்தது. தனக்காக சாப்பாட்டைத் தேட அதற்குத் தெரியாது. காட்டுக் காகத்திற்கு அரண்மனைப் பறவையை கண்டவுடனே அது தன் நண்பன் அல்ல எனப் புரிந்தது. ஆனாலும் அது அரண்மனை பறவைக்கு சாப்பாடு தந்து உதவி செய்தது.

அரண்மனை பறவையும், காகமும் மறுபடியும் இரு பறவைகளையும் சரியான இடத்திற்கு கொண்டு போகலாம் என்று திட்டம் போட்டன. இரண்டும் அரண்மனை ஜன்னல் வழியாக திறந்திருந்த நேரம் பார்த்து உள்ளே சென்றன.

அங்கு தன் போல் இருந்த இன்னொரு பறவை தன் கூட்டில் வசிப்பதைக் கண்டு அரண்மனை பறவை அதிசயப்பட்டது. காகம் கூட்டின் பூட்டை திறந்து காட்டுப் பறவையை விடுவித்து, அரண்மனை பறவையை உள்ளே வைத்து கதவை பூட்டியது. அதன்பின்னர் ஒவ்வொரு பறவையும் தனக்கு விரும்பியவாறு தாம் விரும்பிய இடத்தில் வாழ்ந்து வந்தன.

**நீதி: தொட்டில் பழக்கம் சுடுகாடு வரைக்கும்**



**ஞா. ஆரணி**
**அகவை 14**

## இளையோர் ஆக்கம்

இதில் 19 வயதும் அதற்கு உட்பட்டவர்களும் தமிழில் எழுதும் சொந்த ஆக்கங்கள் கதை, கட்டுரை, கவிதை எதுவாக இருந்தாலும் தரமானதாயின் பிரசுரிக்கப்படும்.

# தமிழ் திரையுலகம் மாறிக்கொண்டிருக்கிறதா?

## நேர்காணல்: நலன் குமாரசாமி

தமிழ் திரையுலகத்தினர் எல்லோரும் ஒரு ஷாக்கில் இருக்கிறார்கள் என்றே சொல்லலாம். ‘அட்ட கத்தி’, ‘நடுவுல கொஞ்சம் பக்கத்தைக் காணோம்’, ‘பீட்ஷா’, இப்போது கடைசியாக ‘சூது கவ்வும்’ படங்களின் வெற்றி பெரிய நடிகர்களை, இயக்குநர்களை கலவரப்படுத்தியிருக்கிறது. பெரிய நடிகர்களின் படங்கள் எல்லாம் வந்த வேகத்தில் அரங்கங்களைவிட்டு வெளியேறிக்கொண்டிருக்க, முன்பின் அறிமுகம் இல்லாத நடிகர்கள் நடித்த, மிக மிகக் குறைந்த முதலீட்டில் தயாரிக்கப்பட்ட இப்படங்களோ பெரிய வெற்றியைப் பெற்றிருக்கிறது. தமிழ் திரைப்படங்கள் தன் சரித்திரத்தில் ஒரு முக்கியமான மாற்றத்துக்கு தயாராகிக் கொண்டிருக்கிறதா? ‘சூதுகவ்வும்’ படத்தில் காதல் கிடையாது, செண்டிமெண்ட் கிடையாது. வெட்டு, குத்து, கொலைகள் நடக்கவில்லை, ஏன் கதாநாயகியே இல்லை. நடித்திருப்பவர்கள் யாருமே மக்களுக்கு தெரியாத முகங்களே! ஆனால், படம் வெளியாகி இரண்டு வாரங்கள் கடந்தும் பெரும் பரபரப்போடு ஓடிக்கொண்டிருக்கிறது. இது எப்படி சாத்தியம்?

‘சூது கவ்வும்’ படம் 90 லட்சம் செலவில் எடுக்கப்பட்டது. இதை நடிகர் சூர்யாவின் உறவினர் ஞானவேல்ராஜா 200 லட்சத்திற்கு வாங்கினார். சென்னையைத் தவிர மற்ற ஏரியா பூராவும் 600 லட்சத்திற்கு விற்றுவிட்டார். இவருக்கு மட்டும் லாபம் 400 லட்சம். இப்படி சின்ன பட்ஜெட்டில் எடுத்த இந்த படம் இவ்வளவு லாபத்தை எல்லோருக்கும் கிடைக்க வழி உண்டு பண்ணியிருக்கிறது. இந்தப் படத்தின் வெற்றியை பார்த்து ஏற்கனவே பெரிய நடிகர்களை வைத்து பெரிய முதலீடு செய்த தயாரிப்பாளர்கள் விழிபிதுக்கி நிற்கிறார்கள். ஏன் என்றால் இந்தப் படம் மக்களின் ரசனையையே மாற்றியிருக்கிறது. பழைய பாணி கதை சொல்லும் முறை இந்த படத்தில் உடைத்தெறியப்பட்டிருக்கிறது. இனி யதார்த்தமான கதை அமைப்பு கொண்ட திரைப்படங்களே மக்களிடம் நிற்குமா?

தெரிந்துகொள்ள இந்த படத்தின் இயக்குனர் நலன் குமாரசாமியை நமது ‘விளம்பரம்’ இதழுக்காக சந்தித்து உரையாடினோம்.

முதலில் எங்கள் வாசகர்களுக்காக சுருக்கமாக உங்களை அறிமுகப்படுத்திக் கொள்ளுங்களேன்?

என்னுடைய சொந்த ஊர் திருச்சி. ஆனால் வளர்ந்தது, படித்தது எல்லாம் புதுக்கோட்டை மாவட்டம் குலமங்களம். நான் பி.இ. மெக்கானிக்கல் இன்ஜினியரிங் படித்தேன். சினிமா மீது அதீத காதல் எனக்கிருந்தது. என் நண்பர் திருச்சியில் ஒரு பேக்கரி ஆரம்பித்தார். அதில் ஒரு வருடம் பணியாற்றினேன். அதன்பிறகு எங்கப்பா சொந்தமாக என்னையே ஒரு பேக்கரி ஆரம்பிக்க சொன்னார். எனக்கு அதில் விருப்பமே இல்லை. அப்போதுதான் கலைஞர் தொலைக்காட்சியில் நாளைய இயக்குனர் போட்டி வைத்தார்கள். அந்த போட்டியில் கலந்துகொண்டேன். அதில் நான் இயக்கிய குறும்படம் முதல் பரிசு வாங்கியது. என்னுடைய இந்த வளர்ச்சிக்கு வழி உண்டாக்கிக் கொடுத்தது கலைஞர் தொலைக்காட்சிதான் என்பதையும் அந்த நிறுவனத்துக்கு நன்றியையும் உங்கள் மூலமாகச் சொல்லிக் கொள்கிறேன்.

நீங்கள் எந்த இயக்குனரிடமும் உதவி இயக்குனராக வேலை செய்யவில்லையா?

ஆமாம், ஆனால் தமிழ் சினிமாவில் யாரிடமும் உதவி இயக்குனராக வேலை செய்யாமல் இயக்குனராக ஆனவர்கள் சரித்திரம் ஏற்கெனவே தொடங்கிவிட்டது. சுந்தர்ராஜன், மணிரத்தினம் உட்பட பலர் இருக்கிறார்கள். நான் இந்தப் பட்டியலில் கடைசியாக சேர்ந்தவன். அதிலும், மணிரத்தினத்தின் முதல் படத்திற்கு ஒளிப்பதிவாளராக பணியாற்றியவர் திரு. பாலுமகேந்திரா அவர்கள். பொதுவாக சினிமாவில் உதவி இயக்குனராக பல படங்களில் வேலை செய்து பின் அசோசியட் டைரக்டராகி, பிறகு இயக்குனராக ஆவார்கள். ஆனால், தற்போது கலைஞர் டி.வி. நாளைய இயக்குனர் நிகழ்ச்சி மூலமாக உங்களைப் போல் பலர் இயக்குனர்களாக ஆகிறார்கள். இதில் எது சிறந்த வழி என்று நீங்கள் கருதுகிறீர்கள்?



ஒரு இடத்தை சென்றடைய இரண்டு மார்க்கங்கள் இருக்கிறது. இதில் எது சிறந்த வழி என்று சொல்ல முடியாது. சபரிமலைக்கு பெரியபாதையும் இருக்கிறது, அதே நேரத்தில் பம்பையிலிருந்தும் பாதை இருக்கிறது. நோக்கம் ஐயப்பனை தரிசிக்க

தொடர்ச்சி 35ஆம் பக்கம்


உங்கள் தணியாத தாகத்தை
சாந்திப்படுத்தவும்
ஒரு முறை அருந்தினால் மீண்டும்
அருந்தத் தூண்டும் இயற்கைச்
சுவையுடன் கூடிய
SHERBET / FALUDA
குளிர்பானம்
Niru BRAND®
SHERBET
Drink
with Jelly
NO PRESERVATIVES
NET WT./POIDS NET : 290 ml
FALUDA
அன்றும், இன்றும் என்றும் புதிய
தரமான தயாரிப்புக்களை அறிமுகப்படுத்தும்
நிரு பிராண்டின் புதிய தயாரிப்பு
சகல தமிழ் வர்த்தக நிலையங்களிலும் கிடைக்கின்றது.

# தமிழ் திரையுலகம்...

33ஆம் பக்கத்தொடர்ச்சி

வேண்டும் என்பதே.

கலைஞர் டி.வி.க்காக நீங்கள் இயக்கிய குறும்படத்தின் கதை எதைப் பற்றியது?

இந்த சூதுகவ்வும் மாதிரியான ஒரு கதையம்சம் கொண்டதுதான்.

சூதுகவ்வும் படத்தின் கதையை தயாரிப்பாளரி டம் முதலில் சொல்லும்போது, அவர் என்ன சொன்னார்?

முதலில் இந்த கதையை முழு திரைக்கதையாக எழுதி, ஸ்கிரிப்டாகத்தான் கொடுத்தேன். அவர் படித்து பார்த்து கூப்பிட்டு நீங்களே இதை பண்ணுங்கள் என்றார்.

இந்த படத்திற்கு விஜய் சேதுபதியை கதா நாயகனாக தேர்வு செய்தது எப்படி?

நான் கலைஞர் டி.வி.க்காக குறும்படம் பண்ணும்போதே அவர் பழக்கமானார். நல்ல நடிகர். இவரையே நம்ம படத்துக்கு கதா நாயகனாக போடலாம் என்று முடிவெடுத்தேன். அதுவுமில்லாமல் நான் பெரிய நடிகரிடம் போயிருந்தால் அந்த நடிகருக்காக நான் கதையை கொஞ்சம், கொஞ்சமாக மாற்ற வேண்டிய வரும். கடைசியில் படத்தில் கதாநாயகன் இருப்பார், என் கதை இருக்காது. வழக்கமான தமிழ் சினிமாவின் மாயையை சூதுகவ்வும் படத்தின் மூலமாக கட்டுடைத்திருக்கிறீர்கள். அதாவது கதாநாயகி இல்லாமல், காதல் இல்லாமல், வெட்டு, குத்து, கொலையில்லாமல் படம் பண்ணியிருக்கீங்க. இந்த தைரியம் உங்களுக்கு எப்படி வந்தது?

கலைஞர் டி.வி.க்காக நான் எடுத்த குறும்படமே கிட்டதட்ட இதே பார்முலாதான். அதை கொஞ்சம் விரிவான தளத்தில் சொல்லியிருக்கிறேன். மற்றபடி நீங்கள் சொல்வது போல வழக்கமான சினிமா மாயையை கட்டுடைக்கனும் என்ற நோக்கத்தில் இதை செய்யவில்லை. முதலில் கட்டுடைத்தல் என்றால் எனக்கு என்னன்னே தெரியாது. தமிழ் சினிமாவுக்கு வேண்டுமானால் இது புதுசா இருக்கலாம். உலக சினிமாவில் இது மாதிரியான திரைப்படங்கள் நிறைய வந்திருக்கிறது.



- பிலிம்நியூஸ் கிருஸ்ணன் -

என்னை பொறுத்தவரையில் நான் இயக்கும் படங்கள் ஏகிளாஸ், டீகிளாஸ், ஊகிளாஸ், என்றில்லாமல் கன்னியாகுமரியில் இருக்கும் கடைகோடி தமிழன் வரை ரசிக்கனும். அப்புறம் காதல் இந்த படத்திற்கு தேவையில்லை என்று முடிவெடுத்தேன். படத்தில் பெண்களே இல்லை என்ற நிலை இருக்கக் கூடாது என்றுதான் கற்பனையாக ஒரு பெண் கதாபாத்திரத்தை வைத்தேன். அதுவும் படத்திற்கு மிகப் பெரிய பலமாக அமைந்தது.

உங்களுடைய அடுத்த படம் என்ன மாதிரியானதாக இருக்கும்?

இன்னும் முடிவு பண்ணவில்லை. என்னுடைய அடுத்த படம் சூதுகவ்வும் விட இன்னும் சிறப்பானதாகவே இருக்கும்.

சூதுகவ்வும் படம் இவ்வளவு பெரிய வெற்றியடையும் என்று நீங்கள் எதிர்பார்த்தீர்களா?

படம் இயக்கும் போது இந்தப் படம் தப்பு பண்ணாது என்ற நம்பிக்கை எனக்கிருந்தது. ஆனால், இவ்வளவு பெரிய வெற்றியடையும் என்று நினைக்கவில்லை. இந்த அசூரத்தனமான வெற்றி எனக்கு ஆனந்தத்தை கொடுத்தாலும், உள்ளுக்குள் சின்ன பயத்தையும் ஏற்படுத்தியிருக்கிறது. என்பதுதான் உண்மை.



# Education

## Review Tutorials 13-10

**CHEMISTRY 11**

**A balloon burst when its volume reaches 50L. The volume of the balloon is 16L when it is filled with helium at STP. It is allowed to ascends the temperature decreases 0.5C for every 500m of altitude while the pressure also decreases by 1.24 k.Pas for each 1000m of altitude. How high does the balloon go before bursting.**

**PHYSICS 11**

**Kevin is cruising down Kennedy at 60km/h in his car. A set of fuzzy dice (mass 120g), hanging from the rear mirror. All of the sudden he slams on his brakes and brings the car to stop in 3seconds. What angle will the string from which the dice hanging make with the vertical during his uniform deceleration?**

**PHYSICS 12**

**A solid iron ball of mass 900 kg is used on a building site. The ball is suspended by a rope from a crane. The distance from the point of suspension to the centre of mass of the ball is 15 m.**

**(a) Calculate the tension in the rope when the ball hangs vertical and stationary.**

**(b) The ball is pulled back 20° from the vertical and then released.**

**(i) Calculate the speed of the ball just before impact.**

**(ii) Calculate the tension in the rope just before impact**

**(c) If the ball is brought to rest in 0.2 s., determine the maximum force $F_{max}$ exerted by the ball on the wall.**

**BIOLOGY 11**

**(1) Colour blindness is considered to be sex linked disease and males much more likely to be colour blind than females " Explain" why?**

**(2) In pea plants, purple flower is dominant over white flower. If a plant has purple flower how do you determine whether it is a pure purple or hybrid purple?**

**(3) Compare prokaryotic and eukaryotic cells.**

**BIOLOGY 12**

**(1) What are ,**

**(a) allosteric enzymes b) apoenzymes**

**c) holloenzymes d) prosthetic groups**

**e)zymogens**

## Answer Key : 139

**CHEMISTRY11**

$XO_3^{2-}$ is $CO_3^{2-}$

**CHEMISTRY IB/12**

1. (1) (a) Rate = k $[NO]^1 [Cl_2]^1$

(b)$3.8 \times 10^{-3}$ $mol^{-1}Ls^{-1}$

(ii) $\Delta H = -77.1kJ$

(ii) $\Delta S^{\Theta} = -121.3J$

(iii)increasing temperature do not affect the spontaneity of the reaction.

**BIOLOGY(Gr12)**

**Cyclic Photophosphorylation-** requires only PS-I, electron emitted by P700 is recycled back and no external source of electron is needed. It synthesizes only ATP. Oxygen is not evolved. It operates at low light intensity, less availability of $CO_2$ and under anaerobic conditions.

**Non-cyclic Photophosphorylation** -It requires PS-I and PS-II. It needs external electron donor. It forms ATP as well as $NADPH_2$. Oxygen is liberated due to photolysis of water.

**PHYSICS (11 &12)**

Initial velocity = 0 each case. Lets take the final velocities of P and Q are V and 2V and accelerations are $a_p$ and $a_q$; use $v_f^2 = v_i^2 + 2a\Delta d$ and find out $a_P$ &$a_Q$

Results $a_P = 4a_Q$ ; FOB for child P,

F net = m $a_P$ = m g sin 32; $a_P$ = g sin 32;

Therefore, $a_q$ = g sin 32/4

FOB for Q results, $F_N = m_g \cos 32$

$$\frac{mg\sin 32}{4} = mg\sin 32 - \mu_k . m_g . \cos 32 \; ; \quad \frac{\sin 32}{4} = \sin 32 - \mu_k . \cos 32$$

$\mu_k = 0.37$

**CALCULUS**

**Differentiate** $\cos^{-1}\left(\frac{3 + 5\cos x}{5 + 3\cos x}\right)$ ; *ans* $\left(\frac{4}{5 + 3\cos x}\right)$

*Answer key 139 - next issue*

**Contact: 647 341 3975**

Dr. A.Sri Krishnaraj PhD

**ask@ keentutoringcentre.com**

# சிந்தனை...

**30ஆம் பக்கத்தொடர்ச்சி**

லாம்.

உடல் மன இணைவில் இன்று 'யோகா' முன்னிலை வகிக்கின்றது. முதலில் சுவாசப் பயிற்சியில் தொடங்கி படிப்படியாக பல முறைகளில் யோகாவை செய்ய முடியும். ஒரே நேரத்தில் உடலையும் உள்ளத்தினை யும் இயக்குவதில் யோகா மிகவும் சக்திவாய்ந்தது. உள்ளக பார்வையையும் வெளியுலக பார்வையையும் செய்ய முடிகிறது. படிப்படியாக யோகாசன வடிவில் மாற முடியும். படிப்படியாக பிராணிகள் போன்று பல பயிற்சிகளை பெறவும் முடியும். ஒவ்வொரு அசைவிலும் ஒரு தொடர்புமுறை ஏற்பட வாய்ப்புண்டு. சுவாசம் நுரையீரல் விரிவுபடுத்துகின்றது. இதனால் இரத்த ஓட்டம் சீரடைகிறது. படிப்படியாக சுவாசத்தினை உள்ளே கூடிய நேரம் நிறுத்தி வெளிவிட முடியும். இதனால் முதுகெலும்பு மூலம் Cerebrospinal fluid (CSF) உருவாகும். படிப்படியாக தலைக்கும், உடல் முழுவதற்கும் இவை பரவும். உள்ளுறுப்புக்கள், எலும்புக் கூடு, தசைகள், பொருத்துக்கள், நரம்புகள் சுரப்பிகள் (Glands) என்பன உறுதியடை யும். எனவே யோகா இன்றைய உடல் உள ஆல்வில் முக்கியம் பெற்றுவருகிறது.

உடல் உள ஒன்றிணைப்பில் நடனம் இன்று பல ஆய்வுகளை தூண்டியுள்ளது. நடனம் புரிபவர் பல்வேறு உடல் பயிற்சிகளை ஒரே நேரத்தில் செய்கிறார். அழகியல் கலைகளில் ஒன்றாக பல்வேறு நடனங்கள் உலகெங்கிலும் உள்ள பரத நாட்டியம் முதல் பலே வரை பல்வேறு நடன வடிவங்கள் உள. ஆதிவாசிகள், பழங்குடி மக்கள் மாற்றமுறாத தங்கள் நடனத்தை தொடர்ந்தும் செய்கிறார்கள். பழக்கப் படுத்தப்பட்ட ஒழுங்குமுறையில் நடனங்கள் அமையும் போது ஞாபக சக்தி வலுப்படும். நடனம் நிகழும் போது பார்வையாளர்களது மனமும் மகிழ்ச்சியடையும். ஒரு மேடையில் பலர் பங்கு கொள்ளும் போது அவர்களுக்கிடையில் புரிதல் இடம் பெறுகிறது. பல்வேறு தொழில் நுட்பங்கள் இவர்களது நடனத்தில் இடம்பெறும். ஒவ்வொரு நிகழ்வும் குறிப்பிட்ட வேளையில் இடம்பெறும். இது ஒவ்வொருவருக்குமானது. பயிற்சிகள் மூலம் உணர்வுக்கலங்கள் புத்தாக்கம் பெறுகின்றன. பார்வையாளரின் கலர்களுக்கும் காதுகளுக்கும் விருந்தாகின்றன.

அமைதியாக ஓரிடத்தில் இருந்து பார்ப்போம். ஆரம்பத்தில் முடிவதில்லை. மூக்கினை உள்ளும் வெளியும் எடுத்து உணர்வை மாற்றிப் பார்த்தால் ஒரு மாற்றம் தெரியும். படிப்படியாக உள்ளே செல்வோம். விளிப்புடன் கூடிய நடவடிக்கை உள்ளே நடைபெறும். எமது உடலும் உள்ளமும் இணையும் நிலை தெரியவரும். ஒரு பொருத்தப்பாடு ஏற்படும். பௌத்தசமயத்திலும் புத்தரின் தியானம் இப்படிப்பட்ட தொன்றே. மகிழ்ச்சியும் அமைதியும் கொண்டுள்ள ஒரு தியான இருப்பு அது. தன்னையறியாமல் ஏற்படும் உள்ளுணர்வு பண்படும். இது போன்று இந்து சமயத்திலும் பல தியான முறைகள் உள்ளன. பதற்றம், வலி, குற்ற உணர்வு எல்லாம் நீங்க இவை உதவும். மனநிறைவுள்ள உடல் (Mindfullnes of body) எமக்குத் தோன்ற வழிபிறக்கும். Jonkabat Zinn என்ற அறிஞர் Coming to our senses healing ourselves and the wordl through mindfullness என்ற நூலில் 'மனமே எல்லாவற்றினையும் ஆட்சி செய்கிறது. உடலை விளிப்புற வைத்திருக் கிறது' என்கிறார். 1985 இல் Bonnie Bainbridge Cohen என்பவரது மாணவர்கள் the body mind centering

**தொடர்ச்சி 39ஆம் பக்கம்**

**50**

**PARTY HALL EVENT CENTRE MEETING PLACE**

**AVAILABLE FOR RENT**

***Anniversary, Birthday, Get-together, Office Meeting, School Meeting,*** புத்தக வெளியீடு, கலந்துரையாடல்... போன்றவை நடத்தக்கூடிய இடம் வாடகைக்கு உண்டு. ஏறக்குறைய ***50*** பேருக்கு போதுமானது. நிறைந்த வாகனத்தரிப்பு வசதிகள் உண்டு.

***GTA Square Mall (FINCH & MIDDLEFIELD***

**தொடர்புகளுக்கு: *416.917.6883***

# நமக்கு முக்கியம்...

32ஆம் பக்கத்தொடர்ச்சி

நிற்க!

இன்றைய இருபத்தோராம் நூற்றாண்டில், 'வாழ்க்கை என்றால் ஆயிரம் இருக்கும் வாசல் தோறும் வேதனை இருக்கும்' என்று கவிஞர் கண்ணதாசன் சொன்னவை நூற்றுக்கு நூறு வீதம் இயங்கியலாய் இருக்கும் சூழலில், நினைப்பதற்கும் யோசிப்பதற்கும், தீர்மானம் எடுப்பதற்கும் நேரமே கிடைக்காத இயந்திர ஓட்டமுடைய மனித வாழ்க்கையில் பாசம், நேசம், அன்பு, ஆதரவு, அரவணைப்பு என்பதெல்லாம் வெறும் வார்த்தைகளாக, காற்று வெளியில் கதைகளாக மிதக்கும் துர்ப்பாக்கிய நிலைமையில், வன்முறைகள், குண்டுகள், அவலங்கள், அகதிகள், ஆணவங்கள் என்ற புறச்சூழலின் வெக்கையும், வேதனைகளும், இதயத்தை வதைக்க உணர்வு பூர்வமான விவாதம் தேவையா? நடப்பதைக்கண்டு கொள்வோம். நடப்பது தான் நடக்கும் என்று சித்தன் போக்குச் சிவன் போக்காய் வாழலாமா? நமக்கும் நமது பாரம்பரியத்தினருக்கும் வழி தேடவேண்டாமா? வழிகாட்ட வேண்டாமா? 'சும்மாயிரு சொல்லற' என்பது தியானத்திற்கு முக்கியம் திகைப்புறும் வாழ்க்கைக்கு முக்கியமில்லை. அந்நியமானது.

நண்பா!

'தானாடா விட்டாலும் தன் தசையாடும்' என்பது உறவின் உணர்வாய் சொல்லப்பட்டது. உடுக்கை இழந்தவன் கைபோல் ஆங்கு இடுக்கண் களைவது நட்பு என்று திருவள்ளுவர், விரைந்தோடி உதவும் உணர்வினை இலக்கணப்படுத்தினார். நட்பும் உறவும் இரண்டு சக்கரங்கள் போன்றவை. வாழ்க்கை வண்டியை உருளச் செய்ய இரண்டுமே முக்கியமானவை தான் என்று வாழ்ந்து கெட்டு தாழ்ந்து உயர்ந்த அனுபவம் மிக்கப் பெரியவர் ஒருவர் சொன்னார். ஒருவர் உறவுக்கும் நட்புக்கும் மரியாதை கொடுத்து வாழப் பழகவேண்டும் என்று சிலர் கூறினார்கள். நல்ல பண்புகளின் மூலம் உறவினர்களிடம் நட்பை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். நண்பர்கள் தங்கள் உறவினர்கள் என்று எண்ணும்படியாகப் பாச நேசத்துடன் பழக வேண்டும் என்றார் ஒரு எழுத்தாளர்.

குடும்ப, சமுதாய உறவுகளுக்கும் அடுத்தபடியாக ஓர் உறவு இருக்கிறது. நான் ஏன் பிறந்தேன்! இவ்வுலகுக்கும் எனக்கும் உள்ள தொடர்பு உறவு யாது? அது விடயமாக நான் என்ன செய்திருக்கிறேன்? அதை எப்படி நான் வலுப்படுத்த முடியும்? என்பன போன்ற சிந்தனைகள் வாழ்வை அர்த்தமுள்ளதாக்குகிறது. நம் இலட்சியங்களுக்கு ஒரு தெளிவு கொடுக்கிறது என்கிறார் டாக்டர் எம். எஸ் உதயமூர்த்தி.

உறவு என்னும் தொடர்பில் நம்மை நாம் மதிக்கிறோமா? பேணுகிறோமா? நம்மை நமக்கே பிடித்திருக்கிறதா? நம்மை நாம் நேசிக்கிறோமா? என்பன போன்ற ஆரம்பக் கேள்விகள் பிரதானமானவை. இதனை அடுத்து நமது தாய், தந்தை, அண்ணன், தம்பி, அக்கா, தங்கச்சி, கணவன், மனைவி, உறவினர், ஊரவர்களோடு பாசப் பிணைப்போடு பழகுகிறோமா?

நமக்கு நண்பர்கள் உண்டா? பெண்களானால் நண்பிகள் உண்டா? அவர்களோடு நமது இணக்கமும் உறவும் எப்படி இருக்கிறது? நாம் அவர்களுக்கு உதவுகிறோமா? அவர்கள் நமக்கு உதவவேண்டும் என்ற எதிர்பார்ப்போடு மட்டும் பழகுகிறோமா? அவர்களுடைய துன்பத்தில் நம்முடைய ஆறுதல் வார்த்தை அல்லது நடவடிக்கை அவசர உதவி என்ற வகையில் நாம் என்ன செய்தோம்? நமக்கு முடியாத போது முடிந்த வரைக் கொண்டு உதவி செய்வித்தோமா?

தீர்மானத்தில் வாழ்ந்தால் முடிவு என்னவாகும்? இறந்த பின்பு நாமே நடந்து போய் காட்டில் படுத்து எரிய வேண்டி வரும். எரிப்பதற்கு, நெருப்பும் ஆட்களும் கிடைப்பார்களோ என்பதும் சந்தேகம் தான். ஏன் சிரிக்கிறாய் நண்பா? அழ வேண்டிய விடயம் இது.

இன்று மனித உறவுகள் மரத்துப் போயின. மனித நட்புகளும் நசிந்து போயின. நட்பும் உறவும் இடம்மாறி நாய் பூனைகளில் சஞ்சரிக்கின்றன. நாய் வயிரவரின் வாகனம். பூனை யார் வாகனம்? மரத்துப் போனதை மலரவைப்பதும், நசிந்து போனதை கசியவைப்பதும் கையில் இருக்கிறது? உறவுகள் இல்லாத அப்பாவிகளும், நட்புகள் இல்லாத பாவிகளும் என்ன



ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும் என்ற பழமொழி காட்டும் நிஜம் என்ன? நகை (சிரிப்பு) வளர்க்க வேண்டிய நாம் பகை வளர்த்து நட்டப்படலாமா? வியாபாரத்துக்கு மட்டும் தான் சிரிப்பு, வாழ்க்கைக்கு சிரிப்பு இல்லை என்று சிலர் வாய் மூடி முகம் இறுக்கி உலவுகிறார்களே! இவர்கள் வாழ்கிறார்களா? வசிக்கிறார்களா? வாழ்பவன் மனிதன். வசிப்பவன் மிருகம் என்று படித்தவை ஞாபகம் வருகிறதா?


தாயகத்தில் நம்மவர்கள் வளர்த்து பழக்கி விட்ட பாரம்பரியப் பண்புகளை புலம்பெயர்ந்து வாழும் இடத்திலும் நடைமுறைப்படுத்துகிறோமா? குடும்பச் சூழல், உறவு வட்டம், நண்பர்குழாம், ஊர்பற்று என்ற வழக்கங்கள் புலம் பெயர்ந்த தேசத்திலும் தொடர்வது நம் தேசம் நமது மக்கள் என்ற உணர்வுக்கு உதவுமல்லவா? நமது பிறந்த பூமியில் எத்தனையோ பிரச்சினைகளை, பிணக்குளை நமது முதியவர்கள் பெருந்தன்மையோடு அணுகித் தீர்த்து வைத்தும் இணக்கி வைத்தும் மகிழ்ந்த காலங்கள் பொற்காலங்கள ல்லவா? இளந்தலைமுறையினரை பெற்றோர்களைத் தவிர உறவினர்களும் நண்பர்களும் வழிப்படுத்திய வாழ்க்கை முறை! கண்காணித்த கரிசனை இங்கும் நடைமுறைக்கு வருவது நல்லதல்லவா?

இன்றைய வாழ்க்கைத் தேவைகளும், சிக்கல்களும், உறவுகளையோ, நட்பையோ பேணுவதற்கும் கொண்டாடி ஊடாடி மனநிலை மாற்றம் தோன்றுவதற்கு என்ன காரணம்? தாயும் பிள்ளையும் என்றாலும் வாயும் வயிறும் வேறு வேறு என்பது போன்று நாமும் நட்பும் உறவும் வேறு வேறு தான். உறவும் இல்லை பகையும் இல்லை ஒன்றுமே இல்லை. உள்ளதெல்லாம் உணவும், பணமும் தான் என்ற

செய்வது? இதுவும் ஒரு வகைப் பிரச்சினையல்லவா?

'அப்பன் நீ! அம்மை நீ! ஐயனும் நீ, அன்புடைய மாமனும், மாமியும் நீ! ஒப்புடைய மாதரும் ஒன்பொருளும் நீ! ஒரு குலமும், சுற்றமும் ஓர் ஊரும் நீ' என்று பாடிய அப்பரடிகளின் மனநிலை ஏழாம் நூற்றாண்டில் உறவு நட்புக் குறித்த சிந்தனையில் எந்த முடிவெடுத்திருக்கும்? உறவுகளுக்கும் நட்புகளுக்கும் இறைவா நீயே வந்து கொண்டாட்டத்தையும் ஊடாட்டத்தையும் கவனித்து வழிப்படுத்து என்ற கோரிக்கையாய் இருந்திருக்குமா? அல்லது நீயே எல்லாமாக வர வேண்டும். நீ படைத்த மனிதர்களுக்குள் இதயக் கருவி இருக்கிறது. அது மூச்சு விடவும் இரத்த ஓட்டத்துக்குமே உதவுகிறது. பாச நேசம் அன்பு இரக்கம் இதய தாகம் என்பதெல்லாம் வறண்டு போன உறுப்பாக மட்டுமே இயங்குகிறது என்ற ஏக்கமாக இருந்திருக்குமோ? எப்படி நாம் முடிவு செய்வது? முனைந்து பார். முடியாவிட்டால் எனக்கு எழுது. பலரையும் அழைத்து ஒரு பட்டிமன்றம் வைத்து அலசி ஆராய்ந்து பார்ப்போம்.

வேறு என்ன?
பிறபின்பு



- புலவர். ஈழத்துச்சிவானந்தன் -
(நிறுவனர் ஆதி அருள்நெறி மன்றம் - கனடா)

# சோற்றைக் குறைத்திடச் சோகம் தீர்ந்திடும்!



- ஆக்கம் அருட்கவி ஞானகணேசன்

பானை வயிறும் பன்றிபோல் உருவமும்
ஆனை நடையும் அடிக்கடி நோயும்
மோனை ஏனடி? முழுதும் சோறடி
ஊனை மாற்றிட உருவமும் மாறுமே!
தட்டம் நிறைத்து தாளிதக் கறியுடன்
வெட்டுறோம் சோற்றை வெகுவாய்த் தினந்தினம்
முட்டையும் இறைச்சியும் மீனுடன் பலதும்
கொட்டியே வளர்க்கிறோம் கோதாரி வயிற்றையே!
கட்டுடல் பெருத்து கழுத்தொடு வயிறும்
கெட்டியாய் இருந்த காலும் வீங்கி
இட்டும் முட்டும் இடுப்பு வலியொடு
பெட்டைகள் இருப்பின் பார்ப்பரோ பெடியள்?
பூதம் போலப் பொலிந்திட வைத்திடும்
பாதம் வீங்கிப் பருத்திட வைத்திடும்
ஊதி உடலின் உருவமும் மாற்றிடும்
சாதம் குறைத்திட சுகங்கள் பெருகுமே!
சோறு தருகுது சக்கரை வியாதியை
சோறே தருகுது சோர்வொடு பருமனை
சோற்றைக் குவித்து சோகம் பெருக்கா(து)
சோற்றைக் குறைத்துச் சுகத்தொடு வாழ்வமே!

# உதவிக் கரங்கள் நீட்டுங்கள்! திருப்பணி தொடரும் அவுஸ்திரேலியாவில் முருகன் கோயிலும் தமிழ்க்கோயிலும்

அன்பான கனடாவாழ் தமிழ் மக்களே!

நாம் புலம் பெயர்ந்தோம், நிலம் பெயர்ந்தோம். இழப்புகள் அனேகம். இறந்தவர்களும் அனேகம். பிறநாடுகள் உயிரோடு இருப்பவர்கள் தமது பாரம்பரியத்தைக் காப்பாற்ற வேண்டும். தமிழ் மொழியை சைவ சமயத்தை தமிழ்ப் பண்பை புதிய தலைமுறையினருக்கு அறிமுகப்படுத்தி கற்றுக் கொடுத்து நமது முகவரியை அடையாளங்களை காப்பாற்ற வேண்டும்.

இதற்கான முயற்சியில் அவுஸ்திரேலியா கோல்ட் கோஸ்ட் இருந்து கலாச்சார சங்கத்தினைத் தொடங்கி ஒரு முருகன் ஆலயத்தையும் தமிழ் கற்பிக்கும் பள்ளிக் கூடத்தையும் தொடங்க இருக்கிறோம். இதற்கான பணத்தேவை 20 இலட்சம் டொலர் என கணக்கிடப்பட்டுள்ளது. அவுஸ்திரேலிய இந்துக்களின் எண்ணிக்கை குறைவாக இருந்த போதிலும் சுமார் ஒன்றரை இலட்சம் டொலர் வரை சேர்ந்துள்ளோம். இன்னும் இரண்டரை இலட்சம் டொலர் தருவதாக இங்குள்ளவர்கள் உறுதியளித்துள்ளார்கள்.

எங்கள் மாநில அரசாங்கம் எமக்கு முழு ஆதரவாய் இருக்கிறது. ஆனால் பண உதவி என்பது பொருளாதார நெருக்கடியில் அரசு திணறுவதால் முடியாத காரியம் என்று கூறி விட்டது. எமது மக்களே எமது வருங்காலச் சந்ததியினரின் படிப்புக்கும், பண்புக்கும், பக்திக்கும் கலாச்சாரத்திற்கும் காவலாளிகளாய் இருக்க வேண்டிய பொறுப்பைச் சுமக்க வேண்டியுள்ளது. இதனாலேயே எமது உறவுகள் ஊரவர் இனத்தவர் மொழியினர் என்று வாழுகின்ற கனடா தேசத்தில் இருக்கும் உங்களிடம் உரிமையோடு கை நீட்ட வேண்டும் என்று தீர்மானித்தோம்.

எங்கள் நகரசபை பெறுமதி மிக்க காணியை இலவசமாகத் தந்துள்ளது. வருகின்ற ஆனி மாதத்துக்குள் கோவில் கட்டுவதற்கும் கலாச்சார மன்றம் அமைப்பதற்கும் தேவையான பணத்தை அவர்களுக்கு காட்டினாலேயே காணிக்குரிய பத்திரத்தை எம்மிடம் தருவார்கள். இதற்காகவே இந்த அன்பான அவசரமான வேண்டுகோளை விடுகின்றோம்.

நீங்கள் விரும்பினால் எங்கள் நிர்வாகசபை அங்கத்தவர்களை தொலைபேசியில் தொடர்புகொண்டு மேலதிக விபரங்களை அறிந்து கொள்ளலாம். எங்கள் சங்கச் செயலாளர் கனடா நாட்டுப்பிரஜை என்பது உங்களுக்குப் பெருமையாகும். இவர் கோல்ட் கோஸ்ட்டில் தமிழ் பாடசாலை ஒன்றை உருவாக்க முன்னின்று உழைத்தவர். இவர் June நடுப்பகுதியில் உங்களை நேரில் சந்தித்து கலந்துரை யாடுவார். இவரை 416.286.3247 என்ற தொலைபேசி இலக்கத்தில் தொடர்பு கொள்ளலாம். நீங்கள் goldcosthindu.org என்ற வலையத்தளத்திலும் முகப் புத்தகத்திலும் (Facebook) மன்றத்தின் செய்திகளை அறிந்து கொள்ளலாம். அத்துடன் Donate என்ற பொத்தானை வலையத்தளத்தில் அழைத்து கடன் அட்டை (Credit card) மூலம் உங்களின் அன்பளிப்பை செலுத்தி விட்டு gehea@gmail.com என்ற மின் அஞ்சல் முகவரியில் தொடர்பு கொண்டு பற்றுச்சீட்டைப் பெற்றுக்கொள்ளலாம். வரிச்சலுகையும் உண்டு.

உறவுகளே!

இலங்கையிலிருந்து அகதிகளாக கப்பலில் வந்த ஒரு தொகையினர் கோல்ட் கோஸ்ட்டில் விடப்பட்டுள்ளார்கள். இவர்களுக்கு தனிப்பட்ட முறையில் அன்பர்கள் தங்களால் முடிந்த அளவு உதவி செய்தாலும் ஒரு சமூக நல அமைப்போ ஆலயமோ இல்லாதது பெரும் குறையாகும். நாம் அமைக்கும் ஆலயமும் அமைப்பும் அவர்களுக்கு பலவிதமான நன்மைகளைப் பெற்றுக் கொடுக்கும்.

எம் மக்களை எமது பிள்ளைகளை எமது மொழியை எமது சமயத்தை பண்பாட்டினை நாமே காப்பாற்ற வேண்டியது நமது முதல் கடமை என்பதை நீங்கள் அறிவீர்கள். 'ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன் பிள்ளை தானே வளரும், வாழும்' என்ற பொன்மொழி நாம் அறிந்த வாசகமல்லவா?

ஆவன செய்யுங்கள்! அள்ளித்தாருங்கள்! ஆண்டவன் அருளால் உங்கள் குடும்பமும் பிள்ளைகளும் நல்ல வாழ்வு வாழ்வர். கொடுப்பவருக்கு குறைவாராது. குறைவில்லாத நிறைவைப் பெறுங்கள்.

தொடர்புகளுக்கு - ***617.557.15808 / 617.886.47354 / 617.569.68530 614.315.79979 / 614.138.45274***

# அமைதிக்கான தயார் நிலை

## *Ready for Peace*

உள்ளத்தைத்தொடும் சந்தர்ப்பங்களுக்காகக் காத்திருப்பதற்கும் அவற்றிற்காகத் தயாராக இருப்பதற்கும் இடையில் நுண்ணியமான வித்தியாசமே உள்ளதென சர்வதேசரீதியில் அமைதியின் தூதுவராகப் பெயர்பெற்ற மஹராஜி, என கௌரவ பெயரால் அழைக்கப்படும் பிரேம் ராவத் அவர்கள் கூறுகின்றார்.

> **Words of Peace**
> மகராஜி பற்றி மேலும் அறிந்து கொள்ள:
> 416.431.5000
> www.wopg.org / www.tprf.org

'மக்கள் டாக்டர்களின் அலுவலகத்தில் இருப்பதைப் பார்த்திருக்கின்றீர்களா? என அவர் கேட்கின்றார். அவர்கள் காத்திருப்பார்கள். பருவ இதழ்களை வாசித்துக்கொண்டு இருப்பார்கள். அதேநேரம் அவர்களின் மனம் நான் உயிர் வாழ்வேனா? நான் இறக்கப்போகின்றேனா? இது வலியை ஏற்படுத்துமா என நூற்றுக்கணக்கான மைல்களுக்கு அப்பால் பிரயாணம் செய்துகொண்டிருக்கும்.

இதற்கு நேர்மாறாக 'இயற்கையில் எதுவுமே காத்திருப்பதில்லை. அது தயாராகவுள்ளது. ஜனவரி மாதத்தில் மூன்று நாட்கள் உஷ்ணமான காலநிலை இருந்தால் தாவரங்களில் மொட்டுக்கள் விரியத் தொடங்கும். அவர்கள் இன்னமும் மார்ச் மாதம் ஆகவில்லையெனக் கூறப்போவ தில்லை. இல்லை அவர்கள் தயாராக இருக்கின்றார்கள். ஏற்றுக்கொள்வதற்குத் தயாராக இருக்கின்றார்கள். அதன் ஒரு பகுதியாக இருக்க தயாராக உள்ளார்கள்.'

அது ஒரு முக்கியமான வேறுபாடாகும், என மஹராஜி கூறுகின்றார். ஏனெனில் வாழ்வு என்பதே ஒரு அற்புதமான சந்தர்ப்பமாகும். உயிருடன் இருப்பதால் மட்டுமே ஒவ்வொருவருக்கும் அந்த அமைதியை அனுபவிக்கும் சாத்தியம் உள்ளது. ஆனால் அதற்கு வெறுமனே காத்திருக்காமல் உள்ளுணர்வுடன் கூடிய தயார் நிலை தேவைப்படுகின்றது என்னும் செய்தியுடன் அவர் உலகைச் சுற்றிப் பல தடவைகள் பிரயாணம் செய்துள்ளார்.

அந்தத் தயார் நிலைதான் பாலைவனத்தைப் பூக்க வைக்கின்றது என மஹராஜி கூறுகின்றார்.

'பாலைவனங்கள் பற்றிய விவரணப் படம் ஒன்றை நான் பார்த்துக்கொண்டிருந்தேன்' என அவர் கூறுகின்றார். 'அது மிகவும் அற்புதமாக இருந்தது. விசேசமாக வரண்டுபோன வாவிகளின் கரைகள், உண்மையாகவே அவை மிக மோசமாக வரட்சியடையத் தொடங்கும் போது நிலம் வெடிக்கத் தொடங்கும். இந்த வெடிப்பிற்கான நோக்கம் என்ன? மழைத்துளிகள் வரும்போது அந்த வெடிப்புக்கள் அங்கு இல்லாவிட்டால் முழு மழை நீரும் வடிந்து சென்றுவிடும். அந்த வெடிப்புக்கள் அந்த மழை நீரை உள்ளே அடிவரை, மிக மிக ஆழத்திற்குப் போக விடுகின்றது. தாகத்தின் ஆழமும் அதுதான். 'வா நான் தயாராக உள்ளேன்' என்று அந்த நிலம் கூறுகின்றது.

'அப்போது அது ஆரம்பிக்கின்றது. மின்னல், இடி என்பன தாகத்தைத் தீர்க்கும் அந்த தண்ணீரின் வருகைக்கான முன்னறிவித்தல்கள். எப்படிப்பட்டதொரு பிரமாண்டமான அறிவிப்பு. எப்படியானதொரு காட்சி. காற்றானது ஈரப்பதனிலையால் நிரம்புகின்றது. அதன் பின்னர் ஒன்றன் பின் ஒன்றாக பெரிய தடித்த மழைத்துளிகள்.

நீண்டகாலமாக தான் காத்திருந்த தூய அற்புதமான தண்ணீரினால் நனைந்த மண்ணின் வாசனையால் காற்றானது நிரம்பியுள்ளது. மேலும் காத்திருக்கத் தேவை யில்லை. அந்தக் கணத்தில், அது முடிந்து விட்டதுடன் அது நிரம்பி வழிய ஆரம்பித்து விட்டது. இயற்கையில் இந்த உலகம் காத்திருக்கப்போவதில்லை. அது தயாராகி விடும். அது தயாராகி விட்டது. காத்திருக்க வில்லை. சமுத்திரம் தயாராகவுள்ளதா? ஆம். சூரியனும் நீரவியும் தயாராக உள்ளனவா? ஆம். மேகக் கூட்டமும் காற்றும் தயாராக உள்ளதா? ஆம். மழை தயாராக உள்ளது, சில பாலைவனங்களில் கிடக்கும் சிறிய வித்துக்கள், எங்கோ ஒரு நிலத்தில் கிடக்கும் வித்துக்கள். அவையும் தயாராக உள்ளன. எப்பொழுதும் எவ்விடத்திலும். அங்கே நிறைவு இருக்கும்.

நீங்கள் காத்திருக்கின்றீர்களா அல்லது நீங்கள் தயாராக இருக்கிறீர்களா என உங்களை நீங்கள் கேட்டுக்கொள்ளுங்கள். ஏனெனில் நீங்கள் காத்திருந்தால், அது நடைபெறப் போவதில்லை. ஆனால் நீங்கள் தயாராக இருந்தால் அது நடைபெறும். அது எப்பொழுதும் நடைபெறும்.

உங்கள் உள்ளே வரும் இந்த மூச்சுத்தான் உங்களின் துளி. எல்லாக் கொடைகளிலும் மேலான கொடை. அது உங்களுக்குள் வந்து, உங்களை உயிரோட்டமாக்குகின்றது. நீங்கள் காத்திருக்கின்றீர்களா? இல்லை நீங்கள் தயாராக இருக்கின்றீர்களா? காத்திருக்க வேண்டாம். இது மிக வேகமானது. இது ஒரு துளி நீரைவிட வேகமானது. இதற்குத் தேவையானது கவனம்தான்'.

தயார்நிலை என்பது கவனக் குவிப்புடன் இருப்பதுதான் என மஹராஜி கூறுகின்றார்.

'ஒரு கலன் தேனுக்காக ஒரு தேனீ ஒன்றினால் உலகைச் சுற்றி வர முடியும் என மக்கள் கூறுவதுண்டு' என அவர் கூறுகின்றார். அது நல்லது. ஒரு கலன் பொருளுக்காக நாங்கள் உலகைச் சுற்றி வரத்தேவையில்லை. தேனின் உற்பத்தியானது முற்று முழுக்க இயற்கையானது. அது சுய விருப்பத்தின் பேரில் பூக்கள் கொடுக்க விரும்பும் ஒன்று. அப்போதுதான் தேனீக்கள் வரும்.

'தேனீயானது தேனைச் சேகரிப்பதில்தான் தன் முழுக் கவனத்தையும் செலுத்தும் அதைத் தவிர வேறு எதிலும் அது கவனம் செலுத்தாது. அது மலரில் இருந்து மலருக்குப் போய்க்கொண்டேயிருக்கும். எப்படிப்பட்டதொரு நிகழ்ச்சி நிரல். எப்படிப்பட்ட திட்டம். அது தொடர்ந்து அதைச் செய்துகொண்டிருக்கின்றது. ஒரு பூவில் எதுவும் கிடைக்காவிட்டால் அது இன்னுமொரு பூவிற்குச் செல்லும். அந்தப் பூ மீளச் சீர் ஆவதற்கு சிறிது நேரத்தைக் கொடுத்து அது வேறொரு இடத்திற்குச் செல்லும் பின்னர் மீண்டும் அங்கு ஏதாவது உள்ளதா என்று பார்ப்பதற்கு அது திரும்பி வரும்.

'இதை எந்தவிதமான முறைப்பாடும் இல்லாமல் அது செய்கின்றது. இந்த நாள் இள வயதினர் சொல்வதை என்னால் கற்பனை செய்து பார்க்கமுடியும். இது போரடிக்கின்றது. நான் இதைச் சும்மா செய்தேன். அப்படியல்லவா? இல்லை. அந்தத் தேனீக்கள் மிகுந்த கவனக் குவிப்புடன் உள்ளன. கவனக் குவிப்பு என்பது அதுதான்.

'கவனக் குவிப்புடன் இருங்கள். உள்ளுணர்வுடன் இருங்கள். மிக முக்கியமாக இந்த வாழ்வின் ஒவ்வொரு கணத்தையும் ஆனந்தியுங்கள்.

# சிந்தனை...

association ஐ என்ற நிறுவனத்தை உருவாக்கினர். இவர்களது இந்த நிலையத்தில் நடன கலைஞர்கள் நடிகர்கள், விளையாட்டு வீரர்கள், பெற்றோர்கள், சுகாதார சேவையாளர்கள் மாற்றுத்திறனாளிகள், பயிற்சியாளர்கள், ஆசிரியர்கள், ஓவியர்கள், கல்வியாளர்கள் என பலர் இணைந்து பயிற்சி பெற்றுவருகின்றனர். மனமும் உடலும் தொடர்புறும் நிலைகள் பற்றி பல அறிக்கைகள் வெளிவந்துள்ளன.

ஒவ்வொரு நாளும் நாம் நகர்வது எம்முடைய எண்ணங்களிலேயே தங்கியுள்ளது. புதுப்புது அனுபவங்கள் எமது மூளையை மீள மீள அமைக்கின்றன. எமது புலக்காட்சிகளும் கூடவே சேர்ந்து கொள்கின்றன. எந்தவிதத்தில் பார்த்தாலும் ஒரு நாணயத்தின் இருபக்கங்கள் போன்று உடல் உள ஒன்றிணைவு (Body mind integration) தொடர்ந்தும் நடைபெறுகிறது.








Pre-Approvals | Purchases | Renewals | Refinances | New to Canada



**Subo Thevarajah, AMP**

MORTGAGES

SUBOSHAN.COM TD

416.627.2222

---

Every Story has a different Rate
What's Your's
Solution for every Mortgages

BonaFide

· New Mortagages · Refinance · First & Second Mortgages



New to Canada, Mortgage Switch, Self Employed
Pre-approvals, Residential & Commercial

**Thayalan Gobalakrishnan**
Mortgage Agent (GTA) Lic No:M12001612

Cell: 416.575.3211 / Fax:1.888.545.0462
E-Mail: thaya.gobal@gmail.com

தயாளன் கோபாலகிருஷ்ணன்

Call me for any Mortgage Financing Questions?

---

உங்களுக்கு ஒளிமயமான வீடு எதிர்காலத்தில் அமைந்திட என்னை அழையுங்கள்

**SASI CHELVARATNAM**
*Sales Representative*



Direct: 416.725.1125 / 416.858.4828
Bus : 416.321.6969
HomeLife / GTA Realty Inc., Real Estate Brokerage*
5215 Finch Ave. E, #201 Scarborough ON M1S OC2
*Independently Owned & Operated

---

"Let me help you make the right choice"

**Schuren Sriskandarajah** B.A.
Sales Representative



HomeLife/Future Realty Inc., Brokerage*
7 Eastvale Drive, Markham Ontario L3S 4N8

SCHUREN.CA • 416.333.9393

---



Low Mortgage Rates

TD **Canada Trust**

Supen Subramaniyam (Manager, Residential Mortgage)

416-844-8692 1-888-809-9154
supenthiran.subramaniam@td.com

ADVICE WHEREVER WHENEVER

Banking can be this comfortable

கனடாவின் முதன்மை வணிக நிறுவனமான **TD Canada Trust** வங்கியில் அனுபவ முதிர்ச்சியுடன் அடைமானக் கடன் வசதிகள் பெற்றுக் கொள்வதற்கும் அனைத்து நிதி தேவைகளுக்கான ஆலோசனைகளையும் உதவிகளையும் பெற்றுக் கொள்வதற்கும் அழையுங்கள்

Buying Home Home Equity Line of Credit
Consolitation Existing Debts Refinancing
Switching your mortgage From another financial institute

---

## RealEstate / Mortgage / Condo Investments


RE/MAX Vision Realty Inc. Brokerage



**A. Anton Jeeva** B.Eng
**416.575.5055**
**Hall Of Fame & Platinum Award Winner**

Office: 416.321.2228
E-mail: anton.jeeva@gmail.com,
Web: newcondoproject.ca
2210 Markham Rd., #1, Toronto, ON M1B 5V6
*Independently owned and operated

**SCAR.GOLG & KINGSTON**



3 Bedroom house for sale
3 W/R.
Price: $439,900

**MARKHAM & SHEPPARD**



3 Bedroom T. house for sale
3 W/R.
Price: $389,900

**WESTNEY & WILLIAMSON**



4 Bedroom house for sale
4 W/R.
Price: $599,990

**MCCOWAN & HWY 401**




2 Bedroom condo. for sale. 2 W/R.
Price: $229,000

**KEELE & MAJORMAC**



4 Bedroom house for sale
3 W/R.
Price: $594,900

**DONMILLS & EGLINTON**



2 + 1 Bedroom condo for sale. 1 W/R.
Price: $209,000

---

**Free Real Estate Class - Call: 416.321.6969**

"கனவு உங்களுடையது பொறுப்பு என்னுடையது"

REAL ESTATE List Buy Sell

**TOP 5%**
SALES REPRESENTATIVES IN CANADA

CHAIRMAN'S CLUB AWARD WINNER 2012



HomeLife
GTA Realty Inc., Brokerage
Independently Owned and Operated

**Raj Paramasamy** Sales Representative
**416-587-1619**
raj.paramasamy@hotmail.com

Guaranteed Result

---

## AUTO + HOME = BIG SAVINGS

**Auto Insurance, Business Insurance, Home Insurance, Renter Insurance, Life Insurance**

Office Hours:
Mon - Fri 9:30am to 9:30pm
Saturday 11:00am to 5:30pm
After hours by Appointment
http://www.insureontario.ca

State Farm Insurance

LIKE A GOOD NEIGHBOUR STATE FARM IS THERE
Providing Insurance and Financial Services

State Farm • Head Office, Aurora, Ontario • statefarm.ca™

Li.chen.m8zn@statefarm.com

1200 Markham Road, Suite#123, Scarborough, ON M1H 3C3
(Corner of Markham & Ellesmere)



**Li Chen, Agent**
**Call: 416.431.680**

---

விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு
www.vlambaram.com www.tamilvanakkam.com

---

## Sales Reps. Welcome

For All your Real Estate & Investments Needs!

**Raja M. Mahendran,** P. Eng.
(Broker / Owner)
* INDEPENDENTLY OWNED AND OPERATED



**HomeLife/GTA Realty Inc.** Brokerage *
5215 Finch Ave E, #203 Toronto, ON
Tel.: **416.321.6969**